Vol.3, Issue 3 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

ஆகஸ்ட் 2020

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

2013ம் வருடம்
ஃபின்லாந்தின்
தலைநகரம்
ஹெல்சிங்கியிலிருந்து
ஒரு காட்சி.

புகைப்படம்:
ரஷீதா பகத்

உள்ளே

10 இறால் தொழில்முனைவோர் பெண்களுக்கு உதவும் RC காக்கினாடா

கிராமப் பெண்களுக்கு வருவாயை அளிக்கிற உப்பு சேர்த்த, சுட்ட இறாலைத் தயாரிக்கும் கடினமான முறையை மேம்படுத்திய சங்கம்.

14 மராத்வாடா கிராமங்களில் நீர் நெருக்கடியைப் போக்கிய புணே ரோட்டரியன்கள்

டாடா டெக்னாலஜீஸுடன் இணைந்து அப்பகுதியில் சில குறிப்பிடக்கூடிய நீர்த் திட்டங்களை நிறைவேற்றும் RC புணே ஃபார் ஈஸ்ட்.

22 PRIP மாட் கபாரஸ் அவர்களுக்கு இரங்கல்

ஜூலை 15ல் இறந்த RI முன்னாள் தலைவர் மாட் கபாரஸுக்கு அஞ்சலி செலுத்தும் ரோட்டரி தலைவர்கள்.

30 இனவாதத்துக்கு எதிராக உரக்கக் குரல் கொடுங்கள்: நாக்

RI மெய்நிகர் மாநாட்டில், RI தலைவர் ஹோல்கர் நாக், TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் ஆகியோர் இந்த ஆண்டு மாவட்ட, சங்கத் தலைவர்களுடன் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

36 பசுமை பணியில் ரோட்டரி

இந்தியாவின் சில ரோட்டரி சங்கங்கள் முன்னெடுத்துள்ள மரம் நடல் திட்டங்கள் புதிய கவனப் பகுதியைத் தூண்டுகின்றன.

44 பங்களாதேஷில் ரோட்டரியின் கோவிட் எதிர்ப்பு பணி

வங்காள தேச ரோட்டரியன்களுடைய கோவிட் உதவி நடவடிக்கைகள்: ஓர் அறிமுகம்.

56 சுவிட்சர்லாந்தில் சீஸ் தயாரிப்பும், மாட்டுச் சவாரியும்!

ஸ்விட்சர்லாந்தில் ஓர் இயற்கைப் பண்ணையில் சில மகிழ்ச்சியான துணிகரச் செயல்களின் நினைவுகூரல்.

64 ஆளுநர்களுடன் சந்திப்பு

உங்கள் மாவட்டத் தலைவரையும் உங்கள் மாவட்டத்துக்கான அவருடைய திட்டங்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

அட்டையில்: வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் RC காக்கிநாடா-வின் முயற்சியால் பலன் பெற்ற ஒருவர்.

மிக உயர்ந்த தாராள மனப்பான்மை

கமலம்மாவின் மிக உயர்ந்த தாராள மனப்பான்மையைப்பற்றிய அட்டைப்படமும் கட்டுரையும் மிகச் சிறந்தவை, ஊக்கம் அளிப்பவை. கோவிடுக்குப் பிந்தைய உலகம், ரோட்டரிச் செயல்பாடுகளைப்பற்றிய பதிவுகள், PRIP ஃப்ராங்க் டெவ்லினுடைய அஞ்சலி போன்ற கட்டுரைகள் பாராட்டவேண்டியவை. மத்திய அமைச்சர்கள் நிதின் கட்காரி, தர்மேந்திரப் பிரதான் ஆகியோருடனான ஜூம் கூட்டங்களில் நான் கலந்து கொண்டேன், இந்தியாவில் ரோட்டரியின் முன்னேற்றங்களையும், சமூகச் சேவைகளுக்காக ரோட்டரி இந்திய அரசுடன் இணைந்து செயல்பட விரும்புவதையும் இவை காட்டுகின்றன.

C R நம்பியார்
RC பய்யனூர் — D 3202

ஜூன் இதழின் அட்டைப்படத்தில் கமலம்மா அவர்கள் இடம் பெற்றது மிகச் சிறப்பு. பசியோடு உள்ளவர்களுக்கு உணவளிப்பதற்காகச் சிறிய தொகையை வழங்கினாலும் ஒருவருக்குக் கிடைக்கிற மன நிறைவை அவருடைய முகம் காண்பிக்கிறது. நான் RI மெய்நிகர் மாநாட்டில் கலந்துகொண்டேன், RI தலைவர் மார்க் மலோனியின் கவர்ந்திழுக்கும் பேச்சைக் கேட்டேன். கோவிடுக்கு பிந்தைய உலகத்தில் அணிவகுத்து முன்னேறவேண்டும் என்று RI இயக்குநர்கள் இருவரும் நம்மை ஊக்குவித்துள்ளார்கள்.

ரஷீதா பகத்தின் கோவிடுக்குப் பிந்தைய உலகம் கட்டுரை மிகச் சிறந்தது, நாம் எதிர்நோக்குகின்ற சிரமங்கள், சவால்களை விளக்குகிறது. ரோட்டரி பேரிடர் எதிர்வினை நிதியானது எல்லா இடங்களிலும் கோவிட் நோய்ப் பரவலை எதிர்ப்பதற்காகச் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதுபற்றிப் படிக்கும்போது நான் மகிழ்கிறேன். RI முன்னாள் தலைவர் ஃப்ராங்க் டெவ்லினுடைய மறைவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கு இதயம் நிறைந்த அனுதாபங்கள்.

இரும்பு மனிதரான ஒரு சங்கத் தலைவர் ஓர் ஆர்வமூட்டும் கட்டுரை, எதிர்வரும் இருண்ட நாட்களில் ரோட்டரியை முன்னின்று வழிநடத்துவதற்கு நிகேத் தோஷியைப்போல் ஆற்றல் மிக்க இளம் தலைவர்கள் நமக்குத் தேவை. ஜூன் இதழ் முழுவதும் தகவல்கள், ஆர்வமூட்டும் புகைப்படங்கள், கட்டுரைகளால் நிரம்பியுள்ளது. பாராட்டவேண்டிய பணி, ஆசிரியர் குழுவுக்கு நல்வாழ்த்துகள்.

ஃபிலிப் முலப்போன் M T,
RC திருவனந்தபுரம் புறநகர் — D 3211

மிகச் சிறந்த ஜூலை இதழ்

ஒரு புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கியுள்ளது. ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கும், மிகச் சிறந்த உயரங்களை எட்டும் என்கிறார் RI தலைவர் ஹோல்கர் நாக். அட்டைப்படக் கட்டுரை ஆர்வமூட்டியது, AKS இந்த ஆண்டில் 100 புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது, மற்றும் கோவிட்-19ஐ எதிர்ப் பதற்காக அரசுடன் பணி யாற்றும் இலங்கை ரோட்டரியன்கள் போன்ற கட்டுரைகளும் சிறப்பாக அமைந்தன. ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய ஆற்று மீட்டமைப்பு திட்டத்தைச் செயல்படுத்தும் ரோட்டரி-UNEP என்ற கட்டுரை, ஆப்பிரிக்காவின் ஒரு முக்கியமான திட்டத்தை விளக்குகிறது, உலகில் நன்னீர் அமைப்புகளைக் காக்கவேண்டியதன் தேவையைப் பேசுகிறது. ஒரு சேரிப்பகுதியை மாற்றியமைத்தல் என்ற கட்டுரையும் படிக்கச் சுவையாக இருந்தது.

Dr அருண் ஓம்மென்
RC கொச்சின் வெஸ்ட் — D 3201

RI தலைவர் ஹோல்கர் நாக்-கைப்பற்றிய கட்டுரை அவருடைய வாழ்க்கை, குடும்பத்தைப்பற்றிய உள் தகவல்களை நன்றாக விளக்கியது. மகிழ்ச்சியை விரும்புகிற, திறந்த மனம் கொண்ட அவருடைய ஆளுமையைப்பற்றி எங்களுக்கு எடுத் துரைத்தது. சர் க்ளெம் பற்றி PRIP ராஜேந்திர சாபூ ஓர் ஊக்கமளிக்கும் கட்டுரையை எழுதி யுள்ளார். நம்முடைய உலகுக்கும், 3-H கருத்துக்கும், உலகிலிருந்து இளம் பிள்ளைவாதத்தை நீக்கும் ரோட்டரியுடைய போருக்கும் அவருடைய பங்களிப்பைச் சிறப் பாக விவரித்துள்ளார். ரெனெளஃப் ஓர் உண்மையான, முழுமை யான ரோட்டரியன், ஒரு லட்சிய பிம்பம்.

இந்தக் கடினமான நேரத்தில் இதழைக் கொண்டு வருவதற்காக இந்தக் குழு மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறது.

Dr ஜெயசேகரன் V P
RC பய்யனூர் — D 3202

நல்ல கட்டுரை

RC ஆலப்புழை சங்கத்தின் மனிதத் தன்மைத் திட்டங்களையும், 70 ஆண்டுகளுக்கும் மேலாக 3,700 இதழ்களைக் கொண்டு வந்துள்ள சங்கத் தகவல் அறிக்கையைப்பற்றியும்

தெளிவாக விவரித்த RC ஆலப்புழைக்கு 70 வயது என்ற கட்டுரைக் காக மிகவும் நன்றி. ஆனால், நான் இந்தச் சங்கத்தில் 44 ஆண்டு களாக இருக்கிறேன், நீங்கள் அதை 25 எனக் குறிப்பிட்டுவிட்டீர்கள்.

டோமி ஈப்பென்
RC ஆலப்புழை — D 3211

மாறுபட்ட இதழ்

இந்த கடினமான, காலகட்டங்களிலும் ரோட்டரி நியூஸ் இதழைச் சந்தாதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கொண்டுவருவதற்காக நீங்களும் உங்கள் குழுவும் செய்கிற முயற்சிகளை, பாராட்டுகிறேன்.

இந்தக் கடினமான நேரங்களின்போது, சாதாரணமான சங்க உறுப் பினர்களில் தொடங்கி உலகெங்குமுள்ள நம்முடைய மதிப்புக்குரிய தலைவர்கள் வரை அனைத்து ரோட்டரியன் களும் நம்முடைய குறிக்கோளான தனக்கு மேல் சேவை என்பதைச் செயலில் காண்பித்து நிரூபித்துள்ளார்கள். இந்தக் கடினமான நேரத்தில், "ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது" என்பதை நாம் நிரூபித்துள்ளோம்! ஆகஸ்ட் 2020ல் ரோட்டரி செய்திகளின் அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

PDG சியாமாஸ்ரீ சென்
RC கல்கத்தா மெட்ரோ சிட்டி — D 3291

ரோட்டரியன்களின் பணிக்குப் பாராட்டுகள்

நோய்ப் பரவலின்போது ரோட்டரியன்களுடைய சாதனைகளை ஆசிரியர் விவரித்துள்ளார், அவற்றை நாம் பாராட்டவேண்டும். வாழ்க்கையில் மிகவும் மதிப்புமிக்க சொத்து, நல்ல ஆரோக்கியம்தான் என்று RI இயக்குநர் பரத் பான்ட்யா சரியாகச் சொல்லியுள்ளார். தங்களுடைய சொந்தப் பாதுகாப்பை ஒரு பொருட்டாகக் கருதாமல் முன்னணியில் நின்று பணியாற்றிய போராளிகளுடைய சேவைகளை அவர் பாராட்டியுள்ளார், நாம் அனைவரும் அவர்களை ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

RI இயக்குநர் கமல் சங்வி, ஃப்ராங்க்ளின் D ரூஸ்வெல்ட்டின் இந்த எண்ணத்தை அழகாக விளக்கியுள்ளார்: நம்முடைய இளைஞர் களுடைய எதிர்காலத்தை நம்மால் எப்போதும் உறுதி செய்ய இயலாது, ஆனால், நம்முடைய இளைஞர்களை எதிர்காலத்துக்கு ஏற்றவர் களாகத் தயார் செய்ய இயலும்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

இந்த நோய்ப் பரவலின் போது, ரோட்டரியின் சேவை மிகவும் சிறப்பாக, நன்றாக அமைந்துள்ளது. இந்தப் பன்னாட்டு நோய்ப்பரவலின்போது, "தனக்கு மேல் சேவை" என்பதை நம்பும் ரோட்டரியன்கள் தங்கள் சேவையைத் தொடர் வார்கள். அதே நேரம், நேர்ச் சிந்தனை கொண்ட உங்கள் குறிப்பு என் உள்ளத்தைத் தொட்டது.

அருண் குமார் டாஷ்
RC பரிபடா — D 3262

RI தலைவர் மார்க் மலோனி, அலோகா என்கிற மனநிலையைப்பற்றிப் பேசுகிறார், அதாவது, ஒருவருக்கொருவர் அக்கறை, அன்பை வெளிப் படுத்தச் செ ால்கிறார். (ஜூன் இதழ்). ஆசிரியர் பக்கம், மறைந்த PRIP ஃப்ராங்க் டெவ்லினை நன்கு நினைவுகூர்கிறது.

நோய்ப் பரவலின் நடுவில் சிக்கித் தவிக்கிற, பசியில் உள்ள மக்களுக்கு உணவு அளிக்கும் RC மைசூரு ஹெரிடேஜின் பாராட்டவேண்டிய பணியை அழகான சொற்களில் விவரித்துள் ளீர்கள். விவசாயத்தை ஒரு லாபம் தருகிற முயற்சியாக ஆக்குதல் என்ற கட்டுரை நம்மை 1960கள், 1970களுக்கு அழைத்துச்செல்கிறது. அந்தக் காலகட்டத்தில், பசுமைப் புரட்சியைக் கொண்டுவருவதற்காகத் துணிவான நடவடிக்கை களை எடுத்தார் CS என்று மதிப்புடன் அழைக்கப்பட்ட வேளாண்மைத்துறை முன்னாள் அமைச்சர் C சுப்ரமணியம். கிரண் ஜெஹ்ரா-வின் அலமாரிகளில் என்ற கட்டுரை, படிக்கவேண்டிய மூன்று புதினங்களைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

RS முனியாண்டி
RC திண்டுக்கல் — D 3000

நம்முடைய இதழ் மிகச் சிறப்பாக, நன்றாக, அட்டகாசமாக உள்ளது. ரோட்டரி செய்திகள் குழுவுக்குப் பாராட்டுகள்.

சந்தேஷ் ரன்டாட்
RC அகோலா மிட்-டவுன் — D 3030

ஜூன், ஜூலை இதழ்களில் பின்வரும் கட்டுரைகளைப் படித்து நான் மிகவும் மகிழ்ந்தேன்: பரத், ஷலான் சவுர் எழுதிய ஓர் அமைதியான மலையாக இருங்கள்; ரஷீதா பகத் எழுதிய கமலம்மாவின் மிகச் சிறந்த தாராள மனப்பான்மை மற்றும் ஜூலை இதழில் ஷீலா நம்பியாரின் கடினமான சூழலைத் தாங்கி நிற்றல். இப்படிப்பட்ட மிகச் சிறந்த படைப்புகளுக்காக நன்றி.

P முருகன், முன்னாள் ISRO அறிவியலாளர்.

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org*

ரோட்டரியை நிலையான முறையில் வளர்ப்போம்

Rotary Opens Opportunities

அன்புள்ள ரோட்டேரியன்களே,
ரோட்டராக்டர்களே மற்றும் நண்பர்களே,

இந்த 2020 ஆம் ஆண்டு நினைவில் நிற்கக்கூடிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது, நமது சேவை, கூட்டுணர்வு, பன்முகத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் தலைமையின் முக்கிய மதிப்புகளை எப்போதும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும், அது குறித்து காது கொடுத்து கேட்கவும், அதற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

நமது தகவமைத்துக் கொள்ளும் திறனை நாம் எவ்வாறு நிரூபித்துள்ளோம் என்பது குறித்து நான் பெருமையடைகிறேன். தொற்றுநோயை எதிர்கொள்ளும் நிலையிலும், இணையவழியில் கூட்டங்களை நடத்தி சேவை செய்வதற்கான புதிய வழிகளை நாம் கண்டுப் பிடித்தோம். இரத்து செய்யப்பட்ட ஹொனலுலு 2020 ரோட்டரி சர்வதேச மாநாட்டை, நமது முதல் மெய்நிகர் மாநாடாக நாம் மாற்றியுள்ளோம். ஒவ்வொரு வாரமும், ரோட்டரி என்பது, எங்கும் நடக்கக்கூடிய ஒரு நெகிழ்வான கூட்டம் என்பதை நாம் நிரூபித்து வருகிறோம் – பாரம்பரிய கூட்டங்களில், கைபேசிகளில் மற்றும் கணினி வழியாக.

ரோட்டரியின் இணையவழி மற்றும் தனிப்பட்ட கூட்டங்களின் கலவையை முன்பை விட இப்போது அதிகம் அனுபவிப்பதாகக் கூட சிலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள்! புதிய வகைக் கிளப்புகளை ஆதரிப்பது முக்கியமாகும். இனி அவை ரோட்டரியின் உண்மையான அங்கமாகும். பாரம்பரிய கிளப்புகளுடன், மின்னணு கிளப்புகள், ரோட்டராக்ட் கிளப்புகள், காரண அடிப்படையிலான கிளப்புகள் மற்றும் கடவுச்சீட்டு கிளப்புகள் ஆகியவை நம்மிடம் உள்ளன. இவை ரோட்டரியை மேலும் உள்ளடக்கியதாகவும், மிகவும் நெகிழ்வுள்ளதாகவும், மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் மாற்ற உதவுகின்றன. இந்தச் சங்கங்களுக்கு சென்று, யோசனைகளை பரிமாறுங்கள்.

சில நேரங்களில், எண்கள் விளையாட்டில் நாம் சிக்கிக் கொண்டு பெரிய விஷயங்களை இழக்க நேரிடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அடுத்த வருடமே அந்தப் புதிய உறுப்பினர்கள் கிளப்புகளை விட்டு வெளியேறுகிறார்கள் என்றால், உறுப்பினர் அதிகரிப்பு என்பது அர்த்தமற்றதாகிவிடும். ரோட்டரியை நிலையான முறையில் வளர்ப்போம். ரோட்டரி இப்போது விதிகளைப் பற்றி குறைவாகவும், பாரம்பரிய கூட்டங்கள் தவிர, பல்வேறு வழிகளில் எவ்வாறு ஒன்றிணைவது என்பது குறித்து அதிகமாகவும் சிந்திக்கிறது.

நமது உறுப்பினர்களுக்காக நம்மால் முடிந்த அனைத்தையும் நாம் செய்கிறோமா என்றும், நாம் சேவை செய்யும் சமூகத்தை நமது சங்கம் பிரதிபலிக் கிறதா என்றும் கேட்டு–அதற்கு நேர்மையான பதிலளிக்க ஒவ்வொரு கிளப்பும் வருடாந்திர மூலோபாயக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இந்த வருடம், RI இயக்குநர் குழுவில் ஆறு பெண்கள் என்னுடன் பணியாற்று கிறார்கள் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன், இது முன்னெப்போதும் இருந்ததை விட அதிகமாகும். ஒவ்வொரு நிலையிலும் ரோட்டரி இந்தத் திசையிலேயே நகரச் செய்வோம். ரோட்டரி செழித்து வளர்வதற்கு, நமக்கு இன்னும் தொலை நோக்குப் பார்வையும், அதிக பன்முகத்தன்மையும் தேவை.

ஆனால் ரோட்டரியில் இதுவரை மாறாத, எப்போதும் மாறாத விஷயங்கள் தோழமை, வலையிணைப்பு, நெறி முறைகள் மற்றும் சேவை. உண்மையில், ரோட்டரியை அனைவருக்கும் ஏற்றதாக்கும் மதிப்புகள் இவைதான்.

அவ்வப்போது நாம் புரட்சிகரமானவர்களாக இருக்க வேண்டும் என்று ரோட்டரியின் நிறுவனரான பால் ஹாரிஸ் கூறினார். இப்போது அத்தகைய ஒரு நேரம். நமது முக்கியமான மதிப்புகளுக்கு நாம் உண்மையாக இருக்கும் போது கூட நம்மை வலுப்படுத்தும் மாற்றத்தை நாம் தழுவுவதற்கு எண்ணற்ற வாய்ப்புகளை ரோட்டரி திறக்கிறது.

Holger Knaack

ஹோல்கர் நாக்
RI தலைவர்

இனவாதம், நிறவாதத்திலிருந்து விலகி நடப்போம்

இனவாதத்தைப்பற்றிய மெய்நிகர் மாநாட்டில் RI தலைவர் ஹோல்கர் நாக் குறிப்பிட்ட ஒரு கருத்து, சண்டைகள், முன் தீர்மானங்கள், வன்முறை ஆகியவற்றால் மேலும் மேலும் பிளவுபட்டுக்கொண்டிருக்கும் இன்றைய உலகில் மிக வலுவானது, மிகப் பொருத்தமானது, குறிப்பாக, நம் நாட்டுக்குப் பொருத்தமானது. மாவட்ட ஆளுநர்கள், சங்கத் தலைவர்களிடையே பேசிய அவர், உலகெங்குமுள்ள ரோட்டரியன்கள் இனவாதத்தைச் சிறிதும் சகித்துக்கொள்ளக்கூடாது என்று தெரிவித்தார். மதிப்பை முன்னிறுத்துதல், பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல்'' ஆகியவை ரோட்டரியின் மையக் கொள்கைகளில் இடம்பெற்றுள்ளன என்பதை அவர் வலியுறுத்தினார், ரோட்டரி சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களிடையே ஒரு நியாயமான சமநிலையை உறுதிப்படுத்தவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படாத சிறுபான்மைக் குழுக்களைக் கவனியுங்கள். நினைவிருக் கட்டும், ரோட்டரியன்கள் பேச்சற்றவர்கள் இல்லை, எந்தவகையான இனவாதத்துக்கு எதிராகவும் நாம் நம்முடைய குரலை எழுப்பவேண்டும்'' என்றார் அவர். அமைப்புரீதியிலான இனவாதத்தை ரோட்டரி எப்படிச் சமாளிக்கும் என்பதுபற்றிய ஒரு கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

முன் தீர்மானம், இனவாதத்தைப்பற்றிப் பேசும்போது, அவற்றில் மிக மோசமான ஒன்று, நிறத்துடன் தொடர்புடையது. அமெரிக்காவில் கருப்பினத்தவர்களுக்கு எதிரான முன் தீர்மானம், ஓரவஞ்சனையைப் பற்றிய பிரச்னை நெடுநாளாகவே கொதித்துக்கொண்டிருந்தது. ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்ற கருப்பினத்தவரை ஓர் வெள்ளை, ஆண் காவலர் இரக்கமின்றிக் கழுத்தை நெரித்துக் கொன்றதால், அங்கே அது ஒரு பெரிய பிரச்னையாக வெடித்துள்ளது. அதே நேரம், இந்தியாவிலுள்ள நாமும் அவர்களைப் போலவே கருப்புத் தோலை விரும்புவதில்லை. தோலை வெள்ளையாக்குகிற கிரீம்கள், களிம்புகளுக்கு இந்தியர்கள் அளிக்கிற மிகப் பெரிய ஆதரவைப் பார்க்கும்போது, நிறம் சார்ந்த ஓரவஞ்சனையை நாம் மிகுதியாகப் பின்பற்றுவது உண்மை.

அமெரிக்கா முழுவதும் வன்முறை நிறைந்த, தொடர்ந்த எதிர்ப்புகள், பல சமூக ஊடகத் தளங்களில் BlackLivesMatter என்ற ஹேஷ்டேக் ஆகியவற்றைப் பார்த்தபிறகுதான், யுனிலீவர் நிறுவனம் ஒருவழியாக விழித்தெழுந்தது. அந்நிறுவனத்துக்கு ஏகப்பட்ட பணத்தைக் கொண்டுவருகிற ''ஃபேர் அன்ட் லவ்லி'' என்ற முகக் க்ரீம் கருப்புத் தோல் கொண்டவர்களுக்கு எதிரான ஓரவஞ்ச னையை முன்னிறுத்துகிறது என்பதைப் புரிந்துகொண்டது. இதனால், அந்தப் பெயரை ''க்ளோ அன்ட் லவ்லி'' என்று மாற்றுவதாகத் தீர்மானித்துள்ளது.

இந்தப் பொருட்களுக்கான விளம்பரங்களும் அருவருப்பாக இருந்தன: ஒரு பெண் நல்ல கணவரை, நல்ல வேலையைக் கண்டறிய இயலாவிட்டால், குறிப்பாக, அவரால் ஒரு விமானப் பணிப்பெண்ணாக இயலாவிட்டால், அல்லது, அவருக்குத் தன்னம்பிக்கை இல்லாவிட்டால், அவர் இந்தக் க்ரீமைப் பயன்படுத்த வேண்டும், அப்படிப் பயன்படுத்தினால், 10 அல்லது 15 நாட்களில் மாயத்தைக் காணலாம். இந்தத் தொல்லை போதாது என்று, ''மணமக்கள் தேவை'' விளம்பரங்கள் இன்னும் எரிச்சலூட்டுகின்றன. எல்லாரும் ''சிவப்புத் தோல் கொண்ட'' பெண்ணைத் தேடுகிறார்கள். இந்த முன் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு இந்தியத் திரைப்படங்கள் பெரிதாக எதையும் செய்துவிடவில்லை.

பழைய பாலிவுட் படங்களில், கருப்புத் தோல் கொண்ட மனைவியைக் கணவர் விலக்கிவைப்பார். அந்த நாள் உச்ச நட்சத்திரமான மீனா குமாரி ஓர் எரிச்சலூட்டும் பாடலில் கிருஷ்ணரைப் பார்த்து இவ்வாறு பாடுவார், ''ஓ, கண்ணா, உன்னுடைய நிறத்தை எனக்குக் கொடுத்து என்னைப் பழிவாங்கிவிட்டாயே, ஏன்?'' அதேபோல், நகைச்சுவைக் கலைஞரான மெஹ்மூத் இவ்வாறு பாடுவார்: நான் கருப்பாக இருக்கலாம், ஆனால், என்னுடைய இதயம் மிகச் சிறந்தது.

பல தலைமுறைகளாக வந்த முன் தீர்மானங்கள் அத்தனை விரைவில் சென்றுவிடாது; உங்கள் தலைவர் உங்களுக்குச் சொல்வதைப்போல, ரோட்டரியன்களான நீங்கள் இதுபோன்ற முட்டாள்தனமான ''அழகு'' வரையறைகள், முத்திரை குத்தல்களுக்கு எதிராக வலுவாகவும் உறுதியாகவும் குரல் கொடுங்கள்.

ரஷீதா பகத்

Governors Council

RI Dist 2981	DG R Balaji Babu
RI Dist 2982	DG K S Venkatesan
RI Dist 3000	DG A L Chokkalingam
RI Dist 3011	DG Sanjiv Rai Mehra
RI Dist 3012	DG Alok Gupta
RI Dist 3020	DG Muttavarapu Satish Babu
RI Dist 3030	DG Shabbir Shakir
RI Dist 3040	DG Gajendra Singh Narang
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Rajesh Agarwal
RI Dist 3060	DG Prashant Harivallabh Jani
RI Dist 3070	DG CA Davinder Singh
RI Dist 3080	DG Ramesh Bajaj
RI Dist 3090	DG Vijay Arora
RI Dist 3100	DG Manish Sharda
RI Dist 3110	DG Dinesh Chandra Shukla
RI Dist 3120	DG Karunesh Kumar Srivastava
RI Dist 3131	DG Rashmi Vinay Kulkarni
RI Dist 3132	DG Harish Motwani
RI Dist 3141	DG Sunnil Mehra
RI Dist 3142	DG Dr Sandeep Kadam
RI Dist 3150	DG Nalla Venkata Hanmanth Reddy
RI Dist 3160	DG B Chinnapa Reddy
RI Dist 3170	DG Sangram Vishnu Patil
RI Dist 3181	DG M Ranganath Bhat
RI Dist 3182	DG B Rajarama Bhat
RI Dist 3190	DG B L Nagendra Prasad
RI Dist 3201	DG Jose Chacko Madhavassery
RI Dist 3202	DG Dr Hari Krishnan Nambiar
RI Dist 3211	DG Dr Thomas Vavanikunnel
RI Dist 3212	DG P N B Murugadoss
RI Dist 3231	DG K Pandian
RI Dist 3232	DG S Muthupalaniappan
RI Dist 3240	DG Subhasish Catterjee
RI Dist 3250	DG Rajan Gandotra
RI Dist 3261	DG Fakir Charan Mohanty
RI Dist 3262	DG Saumya Rajan Mishra
RI Dist 3291	DG Sudip Mukherjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

Message from

ஒருவருக்கு ஒருவர்

கோவிட் நெருக்கடி நாம் குறைவாக எதிர்பார்த்த மாற்றம் நமக்கு வரும் என்பதை உணர்த்தியுள்ளது. பெரும்பாலும் மாற்றம் நம்மீது திணிக்கப்படுகிறது. வருடாந்திர செயல்முறையாக தலைவர்களை மாற்றுவதை ரோட்டரி எப்போதும் ஏற்றுக்கொண்டது. ஆனால் நமது கூட்டங்கள், திட்டங்கள், கட்டமைப்பு பொதுவாக "பாரம்பரியத்தை" பின்பற்றுகிறது. புதிய விதிமுறைகளுடன் ரோட்டரி மாறும், வளரும் ஒரு அமைப்பாக பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறும் என்று நான் நம்புகிறேன்.

இந்த புதிய ரோட்டரி சந்திப்பு அறைகள், அரங்குகள் மற்றும் ஹோட்டல்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது அல்ல. ரோட்டரி நம் வீடுகளுக்குள், நம் வரவேற்பறைகளுக்குள், சமையலறைகளுக்குள், படுக்கையறைகளுக்குள்; உண்மையை சொல்வதென்றால், நம் வீடுகளின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் வந்துவிட்டது. சமீபத்தில் நடந்த RI கருத்தாய்வில், கடந்த மூன்று மாதங்களில் நம் மண்டலங்களில் 90 சதவீதத்திற்கும் மேலான கிளப்புகள் நியாயமான முறையில் அடிக்கடி இணையம் வழியாக சந்தித்திருப்பதாகவும், சூழ்நிலை இயல்பான பின்பு கூட அவர்கள் நேரடி மற்றும் இணையவழி காணொளி காட்சி சந்திப்புகளை நடத்தப்போவதாக 55 சதவிகித கிளப்புகள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் இது ஒரு நல்ல அறிகுறியாக தெரிகிறது.

ஆகஸ்ட் என்பது உறுப்பினர் மாதம், ரோட்டரிக்கு ஒரு நண்பரை அறிமுகப்படுத்துவதற்கான சிறந்த நேரம் இதுவாகும். மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ரோட்டரியில் இணைகிறார்கள், ஆனால் முக்கிய விஷயமாக அவர்கள் ரோட்டரியன்களாக இருக்க விரும்புகிறார்கள். ரோட்டரியின் மதிப்புகளையும் நன்மைகளையும் நன்றாக அவர்களுக்கு புரிய வைத்தால் உறுப்பினரை சேர்ப்பது கடினமான காரியம் அல்ல. தக்கவைப்பதே முக்கியத்துவம் வாய்ந்தது. நேரத்திற்கு மட்டுமல்லாது, உறுப்பினர்களின் திறமைக்கும் முக்கியத்துவம் அளித்திடுங்கள். ரோட்டரி கிளப்பானது ஓய்வெடுக்கும் ஒரு இடமாக; பற்று கொண்ட இடமாக; உறுப்பினரின் திறமை, நேரம் மற்றும் பங்களிப்பிற்கான உன்னத இடமாக இருக்க வேண்டும்.

நம் சமூகங்களை மீண்டும் உருவாக்க, மறுவடிவமைக்க மற்றும் மீட்டெடுக்க நாம் உதவலாம். ரோட்டேரியன்கள் இதைத்தான் செய்கிறார்கள், இதனால்தான் நாம் ரோட்டரியில் இருக்கிறோம்.

இது நமக்கான அழைப்பு, இது நமக்கான நேரம் மற்றும் நாம் ரோட்டரியில் சேர்ந்ததற்கான தருணம் இதுதான். நாம் ஒருவருக்கொருவர் இணையும்போது, புதிய மற்றும் வித்தியாசமான வாய்ப்புகள் நமக்கு கிடைக்கும், நம்மால் முடியும் இந்த உலகை மாற்றுவோம்.

Dr **பரத் பாண்ட்யா**
RI **இயக்குநர்,** 2019–21

RI Directors

வளர்ச்சி மீது கவனம்

நமது ரோட்டரி வளர வேண்டும் என்ற மந்திரத்துடன் இது புதிய ரோட்டரி ஆண்டின் இரண்டாவது மற்றும் தைரியமான புதிய உலகமாகும்.

ரோட்டரியுடன் தங்கள் விரும்பிய அனுபவத்தைத் தேர்வுசெய்ய உங்கள் உறுப்பினர்களை அனுமதியுங்கள். ஒத்த நிறுவனங்களுடன் தேக்கநிலையில் உள்ள சந்தையில், தனிப் பயனாக்கப்பட்ட வாய்ப்புகளை வழங்குவது அதிக உறுப்பினர்களை ஈர்ப்பதற்கு வழிவகுக்கும். இருபத்தியோராம் நூற்றாண்டு இளைஞர்களை மட்டுமல்லாமல், பல தலைமுறையை சார்ந்தவர்களிடமும் கவனம் செலுத்துங்கள். ரோட்டரியில் உள்ள ஒவ்வொரு வயதினருடனும் உறவை உருவாக்குவதும் வளர்ப்பதும் முக்கியமாகும். கலப்பு வயதினரை ஈர்க்க சில உத்திகள் இதோ.

பேபி பூமர்கள் பாரம்பரிய நுட்பங்களுக்கு சிறப்பாக பதிலளிக்கின்றனர், மேலும் சமூக ஊடக பிரசாரத்தை விட தொலைபேசி உரையாடல்கள் மற்றும் நேரடி சந்திப்புகளுக்கு பதிலளிக்கும் வாய்ப்பு அதிகம். கிளைப்பின்னலமைப்பில் ஒன்றிணைவதற்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கும் நேரடியான நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவர்களை சென்றடையுங்கள்.

ஜெனரேஷன் எக்செர்ஸ்ஐ சேர்ந்தவர்கள் அதிக விதிகளைச் சார்ந்தவர்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டும் விதிமுறைகளின் மூலம் நிறுவனங்கள் செயல்படுவதை பாராட்டுகின்றனர், அதோடு அவர்கள் நகைச் சுவையுணர்வு மிக்கவர்கள். நேரடி நிகழ்வுகள் மற்றும் மின்னஞ்சல்கள் வழியாக மனித தொடர்புகளின் மூலம் உறவை உருவாக்குவதில் கவனம் செலுத்துங்கள்.

மில்லினியல்கள் இணையத்தின் சமூக ஊடக அம்சத்தைப் பாராட்டுகின்றன. சமூக ஊடகங்கள் மூலம் உண்மையான உறவுகளை உருவாக்குவதற்கும், அந்நியர்களிடமிருந்து கூட மதிப்புரைகளை நம்புவதையும் அதைச் சார்ந்திருப்பதையும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜென் இசடெர்ஸ் மற்றும் ரோட்டராக்டர்கள் சமூக ஊடகங்களின் ஜாம்பவான்கள், அதோடு ஸ்னாப்சாட், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் போன்ற வீடியோ ஊடகங்களால் ஈர்க்கப்படுபவர்கள். மில்லினியல்களைப் போலவே, அவர்களுக்கும் மொபைலே முதன்மையானது, மேலும் மொபைலில் பார்க்கும் அனுபவத்திற்காக உகந்ததாக அனைத்து உள்ளடக்கங்களும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

யூடியூப்பை விட பேஸ்புக்கை விரும்புவோர் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும், சமூக ஊடகங்களில் ஒரு வீடியோ மேலே குறிப்பிட்ட இரண்டை காட்டிலும் பல மடங்கு அதிகமான பகிரப்படுகிறது. உங்கள் செயல்பாடுகளைப் படம்பிடித்து அவற்றை யூடியூப், ஃபேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடகங்களில் பதிவிடுங்கள்.

கிளப்புகளின் இணையவழி காணொளி காட்சி சந்திப்புகள் உலகம் முழுவதிலும் இருந்து பேச்சாளர்களைக் கொண்டிருக்க வகைசெய்வதோடு உங்களுடைய சிறப்பான பணியைப் பார்த்து ரோட்டரியில் சேர உத்வேகம் பெறக்கூடிய விருந்தினர்கள், உறவினர்கள், சக ஊழியர்களை ஆகியோரை அழைக்கவும் வாய்ப்பாக அமையும்.

கமல் சங்வி
RI இயக்குநர், 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPE Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID Yash Pal Das	RI Dist 3080
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250
RIDE A S Venkatesh	RI Dist 3232

Executive Committee Members (2020–21)

DG Sanjiv Rai Mehra Chair – Governors Council	RI Dist 3011
DG Sudip Mukherjee Secretary – Governors Council	RI Dist 3291
DG Sangram Vishnu Patil Secretary – Executive Committee	RI Dist 3170
DG Prashant Harivallabh Jani Treasurer – Executive Committee	RI Dist 3060
DG S Muthupalaniappan Member – Advisory Committee	RI Dist 3232

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

இறால் தொழில்முனைவோர் பெண்களுக்கு உதவும் RC காக்கினாடா

ரஷீதா பகத்

அந்தக் கிராமத்தின் பெயர் சின்ன பொட்டு பாலம், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள காக்கினாடாவிலிருந்து வெறும் 20 கிமீ தொலைவில், வங்காள விரிகுடாவுடன் இணையும் கால்வாயின் கரைகளில் அமைந்துள்ளது. இங்குள்ள பெண்கள் குழுவொன்று, உள்ளூர்ச் சுவைப்பண்டமாகிய உப்பு சேர்த்த, சுட்ட இறால்களைத் தயாரிப்பதன்மூலம் வருவாய் உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இதற்காக அவர்கள் பயன்படுத்திய நீண்ட, கடினமான முறை இப்போது வெகுவாக மேம்படப்போகிறது, காரணம், RID3020இலுள்ள 77-ஆண்டு வயதான சங்கமாகிய காக்கினாடா ரோட்டரி சங்கத்தின் உதவிதான்.

சுமார் 2,000 மக்கள் தொகையைக் கொண்ட இந்தக் கிராமம் ஒரு மீனவர் கிராமமாகும். உள்ளூர் ஆண்கள் துடுப்பு அல்லது அரை HP மோட்டாரால் இயங்கும் சிறு படகுகளின்வழியாக மீன் பிடித்து வாழ்கிறார்கள் என்கிறார் சங்கத் தலைவர் பவன் குமார் மங்கலம்பள்ளி.

இவர் WWF இந்தியா (இயற்கைக் கான உலகளாவிய நிதி) அமைப்புடன் இணைந்து செயல்பட்டுவருவதாலும், சுற்றுச்சூழல், சூழமைப்புகளைப்பற்றிப் பேரார்வத்துடன் இருப்பதாலும், 2015ம் ஆண்டுவாக்கில், WWFக்காகச் சில விழிப்புணர்வு முகாம்களை நடத்தியபோது, பேரார்வம் மிக்க கிராமத் தலைவரான நரசிம்ம ராஜூ

அந்தக் குடிசையில் பல மணி நேரம் இருப்பதும், புகையை உட்கொள்வதும் பெண்களுக்குப் பெரிய ஆபத்து, இதனால் முச்சு தொடர்பான நோய்கள் வருகின்றன.

என்பவரைச் சந்தித்தார். அரசாங்கம் தொடங்கும் பல திட்டங்கள், சலுகைகள் தொடரவேண்டும், உண்மையிலேயே மக்கள் வாழ்க்கைகளை மேம்படுத்த உதவவேண்டும் என்பதை உறுதிப் படுத்துவதில் அவர் ஆர்வத்துடன் இருந்தார்.

ஆர்வமூட்டும் விஷயம், இந்தக் கிராமம் பல மத்திய, மாநில அரசுத் திட்டங்களின் வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது, தன்னார்வலர் அறிவியல் அமைப்புகளுடைய ஆராய்ச்சி முறைகளையும் பின்பற்றிவருகிறது. அதே நேரம், இவை உள்ளூர் மக்களுக்குப் பெருமளவில் உதவவில்லை. ஏனெனில், ஒரு முக்கியமான அம்சம் இவற்றில் முற்றிலுமாக இல்லை. அந்த விடுபட்ட அம்சம், ஒவ்வொரு TRF பன்னாட்டு நல்கையின் வலியுறுத்துகிற, "நீடித்திருத்தல்".

இங்கு தொடங்கப்பட்ட திட்டங்கள் அல்லது மக்களுடைய வாழ்வாதாரங்கள் என எதையும் நீடிக்கச்செய்வதில் பெரிய கவனம் காட்டப்படாததால், கிராமத்து மக்கள் பெரிய பலன் எதையும் பெறவில்லை. இங்குள்ள பெண்கள் தங்களுடைய குடும்பத்துக்காகக் கூடுதல் வருவாயைப் பெறுவதற்காக மிகச் சுறுசுறுப்பாக இயங்கினார்கள், புயல்கள் அல்லது உயர் அலைச் சூழல்களில் ஆண்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்படாதபோது, இவர்கள்தான் குடும்பத்துக்காகச் சம்பாதித்தார்கள். இவர்களுக்கும் இந்தத் திட்டங்கள் பலன் தரவில்லை என்கிறார் மங்கலம்பள்ளி.

இறாலை பதப்படுத்தும் கிராமபுர பெண்கள்.

உப்பு சேர்த்த, சுட்ட இறால்களுக்கு இங்கு நல்ல தேவை உள்ளது. இந்தப் பெண்கள் தயாரிக்கிற இந்தச் சுவைப்பண்டத்தை உணவு முகவர்கள் இவர்களிடமிருந்து உடனே பெற்றுக்கொள்கிறார்கள். இது இந்தப் பெண்களின் குடும்ப வருவாயைப் பெருக்குகிறது. ஆனால், இந்தச் சிறந்த தயாரிப்பைச் சந்தைக்குத் தயாராக்குவது ஒரு சிக்கலான செயல்முறையாகும்; இதற்குப் பல மணி நேரம் கடினமாக உழைக்கவேண்டும், இதில் ஈடுபடுவோர் நிறையப் புகையை உட்கொள்ளவேண்டியிருப்பதால், இந்தச் செயல்பாட்டில் ஈடுபடும் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, முன்பெல்லாம் இறால்களைத் தயாரிக்க இந்தப் பெண்களுக்கு 8–10 மணி நேரம் ஆகும், அது அவர்களைக் களைப்பாக்கிவிடும். இந்தப் பெண்கள் இறால்களை மொத்த விற்பனைச் சந்தையிலிருந்து பெறுகிறார்கள், இவற்றை ஒரு சிறு குடிசையில் வைக்கிறார்கள், இதற்காக, இந்தச் செயல்பாட்டில் ஈடுபடும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனிக் குடிசையை வைத்துள்ளது, அந்தக் குடிசை எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டுள்ளது. இந்தக் குடிசையில், இறால்களுக்கு உப்பு சேர்க்கப்படுகிறது, அவை மூங்கில் பட்டை அல்லது அடுக்குகளில்

ரோட்டரியினர் கிராம பெண்களுக்கு மேலும் உறுதியான ஜித்திகாவை வழங்குகின்றனர்.

வைக்கப்படுகின்றன, அவற்றுக்குக் கீழே நெருப்பு பற்றவைக்கப் படுகிறது. இதனால், இறால்கள் நேரடி நெருப்பாலன்றி, வெப்பத்தால் சமைக்கப் படுகின்றன. இப்படித் தயாராகும் பொருள், உப்பு சேர்த்த, சுட்ட இறால், இதற்கு ஒரு தயார் நிலைச் சந்தை உள்ளது. ஆனால், அந்தக் குடிசையில் பல மணி நேரம் இருப்பதும், புகையை உட்கொள்வதும் பெண்களுக்குப் பெரிய ஆபத்து, இதனால் மூச்சு தொடர்பான நோய்கள் வருகின்றன.

சுமார் 10 ஆண்டுகளுக்குமுன், DRDO (பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு) என்ற அமைப்பைச் சேர்ந்த கருணையுள்ள ஒருவர், இந்தப் பகுதியில் வழக்கம்போல் இன்னொரு திட்டத்தைத் தொடங்கினார், இறால் சமைப்போருடைய சுமையைக் குறைக்க உதவுகிற ஜித்திகா என்ற கருவியை உருவாக்கினார். ஜித்திகா (படத்தைக் காணுங்கள்) என்பது ஓர் இரும்புப் பெட்டியாகும், இதில் ஆறு அடுக்குகள் நெட்டுக்குத்தாக வைக்கப்பட்டுள்ளன, கீழே ஒரு கூடுதல் தட்டு உள்ளது, அதில் நெருப்பு ஏற்றப்படுகிறது.

உப்பு சேர்த்துப் பல நாட்கள் உலரவைத்த பச்சை இறால்களை ஜித்திகா-வில் வைத்தால், சில மணிநேரத்தில் அவற்றைச் சமைத்து விடலாம். பழைய இறால் சமைக்கும் குடிசைகளுக்குள் இருக்கும் பெண்கள் சந்திக்கிற ஆபத்து மற்றும் நலப் பிரச்னைகளை இந்தக் கருவி முற்றிலும் நீக்கிவிடுகிறது, தீ விபத்து ஆபத்தையும் நீக்கிவிடுகிறது.

இது ஒரு மிகச் சிறந்த திட்டம், ஆனால், ஒரு பிரச்னை; இந்தப் பெண்களுக்கு வழங்கப்பட்ட ஜித்திகா-க்கள் மோசமாகச் செய்யப் பட்டவை, அவை நாளடைவில் கெட்டுப்போய்விட்டன, அவற்றைப் பழுதுபார்க்க வழியில்லை. ஆகவே, பெண்கள் மீண்டும் பழைய, ஆபத்தான குடிசைகளுக்குச் செல்லத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்களுடைய கடின உழைப்பைப் புரிந்துகொள்வதற்கு, மங்கலம்பள்ளி மற்றும் RC காக்கினாடா-விடம் திரும்புவோம்.

இந்த இறால்களை மொத்தமாக வாங்குவதற்காக இந்தப் பெண்கள் அதிகாலை 2 மணிக்கு எழுகிறார்கள், ஆட்டோரிக்ஷா ஒன்றைப் பிடிக்கிறார்கள், சுமார் 10 கிமீ தொலைவுக்குப் பயணம் செய்து மொத்த இறால் சந்தைக்குச் சென்று இறால் வாங்குகிறார்கள், வீடு திரும்புகிறார்கள், பின்னர், அவற்றைச் சந்தைக்குத் தயாரிக்கும் நீண்ட செயல்முறையைத் தொடங்குகிறார்கள் என்கிறார் அவர்.

ஆகவே, சங்கத் தலைவராக அவருடைய ஆண்டு வந்தபோது, இன்னும் நன்றாக வடிவமைக்கப்பட்ட, இன்னும் பெரிய, இன்னும் உறுதியான மற்றும் கூடுதலாக நீடித்து உழைக்கிற ஜித்திகா-க்களைச் சின்ன பொட்டு பாலம் கிராமத்துப் பெண்களுக்கு நன்கொடையாக அளிக்கத் தீர்மானித்தார். இதைத் தன்னுடைய பெரிய திட்டங்களில் ஒன்றாக அவர் ஏற்றுக்கொண்டார்.

அந்த முதல் ஜித்திகா, ரூ.37,000 செலவில் தயாரானது, கடல் மீன்வளத்துறையைச் சேர்ந்த அறிவியலாளர் ஒருவருடைய உதவியுடன் சங்கமே இதை வடிவமைத்தது, ரோட்டரியன்களுடைய மேற்பார்வையில் காக்கினாடாவில் அது தயாரிக்கப்பட்டது, ஜூலை முதல் வாரத்தில் இந்தக் கிராமப் பெண்களுக்கு அது நன்கொடையாக அளிக்கப்பட்டது.

மிகச் சிறந்த தயாரிப்பான இந்த இறால்களை இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 15 குடும்பங்கள் தயாரித்துவருவதால், இன்னும் 14 ஜித்திகா-க்களைத் தயாரித்து வழங்க இவர் விரும்புகிறார். இந்தக் கிராமம் மிகச் சிறந்த சாத்தியத்தைக் கொண்டுள்ளது, அரசு இயக்கும் பள்ளிகள், ஒரு நூலகம், சமூகக்

கூடம் என நல்ல உள் கட்டமைப்பைக் கொண்டுள்ளது, அனைத்துக்கும் மேலாக, கடினமாக உழைக்கிற, ஊக்கமுள்ள ஆண்கள், பெண்கள், முன்னாள் தலைவர் ராஜூவுடைய துடிப்பான தலைமை ஆகியவை இங்கு உள்ளன, உள்ளூர் மக்களுடைய வாழ்க்கை, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நம்முடன் உழைப்பதற்கு அவர் எப்போதும் தயாராக இருக்கிறார். நாங்கள் இந்தக் கிராமத்தைத் தத்தெடுத்திருக்கிறோம், இதை ஒரு மாதிரிக் கிராமமாக ஆக்க விரும்புகிறோம்.''

ஜித்திகா-க்களுக்கான பணம், எங்கள் சங்க உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்களுடைய நன்கொடை களின் வழியாகத் திரட்டப்பட்டது. அவர்களுக்காகக் குறைந்தது நான்காண்டுகளுக்கு உழைக்கக்கூடிய ஒரு கருவியை நாங்கள் வடிவமைத்துள்ளோம்; இதைப் பராமரிக்கும் பொறுப்பு கிராமவாசி களுடையது என்று அவர்களிடம் சொல்லியுள்ளோம், அப்போதுதான் இந்தத் திட்டம் நீடித்திருக்கும் என்கிறார் அவர்.

இப்போது, இந்தத் திட்டத்துக்கு நல்ல ஆதரவு கிடைத்துவருகிறது; நிதிப் பங்களிப்பை வழங்க

குடிசையில் இறால் சமைக்கப்படுகிறது.

ஜித்திகா-வைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தப் பெண்களுடைய வருவாய் குறைந்தது கால் பங்கு உயரும் (ரூ.6,000இலிருந்து ரூ.8,000க்கு)

புதிதாக வடிவமைக்கப் பட்ட ஜித்திகாவில் இறால் பதப்படுத்தப்படுகிறது.

விரும்பும் மக்கள் அதற்கான வழிகளைப்பற்றி விசாரிக்கிறார்கள். ஆகவே, இதை விரிவுபடுத்த இயலும் என்று மங்கலம்பள்ளி நம்புகிறார். ஜித்திகா-வைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தப் பெண்களுடைய வருவாய் குறைந்தது கால் பங்கு உயரும் (ரூ.6,000இலிருந்து ரூ.8,000க்கு) என்று இவர் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். இதனால் அவர்களுடைய நலன் மேம்படுவதுடன், இறால்களைப் பதப்படுத்துவதற்கு அவர்கள் செலவழிக்கும் நேரமும் குறையும், தொழில்முனைவும் கடின உழைப்பும் கொண்ட இந்தப் பெண்கள் அந்த நேரத்தை இன்னும் செயல்திறன் மிக்க பணிகளுக்குப் பயன்படுத்து வார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்'' என்று சிரிக்கிறார்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

மராத்வாடா கிராமங்களில் நீர் நெருக்கடியைப் போக்கிய புணே ரோட்டரியினர்

ரஷீதா பகத்

மராத்வாடா மற்றும் வடக்கு மகாராஷ்டிரப் பகுதியில் உள்ள பல மாவட்டங்கள் எப்போதும் மழை போதாமல் துன்பப்பட்டு வந்துள்ளன, அடிக்கடி வருகிற தீவிர வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பல கிராமங்களில் நீர்ச் சேமிப்பு வசதிகள் கிட்டத்தட்ட இல்லை, ஆண்டுதோறும் மழைக் காலத்தில் இங்கு பொழியவேண்டிய மழையில் வெறும் 50 சதவிகிதம்தான் 2018ல் பொழிந்தது, இதனால், புணே-க்கு அருகிலுள்ள பல கிராமங்கள் மிகுந்த வறட்சியைச் சந்தித்தன, இந்தப் பகுதிகளில் வசிக்கும் ஆதரவற்ற மக்களுடைய வாழ்வாதாரமும் உயிர் வாழ்தலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது, என்கிறார் புணே ஃபார் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் மகிழ்ச்சிக் கிராமத்தின் மாவட்ட இயக்குநர் (RID 3131) பங்கஜ் பட்டேல்.

அந்த ஆண்டு, மகாராஷ்டிரத்தில் விவசாயம் செய்யக்கூடிய நிலத்தில் சுமார் 60 சதவிகிதம் அல்லது 85.76 லட்சம் ஹெக்டேர்கள் பாதிக்கப் பட்டதாகவும், 82.27 லட்சம் விவசாயிகளை இது கடுமையாகப் பாதித்ததாகவும் அவர் புள்ளி விவரங் களைச் சுட்டிக்காட்டுகிறார். போதாத நீர் வளங்களைக் கையாள்வதற் காகவும் கிராமத்து மக்கள், விவசாயி களுக்கு ஒரு தீர்வை வழங்குவதற் காகவும் இணைந்து பணியாற்றும்படி NGOக்கள் மற்றும் பெருநிறுவனங்களை மாநில அரசாங்கம் கேட்டுக்கொண்டது.

குறிப்பாக, இதனால் பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள், குடிப்பதற்கு, சமைப்பதற்கு, மற்ற பயன்பாடுகளுக்கான நீரைத் தேடி அவர்கள் நெடுந்தூரம் சிரமப்பட்டு நடந்துசெல்லவேண்டியிருந்தது, அங்கிருந்து பானைகளில் நீரைக் கொண்டுவரவேண்டியிருந்தது.

எண்ணம்

ஆர்வமூட்டும் விஷயம் என்னவென்றால், இந்தத் திட்டத்துக்கான விதை ஒரு வறண்ட சூழலில் ஊன்றப்படவில்லை; ஒரு நல்ல, மேகமூட்டமான நாளில், சுற்றிலும் பசுமை நிறைந்த சூழலில் ஊன்றப்பட்டது. அந்த நாளைப் பட்டேல் நினைவுகூர்கிறார், நானும் சில ரோட்டரியன்களும் நானே கட் என்ற வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த பகுதியைக் காணச் சென்றிருந்தோம். ஒரு வாய்க்கால் பாலத்துக்கு அருகில் நாங்கள் ஒருவரைக் கண்டோம், அவர் ஒரு கல்லைத் தலையணையாக வைத்துப் படுத்திருந்தார். நாங்கள் மேகங்கள் நிறைந்த வானத்தைப் பார்த்துப் பாராட்டிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார்: 'இந்தப் பகுதிமுழுவதும் மிக அழகாகவும் பசுமையாகவும் நீர் நிறைந்தும் உள்ளது, இல்லையா? ஆனால், நீங்கள் கோடைக் காலத்தில் ஒரு நாளில் இங்கு வந்தால், உங்களுக்குக் குடிக்க ஒரு குவளை நீர்கூடக் கிடைக்காது. ஏனெனில், அனைத்து மழை நீரும் காணாமல் போயிருக்கும்.'

இதைச் சொன்ன முதியவர் ஒரு விவசாயி, ஒரு பெரிய பசுக்கூட்டம் அவரைக் கடந்து சென்றது. அந்தப் பசுக்களைச் சுட்டிக்காட்டி அவர்

தொடர்ந்து பேசினார். ‘மனிதர்களை விடுங்கள், லட்சுமிக்குக்கூட நீர் கிடைக்காத சூழல் அது.’ அவர் பசுவைத்தான் ‘லட்சுமி’ என்று கூறுகிறார் என்று ரோட்டரியன்கள் கண்டறிந்தார்கள். அந்தப் பகுதி மக்கள் பசுக்களை மிகவும் மதிக்கிறார்கள், அவற்றை ‘லட்சுமி’ என்று அழைக்கிறார்கள்.

அதன்பிறகு, அந்தப் பகுதியில் ஒரு பெரிய திட்டத்தைச் செய்வதற்கான வாய்ப்பு வந்தபோது, பட்டேலின் சங்கமான RC புணே ஃபார் ஈஸ்ட், RID 3131, டாடாடெக்னாலஜீஸுடன் இணைந்து ஒரு பெரிய திட்டத்தைத் தொடங்கியது. ரோட்டரியின் பெரிய கவனப் பகுதிகளில் ஒன்றான ‘நீர் மற்றும் தூய்மை’ சார்ந்த திட்டமாக அது அமைந்தது.

இரு கூட்டு நிறுவனங்களும் தீவிரமான சமூகப் பொருத்தலை நிகழ்த்தியபிறகு, பல கிராமங்களில் மழைக்காலத்தில் நல்ல மழை பொழிவது கண்டறியப்பட்டது, ஆனால், அந்த நீரைச் சேமித்து வைத்துக்கொள்கிற வசதி அவர்களிடம் இல்லை, அதனால்தான் மனிதர்கள், கால்நடைகள், விவசாயம் என அனைவருக்கும் நீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று இந்நிறுவனங்கள் புரிந்துகொண்டன. அன்றைய நாளின் உடனடித் தேவைகள், அணைக்கட்டுக் கட்டுவது போன்ற உறுதியான சேமிப்பு வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது, ஓடைகளை ஆழமாக்கி அவற்றில் ஊறும் நீர் அளவைப் பெருக்குவது, அந்தப் பகுதியில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ் துளைக் கிணறுகளுடைய நீர் மட்டத்தை உயர்த்துவது ஆகியவைதான்.

இதற்காக நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், முழுமையான நீர்ச் சேமிப்பு மற்றும் பாதுகாத்தல் திட்டத்தை இங்கு செயல்படுத்தினால், குறைந்தது 120 மில்லியன் லிட்டர்கள் நீரை ஒருமுறை சேமிக்கலாம்; நல்ல ஊறுதலின்மூலம் அந்தச் சேமிப்புத் திறனை 1.5லிருந்து 5 மடங்குவரை பெருக்கலாம்'' என்று தெரியவந்தது. அத்துடன், ஆழ் துளைக் கிணறுகள் மற்றும் கிணறுகளிலும் நீரை ஒரு முழு ஆண்டுக்குப் புதுப்பிக்கலாம், அடுத்த மழைக்காலம் வரும்வரை நிலைமையைச் சமாளிக்கலாம்.

இதற்காக நான்கு கிராமங்கள் அடையாளம் காணப்பட்டன, இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு $96,000ஐத் தாண்டியது, டாடா டெக்னாலஜீஸ், RC புணே ஃபார் ஈஸ்ட், RC ஸ்பிரிங்டேல், RID 6110 (பன்னாட்டுக் கூட்டு நிறுவனம்) மற்றும் புணே பல்கலைக்கழகம் மற்றும் புணே சென்ட்ரல் ஆகிய ஆதரிக்கும் ரோட்டரி சங்கங்கள் வழங்கிய ரூ.22.75 லட்சம் பங்களிப்பின்மூலம் இது திரட்டப்பட்டது. இந்தக் கிராமங்கள்: நக்னத்வாடி (சதாரா மாவட்டம்), பிம்பல்காவ்ன் லிங்கி (ஒஸ்மானாபாத் மாவட்டம்), கட்கர் மற்றும் டம்பே (இரண்டும் புணே மாவட்டம்). இந்தக் கிராமங்களில், மண்ணைத் தோண்டுவதன் மூலம் நான்கு மிகப் பெரிய மழை நீர் சேமிப்புப் பள்ளங்கள் உருவாக்கப்பட்டன.

ஓர் இடத்தில் நடக்கிற நல்லது சுற்றியுள்ள மற்ற இடங்களுக்கும் பயன்படுமல்லவா? இந்த நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தால் அருகிலுள்ள ஆறு கிராமங்களும் பலன் பெற்றன, அங்கெல்லாம் நீர் மட்டம் ஏறியது. இந்த நான்கு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 13,000 மக்கள் இதனால் நேரடியாகப் பலன் பெற்றார்கள், மற்ற ஆறு கிராமங்களில் வாழ்பவர்களுக்கும் கூடுதல் பலன்கள் கிடைத்தன.

திட்டம் தொடங்குகிறது

இந்தத் திட்டத்தின் முதல் பகுதி, ஒஸ்மானாபாத் மாவட்டத்திலுள்ள பிம்பல்காவ்ன் லிங்கி என்ற கிராமத்தில்



தொடங்கியது, இங்கு 2 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு நீர்நிலை தூர் வாரி ஆழமாக்கப்பட்டது. பின்னர், இன்னும் இரண்டு நீர்நிலைகளுக்குத் தூர் வாரப்பட்டது. புதிய பண்ட்கள் உருவாக்கப்பட்டன, ஏற்கெனவே உள்ளவற்றில் நீர் வெளியேறி விடாத படி அவை பழுதுபார்க்கப்பட்டன.

நக்னத்வாடி கிராமத்தில், ஏற்கெனவே உள்ள, மலையிலிருந்து வருகிற நீரோடையொன்றில் 13 அனைகள் கட்டப்பட்டன, இதன்மூலம், நீர் வெளியேறி ஓடிவிடாதபடி தடுக்கப் பட்டது, மேம்பட்ட நீர் ஊறுதலுக்கு வழிவகுக்கப்பட்டது.

கட்கர் கிராமத்தில், கிட்டத்தட்ட செயலில்லாமல் இருந்த ஒரு சேமிப்பு அணையில் சேர்ந்திருந்த மண்ணை அகழ்ந்து எடுத்து ஆழமாக்கினார்கள். இதனால், 131 மில்லியன் லிட்டர் களுக்கு மேல் நீரைச் சேமிக்கவும் ஊறச்செய்யவும் இயன்றது.

டம்பே கிராமத்தில் RC புணே ஃபார் ஈஸ்ட் ஒரு மிகச் சிறந்த பள்ளியை நடத்திவருகிறது, அங்கு மின் கற்றல் வசதிகளும் உள்ளன, இங்கு ஏற்கெனவே இருந்த நீரோடையொன்றில் 11 பண்ட்கள் கட்டப்பட்டன, நீர் வெளியேறாதபடி தடுக்கப்பட்டது, மேம்பட்ட நீர் ஊறுதலுக்கு வழிவகுக்கப்பட்டது.

எங்களுக்கு மிகவும் மன நிறைவளித்த விஷயம், இதனால் 1,120 விவசாயிகள் பலன் பெறுகிறார்கள் என்பதுதான். இந்தத் திட்டம் பல நீர் நிலைகளை உருவாக்கியுள்ளது அல்லது புதுப்பித்துள்ளது, அதனால், இந்த விவசாயிகளுக்குப் புதிய பண்ணை வாய்ப்புகள் உருவாகியுள்ளன, இவை அவர்களுடைய வருவாயை மேம்படுத்தும்.

விவசாயிகளுக்குப் பயிற்சி

இத்துடன், கிரிஷி விஞ்ஞான் கேந்திரா உதவியுடன் 200 விவசாயிகளுக்கு நவீன விவசாய உத்திகள் மற்றும் பண்ணை அடிப்படையிலான சுய தொழில் வாய்ப்புகளைப்பற்றியும், அதைவிட இன்னும் முக்கியமாக, மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு உத்திகளைப்பற்றியும் ரோட்டரியன்கள் பயிற்சிகளை நடத்தினார்கள்.



RC புணே ஃபார் ஈஸ்ட் உறுப்பினர்கள் கிராம மக்களுடன்.

ரோட்டரி-டாடா கூட்டுப்பணி

டாடா டெக்னாலஜீஸின் உலகப் பெருநிறுவன நிலைத்தன்மைத் துறையின் முன்னாள் தலைவரான அனுபவ் கபூர், ஏப்ரல் 2018ல் அவரும் பங்கஜ் படேலும் உள்வரும் RI தலைவர் பேர்ரி ரஸ்ஸினை மும்பையில் சந்தித்ததை நினைவுகூர்கிறார். அவர்கள் இருவரும் எழுத்தறிவுத் திட்டத்தில் சேர்ந்து பணியாற்றியிருந்தார்கள்; ஒரு பெரிய திட்டத்தைச் செய்ய விரும்பினார்கள். ரஸ்ஸின் அவரை டொரன்டோ சந்திப்புக்கு அழைத்தார், CSR பற்றிப் பேசுவதற்காக அதில் அவர் கலந்துகொண்டார். நான் ரோட்டரியின் உலக நல்கைகள் திட்டத்தை ஆராயவேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

இதனிடையே, தில்லியில் அவர் அப்போதைய TRF அறங்காவலரான சுஷீல் குப்தா-வைச் சந்தித்தார், குறிப்பிடவேண்டிய இந்தக் கூட்டம், டாடா டெக்னாலஜீஸின் CSR திட்டத்தை வடிவமைத்தது. அவருடைய அலுவலகத்தில், ஒரு மிகச் சிறந்த காவ்ஹா தேநீர் எனக்குக் கிடைத்தது; இந்திய நீர் மேலாண்மை மற்றும் வடிநிலத் திட்டங்களைப்பற்றிய அவருடைய பேரார்வமும் அறிவும் அடுத்த பல வாரங்களுக்கு என்னைச் சிந்திக்கச் செய்தன. நீர் என்பது இந்தியாவில் மிகவும் முக்கியமான ஒரு பிரச்னை என்றும், நாட்டுடைய, அதன் லட்சக்கணக்கான மக்களுடைய நீடித்த வாழ்க்கைக்கு அது அவசியம் என்றும் அவர் எனக்குப் புரியவைத்தார்'' என்கிறார் கபூர்.

ஜூலை 2018ல், தில்லியிலுள்ள TRF அலுவலகத்தில் TRF உடன் ஓர் MOUல் கையெழுத்திட்டது டாடா டெக்னாலஜீஸ். இதன்படி, கல்வி மற்றும் எழுத்தறிவில் நான்கு உலக நல்கைகளுக்கு ரூ.1 கோடி ஆதரவு அளிக்கப்பட்டது.



டாடா டெக்னாலாஜீஸ் அனுபவ் கபூர், PRID சுஷில் குப்தா மற்றும் RC புணே ஃபார் ஈஸ்ட் முன்னாள் தலைவர் பங்கஜ் பட்டேல்.

டொரன்டோ மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு, நம்முடைய உலகை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக மாற்றுவதற்காக ஒவ்வொரு நாளும்'' ரோட்டரியன்கள் செய்துவருகிற பணியின் அளவும் பெருமையும் அவரைத் திகைக்கவைத்தன'' என்று தொடர்ந்து கூறுகிறார் அவர். சுஷீல் குப்தா-வுடன் தொடர்ந்து விவாதங்களை நிகழ்த்தியபோது, டாடா டெக்னாலஜீஸின் நீர் மேலாண்மைத் திட்டமும், மகாராஷ்டிரத்தின் 4 கிராமங்களில் புணே சங்கங்கள் செய்த நீர்ச் சேமிப்புத் திட்டமும் உருப்பெற்றன.

இந்தத் திட்டம் கிட்டத்தட்ட 18 மாதங்களுக்குத் தொடர்ந்ததால், ரோட்டரியன்கள் அடிக்கடி வயல்களுக்குச் செல்வோம், ஏற்கெனவே உள்ள, ஆனால், இப்போது செயலில் இல்லாத நீர் வழிகளை அகழ்கிற கருவிகள், மற்ற கருவிகளைப் பயன்படுத்தி அகலமாக்கி, ஆழமாக்குவோம். டாடா டெக்னாலஜீஸின் மிகப் பெரிய பங்களிப்பால்தான் இந்தத் திட்டம் செயலுக்கு வந்தது; அதற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். குறிப்பாக, அப்போது அந்நிறுவனத்தின் உலகப் பெருநிறுவன நிலைத்தன்மைத் துறையின் தலைவராக இருந்த அனுபவ் கபூர் (இப்போது அவர் கம்மின்ஸ் இந்தியா அறக்கட்டளையில் ஓர் அறங்காவலராக உள்ளார்) அவர்களுக்கும் நன்றி. எங்களுடைய பன்னாட்டுக் கூட்டு நிறுவனமான ஸ்பிரிங்டேல், USA,

ரோட்டரி சங்கமும் இந்தத் திட்டத்தைக் கண்காணிப்பதில் சுறுசுறுப்பான ஆர்வம் காட்டியது என்கிறார் படேல். இந்தத் திட்டத்துக்குத் தலைமை தாங்குகிற, அதைக் கண்காணிக்கிற பொறுப்பில் தன்னுடைய சங்க உறுப் பினர் ராஜ்குமார் மகர் நியமிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

500 ஹெக்டேர்ஸ் பலன்

இந்தத் திட்டத்தின் ஒரு பலன், இந்தக் கிராமங்களிலிருந்த சுமார் 500 ஹெக்டேர் விவசாய நிலம் மழை நீர்ச் சேமிப்பால் பலன் பெற்றது; நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளதால், இந்தப் பகுதியில் உள்ள ஆழ் துளைக் கிணறுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இப்போது, கிராம மக்களுக்குக் குடிப்பதற்கும் அன்றாட வீட்டு வேலைகளுக்கும் நீர் கிடைக்கிறது, தங்களுக்கு நீரைக் கொண்டுவருவதற்காக அவர்கள் இனி டாங்கர்களை நம்பியிருக்க வேண்டியதில்லை, இதைக் கண்டு நாங்கள் மகிழ்கிறோம்'' என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

குறிப்பாக, பெண்களுக்கு இதில் மிகவும் மகிழ்ச்சி. ஏனெனில், அவர்களுடைய அன்றாட வேலைகளில் மிகவும் கடினமான ஒன்று, அதாவது, சமைப்பதற்காகப் பல மைல் தூரம் நடந்து சென்று நீரைக் கொண்டுவருவது, இப்போது இல்லை.

இந்தத் திட்டத்தின் இன்னொரு நேர்விதமான பலன், வறண்ட நீர் நிலைகளில் இருந்து அகழ்ந்தெடுக்கப் பட்ட, ஊட்டச்சத்துகள் நிறைந்த மண் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டது, இது அவர்களுடைய தரிசு நிலங்களைச் செறிவாக்குகிறது.

விவசாயிகளுடைய பயிர்களுக்கு இப்போது போதுமான நீர் கிடைப்பதால், அவர்களுடைய வருவாய் கூடும், இனிமேல் அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தேடி நகர்ப்புறப் பகுதிகளுக்கு மாறவேண்டியிருக்காது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நீர் தொடர்ந்து கிடைப்பதால் பல பயிர்களை விளைவிக்கலாம், இனி வரும் ஆண்டுகளில் நம் விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயரும்'' என்று தொடர்ந்து தெரிவித்தார் படேல்.

இந்தத் திட்டம் நீடித்துத்

தொடரவேண்டும் என்பதற்காக, மேம்பட்ட வருவாய் உருவாக்க வாய்ப்புகளுக்கான பயிற்சியில் எப்போதும் அழுத்தம் அளிக்கப் பட்டது. மீண்டும், கிருஷி விஞ்ஞான் கேந்திரா உதவியுடன் சுய வேலை வாய்ப்பில் கவனம் செலுத்துகிற ஒரு முழுமையான பயிற்சித் திட்டம் கிராமத்து மக்களுக்காக நடத்தப்பட்டது. நாற்றங்கால் மேலாண்மை, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், மண் புழு உரம் உருவாக்குதல், மேம்பட்ட பண்ணைப் பலன்கள் மற்றும் பயிர்ப் பாணிகளைப் பெறுவதற்காக ஓர் உயர் தொழில்நுட்பப் பாலிஹவுஸை அமைத்தல் போன்ற தலைப்புகளில் இந்தப் பயிற்சியின் பாடங்கள் அமைந்தன. தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் ஆட்டுப் பண்ணை போன்ற தொழில்முனைவு அடிப்படையிலான திட்டங்களிலும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி, கிரிஷி விஞ்ஞான் கேந்திரா வளாகத்திலும் விவசாயிகளுடைய வயல்களிலும் நடைபெற்றது, கேந்திராவைச் சேர்ந்த சிறப்பு அறிவியல் அறிஞர்கள் இந்தப் பயிற்சி யை நடத்தினார்கள்.

இந்தத் திட்டத்தின் வெற்றிக்கான முக்கியக் காரணங்களில் ஒன்று, உள்ளூர்ச் சமூகத்தினர், அதாவது, கிராமவாசிகள், விவசாயிகள் என இருதரப்பினருமே தொடக்கத்திலிருந்து இதற்குப் பங்களித்ததுதான்.

நீர் தான் அவர்களுடைய உயிர்மூச்சு என்பதால், இந்தத் திட்டத்தில் அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள், நீர்ப் பள்ளங்களுக்கு நிலம் அளித்தார்கள், உழைப்பை வழங்கினார்கள், தொலைநோக்கில் நீடித்திருக்கிற ஒரு திட்டமாக அது ஆகவேண்டும் என்பதை உறுதி செய்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

நீர்நிலைகளைப் பராமரிக்கிற, அவற்றில் அவ்வப்போது தூர் வாருகிற பொறுப்பு கிராம மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; இதன் மூலம், அவர்கள் நீடித்த நீர் வரவைப் பெறுவார்கள், சேமிப்பு வசதி இல்லாததால் மழைக்கால மழைப்பொழிவு ஓடிச் சென்று காணாமல் போய்விடாது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இந்த ரோட்டரியன்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த பரிசு, இந்தத் திட்டம் நிறைவடைந்தபிறகு, உள்ளூர் MPயான டாக்டர் அமுல் கோல்ஹே, அவருடைய தொகுதியின்கீழ் வருகிற, மழை நீர்ச் சேமிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்த ஒரு கிராமத்துக்குத் தன்னுடன் வரும்படி ரோட்டரியன்களைக் கேட்டுக் கொண்டார். அங்கு, விளிம்புவரை நீர் நிரம்பியிருந்த நீர்நிலைகளைப் பரிசோதித்தபிறகு அவர் சொன்னார்: இது ஒரு மிகச் சிறந்த பணி; 17 ஆண்டுகளில் அரசாங்கத்தால் செய்ய இயலாததை ரோட்டரியன்கள் சாதித்து விட்டீர்கள், என்று பாராட்டினார்.■

இந்தப் புயலையும் வலுவுடன் எதிர்கொள்வோம்

ஒரு பிரச்சினைக்கும், ஒரு சவாலுக்கு இடையில் மாறுபாடுகள் உள்ள உலகம் ஒன்று உள்ளது. ஒரு மாபெரும் குளவியை, ஒரு தேனீ, தனியாக எதிர்கொண்டால், தேனீக்கு பிரச்சினையாகும். ஆனால், அதே தேனீ, அந்தக் குளவியை, மற்ற தேனீக்களின் திரளோடு எதிர்கொண்டால், பிறகு அந்தக் குளவிக்கு பிரச்சினையாகும்.

இது இயற்கையில் உண்மையாகும், இது தான் மனிதனின் இக்கட்டான நிலையும் கூட. எனவே, நான் எதிர்கொள்ளும் சூழ்நிலையானது, என்னிடம் உள்ள வளங்களை விட அதிக மாக இருந்தால், அதனை ஒரு பிரச்சினை என்று கூறலாம். இருப்பினும், நான் எதிர்கொள்ளும் சூழ்நிலையை விட என்னிடம் உள்ள வளங்கள் அதிகமாக இருந்தால், அது ஒரு சவால் மட்டுமே. சில நேரங்களில், நாம் நமது பிரச்சினைகளை மிகைப்படுத்தி, அவற்றைச் சமாளிக்கும் நமது திறனைக் குறைத்து மதிப்பிடுகிறோம்.

கோவிட்–19 தொற்றுநோய், ரோட்டரி அறக்கட்டளையை வென்றுவிடும் ஒரு சூழ்நிலை இருப்பது போல் தோன்றியது. ஆனால், விஷயங்கள் செல்லச் செல்ல, அவ்வாறு செய்வதற்கு நாங்கள் அதனை அனுமதிக்கவில்லை. ஜூன் 4 அன்றுள்ள நிலவரப்படி, இந்த மூன்று மாதகாலத்தில், $5.2 மில்லியனுக்கான 208 பேரிடர் தீர்வு மானியங்களுக்கும் $13.8 மில்லியன், 169 புதிய உலகளாவிய மானியங்களுக்கும் நாங்கள் நிதியளித்துள்ளோம். அறக்கட்டளை நிதியுடன் தனிப்பட்ட ரோட்டரியர்களின் தாராள மனப்பான்மையையும், மற்றும் பல நேரங்களில், அந்தத் திட்டங்களைப் பெரியதாகவும் மிகவும் தாக்கமுள்ளதாகவும் மாற்றுவதற்காக இதர பெருநிறுவன நிதிகளையும் நாங்கள் பயன்படுத்தியுள்ளோம்.

தொற்றுநோய் காரணமாக முழு அடைப்பு செய்யப்பட்டிருந்த போது, முழு அடைப்பு இல்லாதிருந்தால் நாங்கள் என்ன செய்திருப்போமோ அதைப் போலவே நிதி திரட்டி திட்டங் களைச் செயல்படுத்திக் கொண்டிருந்தோம். இந்த ரோட்டரி அறக்கட்டளையானது 100 வருடங்களுக்கும் மேலானது, இது ஏற்கனவே பல புயல்களைக் கண்டுள்ளது – அவற்றில் சில இலேசானவை மற்றும் பிற உலகிற்கு பேரழிவை ஏற்படுத்தியவை. ரோட்டரியர்களின் வலிமை, தியாகம், இரக்கம் மற்றும் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அளவின் காரணமாக, இந்த அறக்கட்டளை புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும், உத்வேகத்துடனும் எதிர்காலத்தை எதிர் கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

அதன் மீது நீங்கள் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கும் வரையில், நமது அறக்கட்டளையானது, வலுவானதாகவும், தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும், இந்த தொற்றுநோயிலிருந்து மீண்டுவரும்.

K R ரவீந்திரன்
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

வருடாந்திர நிதியை பலப்படுத்துவோம்

கடந்த ரோட்டரி ஆண்டு, நம் வாழ்நாளில் நாம் கண்டிராத ஒன்றாக இருந்தது. உலகம் கோவிட் பெருந்தொற்றை எதிர்கொள்கிறது, பல விலைமதிப்பற்ற உயிர்களை இழந்திருக்கிறோம், மேலும் செயல்படக்கூடிய தடுப்பூசி ஒன்று உருவாக்கப்படும் வரை, நாம் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும், வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

சிக்கலான காலங்கள் இருந்தபோதிலும், புதிய மாவட்டத் தலைமை அந்தந்த கிளப் தலைவர்கள் மற்றும் ரோட்டரி உறுப்பினர்களை நமது ரோட்டரி அறக்கட்டளைக்கு தாராளமாக பங்களிக்க ஊக்குவித்துள்ளது.

2019–20ஆம் ஆண்டில், நான்கு மண்டலங்களில் உள்ள மாவட்டங்கள் $22 மில்லியனுக்கும் அதிகமாக பங்களித்தன, இந்தியா மட்டுமே $20 மில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கியது மூலம் உலகளவில் இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. TRF பங்களிப்பில் முதல் 50 மாவட்டங்களில் நமது மாவட்டங்களில் ஏழு உள்ளன என்பதும் பாராட்டத்தக்கது.

இந்த ரோட்டரி ஆண்டு சமமாக சவாலாக இருக்கும். 2019–20ஆம் ஆண்டுக்கான நமது மொத்த பங்களிப்புகள் குறித்து நான் பொதுவாக மகிழ்ச்சியடைகையில், வருடாந்திர நிதிக்கு (AF) நாம் செய்த பங்களிப்பு குறித்து ஏமாற்றமடைகிறேன், இந்த ஆண்டு நம்முடைய AF உயர்ந்திடும் என்று நம்புகிறேன். அப்போதுதான் உலக நிதியம் அதிகரிக்கும், DDFம் கூட.

அதனால்தான் TRF ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரிடமிருந்தும் கோருகிறது; ஒவ்வொரு ரூபாயும் கணக்கிடப்படுவதோடு எந்த பங்களிப்பும் மிகச் சிறியதல்ல. நம்முடைய மண்டலங்களில், ரோட்டரி ஆண்டின் இறுதியில்தான் நாம் பங்களிப்புகளைச் செய்கிறோம். இது RISAO ஊழியர்களுக்கு பெரும் அழுத்தத்தை கொடுக்கிறது. எனவே, இப்போதே TRFக்கு பங்களிப்புகளைத் தொடங்குவோம். நம்முடைய உதவிக் கரங்களை நாடும் அனைவருக்கும் ரோட்டரி வாய்ப்புகளை அளிக்கிறது. ஆனால் TRF உங்கள் தாராள பங்களிப்புகளால் மட்டுமே அவர்களுக்கு உதவ முடியும்.

குலாம் வாஹன்வதி
TRF அறங்காவலர்

District Wise TRF Contributions as on June 2020 (unaudited)

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
			India				
2981	152,977	17,179	0	105,194	275,350	593	13.1
2982	155,545	48,840	230,824	110,730	545,939	553	18.3
3000	162,225	3,008	240,993	44,089	450,315	266	5.2
3011	234,763	4,975	471,407	6,667	717,812	551	15.5
3012	294,209	51,500	549,585	140,002	1,035,296	1129	30.4
3020	90,770	67,271	2,250	12,129	172,420	175	4.6
3030	48,026	18,862	104,405	2,828	174,120	85	1.8
3040	44,331	3,274	44,506	0	92,111	175	8.6
3053	128,215	6,031	169,544	0	303,789	216	7.5
3054	25,405	3,811	225,047	0	254,264	74	1.3
3060	287,416	112,352	460,629	76,161	936,558	1852	45.8
3070	45,547	1,904	28,430	0	75,881	214	6.9
3080	182,155	31,540	19,639	1,013	234,348	534	15.6
3090	42,111	703	736	2,000	45,549	117	5.9
3100	49,963	100	8,978	0	59,040	119	6.3
3110	41,706	1,810	1,145	0	44,661	65	1.7
3120	69,083	1,317	140,199	0	210,599	153	4.6
3131	302,873	12,495	1,293,289	43,250	1,651,907	1468	28.0
3132	35,829	969	45,378	30,000	112,177	212	5.7
3141	856,811	25,775	2,862,955	245,425	3,990,967	2010	36.6
3142	327,646	9,971	127,826	80,513	545,956	1171	36.2
3150	112,582	8,205	76,291	204,668	401,745	705	19.8
3160	34,675	3,715	0	19,422	57,812	136	5.1
3170	340,464	24,118	336,107	13,087	713,776	1192	21.3
3181	346,515	17,874	70,509	0	434,898	856	24.0
3182	93,713	7,629	26,593	0	127,935	370	11.8
3190	677,919	57,941	456,376	1,287	1,193,523	2227	46.7
3201	229,711	39,960	971,751	35,509	1,276,931	928	17.3
3202	239,324	84,325	405,046	26,044	754,739	461	9.3
3211	34,165	1,053	166,869	1,422	203,509	41	0.9
3212	274,585	79,946	14,946	9,482	378,959	207	5.2
3231	7,189	2,082	45,390	0	54,661	79	2.1
3232	281,106	105,416	795,858	19,500	1,201,879	841	16.0
3240	334,466	47,989	38,333	0	420,788	823	27.1
3250	81,091	2,477	73,906	14,000	171,474	332	8.7
3261	43,605	0	76,425	0	120,031	64	2.5
3262	73,036	6,069	5,507	1,000	85,612	164	4.9
3291	151,755	7,427	111,005	16,900	287,087	248	7.0
3220 Sri Lanka	109,064	12,357	150,829	1,000	273,249	270	13.8
3271 Pakistan	9,785	110,692	30,020	0	150,497	16	1.2
3272 Pakistan	46,170	22,694	300	0	69,164	137	8.3
3281 Bangladesh	185,649	11,145	435,793	8,000	640,586	559	9.8
3282 Bangladesh	41,009	15,886	16,477	2,000	75,373	133	2.8
3292 Nepal	273,376	24,143	1,778,537	25,900	2,101,956	881	18.9

Source: RI South Asia Office

ஜொலிக்கும் நட்சத்திரம் “மாட் கபாரஸ்”

ராஜேந்திர சாபூ

கோட்டை விழுந்து விட்டது. ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. ஆசியாவின் முக்கியப்புள்ளியாக இருந்தவர் மறைந்துவிட்டார். ரோட்டரி மூலம் அவர் உலகிற்கு கொடையாளியாக இருந்தார். ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வந்தவர் இப்போது நம்முடன் இல்லை. அவர் தான் மாட் அர்மாண்டோ டெங்கோ கபராஸ். அவர் 96 வயதில் மறைந்ததை நாம் வாழ்க்கையின் கொண்டாட்ட மாகவே கருதவேண்டும். இந்த உலகத்தில் யாரும் நிரந்த மானவர்கள் இல்லை. ஆனாலும் அவர் தமது சிறந்த சேவைகளினால் மறைந்தும் மறையாமல் இருக்கிறார்.

1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மாவட்ட ஆளுநர் என்ற முறையில் பிலிப்பின்ஸ் நாட்டின் மணிலாவில் உள்ள ரோட்டரி பயிற்சி நிலையத்தில் பயின்றபோது நான் முதன் முறையாக மாட் கபராஸை சந்தித்தேன். ஆனால், பின்னாளில் எனது ரோட்டரி பயணத் தில் அவர்தான் எனக்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் இருப்பார் என்பது எனக்கு அப்போது தெரியாது.

1979இல் மாட் RI இயக்குநரானார். 1979 செப்டம்பரில் அப்போதைய RI தலைவர் ஜிம் போமர் ஜூனியர் பிலிப்பின்ஸ் வந்திருந்தார். சர்வதேச அளவில் போலியோ ஒழிப்பு நடவடிக்கையை ரோட்டரி தொடங்கியபோது குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்து அத்திட்டத்தை அவர் தொடங்கிவைத்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய மாட் கபாரஸ், “பெரிய விஷயங்களுக்கு எப்போதும் ஆரம்பம் சிறியதாகத்தான் இருக்கும்” என்று கூறினார். பிலிப்பின்ஸில் உள்ள 5.3 மில்லியன் குழந்தைகளுக்கு RI மூலம் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கு காரணமாக இருந்தவர் மாட் கபாரஸ் தான். தமது பதவிக்காலத்தின் இரண்டாவது ஆண்டில் மாட், RI துணைத் தலைவரானார். அப்போது ரோட்டரி தலைவராக இருந்தவர் ரோல்ஃப் கிளாரிச்.

மாட் RI துணைத் தலைவரானதை அடுத்து 1981-83இல் நான் RI இயக்குநராகும் வாய்ப்பு கிடைத்தது. தெற்கு ஆசியாவில் மண்டலம் 2இல் இந்தியா இடம் பெற்றது. ஜப்பானைத் தவிர மற்ற ஆசிய நாடுகள் மண்டலம் 4இல் பெற்றுள்ளன. இதில் கொரியாவும் பிலிப்பினஸும் அடங்கும். மண்டலம் 2 மற்றும் 4க்கு மாறி மாறி RI இயக்குநர் நியமிக்கப்படுவர். தனது பதவியை மாட் ராஜினாமா செய்ததை அடுத்து அந்தப் பதவி எனக்குக் கிடைத்தது. இதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் மாட் என்னை புகழ்ந்து பேசினார்.

அந்த நிமிடத்திலிருந்து அவர் என்னைப் புகழ்ந்து பேசிய காரணத்துக்காக அல்ல, அவர் மீது இருந்த மரியாதை காரணமாக அவரிடம் நெருங்கிப் பழகத் தொடங்கினேன். அவரை குருவாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டேன். அவர் என்னைவிட மூத்தவர். அவர் 1964-65ல் மாவட்ட ஆளுநராக இருந்தவர். நான் 1976-77ல் தான் மாவட்ட ஆளுநராக முடிந்தது. அவர் என்னைவிட அதிக கல்வித் தகுதியும், வெளியுலகத் தொடர்பும் கொண்டிருந்தவர். எனவே நிர்வாகக்குழு தொடர்பான விவகாரங்களில் அவரிடம் ஆலோசனை கலப்பதை நான் வழக்கமாகக் கொண்டிருந்தேன். சிக்கலான நேரங்களில் அவரின்

PRIP *மாட் கபராஸ் மற்றும்* PRIP *இராஜேந்திர சாபூ.*

ஆலோசனைகள் எனக்கு உதவிகரமாக இருந்தது. மாட் மனைவி நிதா எனது மனைவி உஷாவை தனது சகோதரிபோலவே கருதினார். மாட், நிதா இருவருமே எனது இரண்டு ஆண்டு பதவிக்காலத்தில் வழகாட்டினர்.

1984ம் ஆண்டில், 1986-87ம் ஆண்டுக்கான RI தலைவரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் நான் உறுப்பினராக இடம்பெற்றிருந்தேன். இந்த முறை அமெரிக்கர் அல்லாத ஒருவர் தான் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். தென்னாப்பிரிக்காவிலிருந்து மூத்த ரோட்டரி உறுப்பினர் கோர்டன் வாலன்டைன் களத்தில் இருந்தார். இதர வேட்பாளர்களில் மாட் கபராஸும் ஒருவர். கோர்டன் வாலன்டைனுக்காக எனது குரு ஹூயூக் ஆர்ச்சர் ஆதரவு திரட்டினார். இனவெறி ஆதிக்கம் நிறைந்த தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த ஒருவர் தலைவர் பதவிக்கு வருவதில் எனக்கு உடன்பாடு இல்லாததால் மாட் கபாரஸை ஆதரித்தேன். இறுதியில் அவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரோட்டரி நகர்ப்புறங்களிலும் செழிப்பான பகுதிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறது. கிராமங்களையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அக்கறை செலுத்துவதில்லை என்பது மாட் கபராஸுக்கு கவலை அளித்தது.

தமது இருப்பிடத்தைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் பெண்கள், நீண்ட தொலைவு சென்று குடங்களில் குடிநீர் சுமந்து வருவதைப் பார்த்து, இவர்களுக்கு என்று வீட்டின் அருகில் ஓர் கிணறு இருந்தால் தண்ணீருக்காக இப்படி அலையவேண்டியதில்லையே என மாட் நினைத்தார். இதையடுத்து 1986ல் Rotary Village Corps (ரோட்டரி தொண்டர் குழு) திட்டத்தை ஏற்படுத் தினார். என்னை அக்குழுவின் தலைவராக நியமித்து திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கினார். பின்னர் இந்த திட்டம் நகர்ப்புறங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு "ரோட்டரி சமுதாயக் குழு" என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இதையடுத்து இந்த திட்டத்தின் தந்தை என மாட் அழைக்கப்பட்டார். 1987ல் மூனிச்சில் நடந்த மாநாட்டில் நான் பேசும்போது,

வலதிலிருந்து: PRIP *மாட் கபாரஸ் அவர் மனைவி நிதா மற்றும் உஷா,* PRIP *இராஜேந்திர சாபு.*

உலகில் கிராமங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருக்கும் மனித வளங்களைப் பயன்படுத்தி சுய உதவிக்குழுக்களை ஏற்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதே RVCயின் நோக்கம் என்று கூறினேன். இது தலைவர் கபராஸ் உள்ளிட்ட மாநாட்டில் பங்கேற்ற பலரும் கைதட்டி வரவேற்றனர்.

மாட்-ன் தொநோக்குப் பார்வைக்கு மற்றொரு உதாரணம் அவர் தலைவராக இருந்தபோது ஷெர்மன் அவென்யூவில் ஒரு இடத்தை வாங்கி அதை ரோட்டரியின் புதிய தலைமையகமாக மாற்றியதுதான். முன்பு ரோட்டரி தலைமையகம் 1560, ரிட்ஜ் அவென்யூ, ஈவான்ஸ்டன் என்ற முகவரியில் செயல்பட்டு வந்தது. இது RIக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நிதி நெருக்கடியை ஏற்படுத்திய போதிலும் பின்னர் சிறந்த முதலீடாக கருதப்பட்டது. அவரை ஒரு தீர்க்கதரிசியாகவே ரோட்டரியினர் பார்க்கின்றனர்.

1986ல் மாட் தலைவராக இருந்தபோது ஒரு திருப்பம் ஏற்பட்டது. கலிபோர்னியாவில் டூவர்ட் ரோட்டரி சங்கத்தில் பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றது சரியான நடவடிக்கைதான் என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது பெண்கள், ரோட்டரியில் நுழைவதற்கு வாய்ப்பாக அமைந்தது. ரோட்டரியில் பெண்களைச் சேர்க்கலாமா என்ற நீண்டகால விவாதத்திற்கு இதன் மூலம் விடை கிடைத்தது. 1989ல் சிங்கப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் பாலின பாகுபாடுகள் நீக்கப் பட்டு, ரோட்டரியில் பெண்களை அனுமதிக்கும் வகையில் ரோட்டரியின் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

மாட் உடனான எனது பயணத்துக்கு திரும்புவோம். 1989ம் ஆண்டுக்கான புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நேரம் வந்தபோது நான் இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று மாட் குறிப்பாக உணர்த்தினார். அது எனக்கு சரி எனப்பட்டது. எனினும் மற்றொரு நல்ல நண்பரான டாக்டர் பென்னி சாண்டோஸ், "உங்களுக்கான நேரம் வந்துவிட்டது. நீங்கள் தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம்" என்றார். ஆனால், மாட் அனுமதி இல்லாமல் நான் களத்தில் இறங்கமாட்டேன் என்று தெரிவித்துவிட்டேன். பின்னர் பென்னி, கொல்கத்தா வந்தார். நானும் அங்கு இருந்தேன். கொல்கத்தாவில் இருந்தபடியே மாட் உடன் பென்னி சுமார் 45 நிமிடங்கள் பேசினார். இந்த ஆண்டு ராஜாதான் தலைவராக வேண்டும் என்று வலியுறுத்தி அவரின் ஒப்புதலைப் பெற்றார். நான் டிரஸ்ட் தலைவராக இருந்தபோது எனக்கு RI தலைவராகும் வாய்ப்பு கிடைத்தது. இதை என்னால் மறக்க முடியாது.

இந்தியாவை மிகவும் நேசித்தார் மாட் கபாரஸ். RI இயக்குநர், RI

தலைவர் பதவி வகித்தபோது இந்தியா வந்துள்ளார். சண்டீகருக்கு வந்து தொழு நோயாளிகளுக்காக புதிதாக கட்டப்பட்ட நிரந்தர வீடுகளை அவர் திறந்துவைத்தார். ரோட்டரி சங்கம் சண்டீகர் மற்றும் ரோட்டரி மிட்-டவுன் சண்டீகர் இரண்டும் இணைந்து செயல்படுத்திய திட்டம் இது. தொழு நோயாளிகள் பிச்சை எடுப்பதை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு முறையான சிகிச்சை அளித்து குணமடைந்தவர்களுக்கு மறுவாழ்வும் வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டது.

இதுபோன்ற திட்டங்களைத்தான் மாட் மற்றும் அவரது மனைவி நிதா இருவரும் விரும்பினர். அதனால்தான் பதவிக்காலத்தில் இந்தியா வந்தனர்.

போலியோ ஒழிப்பின் தீவிர ஆதரவாளர் மாட். அதே நேரத்தில் எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்திலும் அவர் ஆர்வமாக இருந்தார்.

மாட் மற்றும் நிதா தலைவர் கார்லோஸ் கான்ஸெகோ மற்றும் மரியா அரோராவுக்கு உதவிகரமாக இருந்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. உலகில் போலியோ ஒழிப்புத் திட்டத்தை ரோட்டரி முன்னெடுத்துச் செல்ல முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் கார்லோஸ்தான்.

1988ல் அப்போது பிலிப்பின்ஸ் நாட்டு அதிபராக இருந்த கோரஸான் அகீனோ நல்லாட்சி நிர்வாக்க குழுவின் தலைவராக மாட் கபராஸை நியமித்தார். இந்தக் குழுவின் நான்காவது தலைவர் மாட். முன்னாள் அதிபர் மார்கோஸ் முறைகேடான வகையில் சம்பாதித்த சொத்துக்களை பறிமுதல் செய்ய காரணமாக இருந்தவர்களில் மாட் கபராஸும் ஒருவர்.

உஷாவும் நானும் கலிபோர்னியாவில் உள்ள வீட்டில் மாட் மற்றும் நிதாவை சந்தித்தோம். அவர்கள் இருவரும் எங்கள்மீது காட்டிய பாசம் அளவிட முடியாதது. சில நாட்களில் நிதாவின் உடல்நிலை மிக மோசமானது. வீட்டிற்கு விருந்தினர்களைக் கூட அழைக்க முடியாத நிலை. சர்வதேச மாநாட்டில் பங்கேற்க வரும்போதெல்லாம் மாட், நிதாவைப் பற்றிய செய்திகளையும் புகைப்படங்களையும் எங்களிடம் பகிர்ந்துகொள்வார்.

ஒரு கிறிஸ்துமஸ் கடிதம்

PRIP *மாட் கபாரஸ்* PRIP *சாபூவுக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம்:*

மக்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கும், வாழ்த்துச் சொல்வதற்கும், நண்பர்களுக்கு பரிசு அளிப்பதற்கும் மகிழ்ச்சியான நேரத்தை உணரமுடியாமல் ஒரு குழப்பமான நிலை உள்ளது. இது கிறிஸ்துமஸ் நேரம். பலர் தங்கள் குழந்தைகள் அல்லது பேரக்குழந்தைகளைப் பற்றி தற்பெருமை பேசுவார்கள். நான் தற்பெருமை பேசுவதற்கு கடந்த காலங்களில் உருப்படியாக ஏதும் செய்யவில்லை. மேலும் அழகான வார்த்தைகளைச் சொல்லி வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்கும் திறனும் என்னிடம் இல்லை. ஆனால், கடவுளின் கிருபையால் நான் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறேன். நான் எதையும் புரிந்துகொள்ளும் அளவுக்கு தெளிவாக இருக்கிறேன். அதுவே எனது கிறிஸ்துமஸ் வாழ்த்து கடிதங்களின் உள்ளடக்கமாக இருந்தது. இதுவும் கூடத்தான். வித்தியாசமான சூழ்நிலையில், எனது மனைவி இல்லாமல் தனியாக ஒருவித தயக்கத்துடன் இதை எழுதுகிறேன். எனினும் எழுத்தின் போக்கை அது பாதிக்காது என்றே கருதுகிறேன். மனைவிகளை இழந்து மறுமணம் செய்துகொண்ட முன்னாள் தலைவர்கள் 7 பேர் இதைப் புரிந்துகொள்வார்கள்.

தலைவர் பதவிக்கு நீங்கள் போட்டியிட முற்பட்டபோது உங்கள் பெயரை பரிந்துரை செய்யப்படுவதை நான் தடுத்து நிறுத்த முயற்சித்த தான உங்கள் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கிறேன். நான் தடுத்தது உண்மைதான். அந்தப் பதவியை ஏற்க நீங்கள் இன்னும் தயாராகவில்லை என்ற காரணத்திற்காக அல்ல, ரோட்டரி நிர்வாகக்குழுவில் நீங்கள் வகித்துவந்த பதவிக்காலம் முடிந்த பின்னர் நீங்கள் தலைவர் பதவிக்கு வந்தால் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதால்தான். எனினும் நீங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இந்தியாவே எழுச்சி கொண்டு உங்களை வரவேற்றது. ரோட்டரி இந்தியா அன்றிலிருந்து வளர்ச்சி காணத் தொடங்கியது. உங்களது தலைமைக்கும் எங்களின் அன்பான உஷாவின் ஆதரவுக்கும் நன்றி.

இந்த நாட்களில் நான் எப்படி என் வாழ்க்கையை நடத்திச் செல்கிறேன் என்பதை விளக்கியுள்ளேன். நேரத்தை கடத்திச் செல்கிறேன் என்று சொல்லுவார்கள். ஆனால், காலம் தான் வாழ்க்கை. ரோட்டரி மூலம் மற்றவர்களுக்கு என்னால் தொடர்ந்து சேவை செய்ய முடியும். தலைவர்கள் விஷயத்தில் எனக்கு அதிருப்தி இருந்தாலும் நான் ரோட்டரியுடன் தொடர்பில் இருக்கிறேன். எனது நண்பர்களில் பெரும்பாலானவர்கள் ரோட்டேரியன்கள்தான். ஆனாலும் என்னால் ஓரளவே நெருங்க முடியும். நான் இறந்தபிறகும் எனக்காக சேவை செய்யும் நண்பர்களால் ஈர்க்கப்பட்டேன். இந்த கடிதத்தை நான் யாருடன் பகிர்ந்து கொள்கிறேனோ அவர்கள், நான் இறந்த பிறகும் சேவை செய்வதற்கான வழிகளில் என்னுடன் இணைந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். டிசம்பர் 28 அன்று எனது பெயரில் நண்பர்கள் நிறுவும் அறக் கட்டளையின் முக்கியத் திட்டங்களை அவர்கள் மனமுவந்து ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.■

தம்பதியினர் தங்கள் இளைய மகனும், மகளும் இறந்தபோது சோகத்தில் ஆழ்ந்தனர். விதியை எண்ணி வாழ்க்கை பயணத்தைத் தொடர்ந்தனர். நிதா இறந்த போது ஏற்பட்ட தனிமையை மாட் ஏற்றுக் கொண்டார். ரோட்டரியையும் தனது குடும்பத்தையும் நேசித்தார். அவருக்கு இரண்டு மகன்கள். ஜார்ஜ், அவரது மனைவி சாரீஸா. மாட் அவரது மனைவி சோனா. அவர்களுக்கு ஒரு மகள் பிலர் டீ வில்லா. அவருடைய கணவர் ஜோவி மற்றும் பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன்கள். அவரது தெய்வீகத்தன்மை அவரை கடவுளிடம் அழைத்துச் சென்று விட்டது. அவர் மறைந்தாலும் நட்சத்திரமாக ஜொலிக்கிறார்.■

PRIP மாட் கபாரஸ் இந்திய ரோட்டரி, ரோட்டரி நியூஸுக்கு பாராட்டு

PRIP *கபாரஸ் அவர்கள் அக்டோபர்* 4, 2018, *அன்று சில முத்த ரோட்டரி தலைவர்களுக்கு எழுதிய கடிதம்.*

முதலில், அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள சுஷில் (குப்தா) அவர்களுக்கு வாழ்த்துக்கள். நான் பதவி வகித்த ஆண்டில் கவர்னராக இருந்த ஒருவர் இப்போது பிரசிடென்டாக பொறுப்பேற்க அழைக்கப்பட்டிருக் கிறார் என்பது எனக்கு பெருத்த மகிழ்ச்சியைத் தருகிறது. அதைவிட, நீங்கள் தற்போது சுற்றுமுற்றும் உள்ள தேவையுள்ளோருக்குத் தொண்டாற்றுவதில் களமிறங்கி இருக்கிறீர்கள், அதன் பலன்களையும் கண்கூடாகப் பார்க்க முடிகிறது என்பது மிகுந்த ஆனந்தத்தைத் தருகிறது.

மேலும், ரவி சங்கர்-பாவ்லா தம்பதியினர் நமது TRFக்கு வழங்கிய $14.7 மில்லியன் நன்கொடைக்காக நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை. ரோட்டரியின் முன்னணி வீரர்கள்-அதாவது நீங்கள்-இந்நாட்டு ரோட்டரிக்கு ஏற்படுத்திய முன்னேற்றமே அவர்களின் கொடை உள்ளத்தில் கிளர்ச்சியைத் தூண்டியது. உங்களை வளமார வாழ்த்துகிறேன்!

இது மட்டுமல்ல, ரோட்டரி நியூஸ் இதழுக்கும் இதில் முக்கியப் பங்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, ரோட்டரியின் தொண்டுகளை நேர்மையோடு வெளிக்கொண்டு வந்ததால் தான் நமது உன்னத நன்கொடையாளர்கள் அதுபற்றிப் புரிந்துகொள்ள முடிந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த இதழ் தொடர்ச்சியான முன்னேற்றம் கண்டுள்ளது, இதுவெல்லாம் இதன் புதிய இதழாசிரியரின் பங்களிப்பே என்று சொன்னால் மிகையாகாது. நமது அமைப்பின் குரல், ரோட்டரி நியூஸ் ஏற்கனவே நமது அதிகாரப் பூர்வ பத்திரிக்கையை விட சிறப்புற்று விளங்குகிறது எனலாம்.

மாட் கபாரஸ், PRIP (1986–87),
பிலிப்பைன்ஸ்.

ஜீன் 30, 2015 *அன்று இவான்ஸ்டன்* RI *தலைமை அலுவலகத்தில்* PRIP *கேரி ஹுவாங்கிடமிருந்து* K R *ரவீந்திரன் பதவி ஏற்கும் போது* PRIP *மாட் கபாரஸ் அவர்களுடன்.*

நிம்மதியாக ஓய்வெடுக்கட்டும் மாட் கபாரஸ்

கல்யாண் பானர்ஜி

உங்களின் ரோட்டரி வாழ்க்கையில், நீங்கள் அறிந்திருந்த, நீங்கள் விரும்பும் ஒருவர், நீண்டகாலம் கலிபோர்னியாவிலும் இதர நகரங்களிலும் வாழ்ந்திருந்தாலும் அவர் இப்போது மறைந்து விட்டார் என்ற செய்தியை நம்புவது கடினமாக உள்ளது. ஏனெனில் மாட் கபாரஸ் (MAT Caparas) பற்றி நினைக்கும்போதெல்லாம், அவர் ஒரு புத்திசாலித்தனமான, நகைச்சுவை உணர்வுடன்கூடிய மனிதர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

ஆனால், உண்மையில் மாட் கபாரஸ் பற்றி எழுதுவதற்கு நான் ஒன்றும் சிறந்தநபர் அல்ல; PRIP ராஜா சாபூ தான் அவருக்கு நெருக்கமாக இருந்தவர். ரோட்டரி நிர்வாகக்குழுவில் அவர் இணை இயக்குநராகவும் இருந்தவர். ஆனால், நான் எப்போதுமே கபாரஸ் மீது பிரியம் கொண்டவன். ஒரு தலைவர் என்ற முறையில் அவரது பார்வையும், சிந்தனையும் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

மாட் கபாரஸ், 1923ஆம் ஆண்டு டிசம்பரில் பிலிப்பின்ஸ் நாட்டில் குயபோவில் பிறந்தார். புலகானில் பள்ளிப்படிப்பை முடித்தார். 1950இல் பட்டதாரியானார். தந்தையைப் போலவே வழக்குரைஞராக பயிற்சிபெற்ற கபாரஸ், 1980இல் மணிலாவுக்கு இடம் பெயர்ந்து அங்கு வழக்குரைஞர் தொழிலில் ஈடுபட்டு வந்தார். மணிலாவில் ரோட்டரி மாவட்டம் 980ன் ஆளுநராகப் பணியாற்றினார். ஆசியாவில் முதல் ரோட்டரி சங்கம் 1919ஆம் ஆண்டில் மணிலாவில்தான் தொடங்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. பின்னர் ரோட்டரி சங்கத்தில் படிப்படியாக உயர்ந்து RI இயக்குநரானார். அதைத் தொடர்ந்து 1986-87ல் RI தலைவரானார். ரோட்டரி தலைவர் பதவியில் இருந்த, பிலிப்பின்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரே நபர் மாட் கபாரஸ்தான்! ரோட்டரிக்கு சேவையாற்றிய அதேநேரத்தில் தனது நாட்டுக்கும் தொடர்ந்து பணியாற்றினார். அப்போது அதிபராக இருந்த கோரி அகினோவின் நல்லாட்சி நிர்வாகத்தில் கபாரஸும் இடம்பெற்றிருந்தார்.

மாட் கபாரஸ் எப்போதும் புதிய சிந்தனையிலேயே இருப்பார். 1984இல் உதய்ப்பூர் ரோட்டரி கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று மறைந்த முன்னாள் நீதிபதி பி.பி.பெரி, முன்னாள் PDG பி.பி.பார்கவா, PDG மாதவ் சௌதுரி மற்றும் பலர் ரோட்டரியை கிராமங்களுக்கு எடுத்துச்

செல்ல வேண்டும் என்று பேசினார். இந்த கூட்டத்தில் RI இயக்குநராகப் பங்கேற்று பேசிய கபாரஸ், ரோட்டரி வில்லேஜ் கார்ப்ஸ் (கிராமங்களில் ரோட்டரி தொண்டர்களின் சேவை) திட்டத்தை செயல்படுத்தலாம் என யோசனை தெரிவித்தார். அவை ரோட்டரி சமூக கார்ப்ஸ் என அழைக்கப்பட்டு இன்றும் உலகம் முழுவதும் சமுதாயப் பணியாற்றி வருகிறது.

மாட் கபாரஸ் RI தலைவராக இருந்தபோதுதான் (1986-87) "ரோட்டரி நம்பிக்கை அளிக்கிறது" என்ற கருபொருளை முன்வைத்தார். அவரது பதவிக்காலத்தில்தான் மகளிர் முதன்முதலாக ரோட்டரி உறுப்பினர்களாக அனுமதிக்கப் பட்டனர். இதற்கான முடிவு 1985-ல் சிங்கப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது என்றாலும் கபாரஸ் தலைவர் பதவிக்கு இருந்த காலத்தில் தான் இது செயல்படுத்தப்பட்டது. போலியோவுக்கு எதிரான ரோட்டரி பிரசாரத்தை முதன் முதலில் பிலிப்பின்ஸில் தொடங்கியவரும் கபாரஸ்தான். அதன்பின் அவரது முயற்சியில் 1986இல் போலியோ ஒழிப்புத் திட்டத்துக்கு 120 மில்லியன் டாலர் நிதி திரட்டப்பட்டது. இதற்கான நிதியை உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்களிடமிருந்து திரட்டுவதுதான் இதன் முக்கிய நோக்கம். முதன்முறையாக ஒரு சர்வதேச சேவைக்கான நிதி உறுப்பினர்களிடமிருந்தே திரட்டப் பட்டது. மறைந்த முன்னாள் PRIDக்களான மன்சாந்தா, சுதர்ஷன் அகர்வால் மற்றும் PRID சுஷில் குப்தா, லலித் மெஹ்ரா ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் இதற்கான நிதி திரட்டும் பணியில் நானும் ஈடுபட்டிருந்தது இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. இறுதியில் ரோட்டரி மூலம் 240 மில்லியன் டாலர் நிதி திரட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தனது கூர்மையான அறிவு மூலம் பல விஷயங்களை முன்வைத்ததைக் கண்டு நான் ஆச்சரியப்படுவேன். மாட் தனது 96வது வயதில் கடந்த ஜூலை 15ஆம் தேதி சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள தனது வீட்டில் காலமானார்.

1989இல் மறைந்த முன்னாள் இயக்குநர் சுதர்ஷன் அகர்வால் சென்னை ரோட்டரி மாநாட்டில் மாட் கபாரஸ் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார். அப்போது அவர் ஆற்றிய உரை அனைவரையும் கவரும் வகையில் இருந்தது.

பின்வரும் கதையைக் கூறி அவர், தனது உரையை முடித்தார். பிலிப்பின்ஸில் உள்ள ரோட்டரி சங்கம் ஒன்று தனது நிகழ்ச்சியில் உரையாற்ற ஒருவரை அழைத்தது. அந்த நபரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார். அனைவரும் அவரது பேச்சால் சலிப்படைந்தனர். அந்த நேரத்தில் ஒருவர் கையில் கத்தியுடன் திடீரென மேடையில் ஏறி பேச்சாளரை நெருங்கினார். அவரைப் பார்த்து பயந்துபோன பேச்சாளர், என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்.நான் இத்துடன் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன் என்றாராம். அதற்கு மேடையில் கத்தியுடன் ஊடுருவிய நபர், இல்லை இல்லை நீங்கள் விரும்பும்வரை தொடர்ந்து பேசுங்கள். உங்களை பேசுவதற்கு அழைத்த நபரைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் என்றாராம். கபாரஸ் இந்த கதையைச் சொன்னவுடன் அனைவரும் கைதட்டி அதை வரவேற்றனர். பின்னர் கபாரஸ் மேலும் பேசுகையில், நீங்கள் எல்லோரும் சுதர்ஷன் அகர்வாலை பார்ப்பதற்கு முன் நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன் என்றார். மறைந்த தலைவர் இனி நிம்மதியாக ஓய்வெடுக்கட்டும்!

இதன் எழுத்தாளர்
ஒரு முன்னாள் RI தலைவர்.■

வாட்டிக்கனில் போப் ஜான் பால் II அவர்களுடன் PRIP மாட் கபாரஸ் மற்றும் அவர் மனைவி நீட்டா.

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க முன்னுரிமை!

ஜெய்ஸ்ரீ



2021–22 TRF *அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம் மற்றும் RIPE சேகர் மேத்தா துபாயில் நடைபெற்ற மண்டல மாநாட்டில். (கோப்புப்படம்)*

நானும் ராஷியும் ரோட்டரி இன்டர்நேஷனலின் இரண்டு முக்கிய வருடங்களை எதிர்நோக்கி இருக்கிறோம் என்று RIPE சேகர் மேத்தா, 800 மாவட்ட மற்றும் சங்கங்களின் தலைவர்கள் பங்கேற்ற PRID பிரைன் ஸ்டைலால் நடத்திச் செல்லப்பட்ட மெய்நிகர் ரோட்டரி மாநாட்டின் ஒரு பகுதியான அமர்வில் பேசுகையில் தெரிவித்தார்.

2021-22 ஆம் ஆண்டில் தாம் தலைவராக பதவியில் இருக்கும் காலத்தில் செயல்படுத்த உள்ள திட்டங்களை மேத்தா விவரித்தார். உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தாம் முன்னுரிமை அளிக்கப்போவதாக அவர் குறிப்பிட்டார். 20 ஆண்டுகளாக நாம் நமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை 1.2 மில்லியன் என்றே கூறிவருகிறோம். இந்த எண்ணிக்கையை 1.3 மில்லியன் என்று அதிகரிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஒவ்வொரு ரோட்டேரியனும் தங்களுக்குத் தெரிந்த ஒருவரையாவது ரோட்டரிக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். DGEக்கள் ரோட்டரியின் வளர்ச்சி மற்றும் தக்கவைப்புக்கான குழுக்களை அமைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒரு பிராந்தியத்தின் மக்கள் தொகையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்த தனது எண்ணங்களையும் அவர் பகிர்ந்து கொண்டார். எனது நகரமான கொல்கத்தாவில் 12 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். ஆனால், அவர்களில் 2,000 பேர் மட்டுமே ரோட்டேரியன்களாக உள்ளனர். அதாவது 10 ஆயிரம் பேருக்கு ஒரு ரோட்டேரியன் என்ற அளவிலேயே உள்ளது. இதை 10 ஆயிரம் பேருக்கு 2 அல்லது 3 ரோட்டேரியன்கள் என்ற நிலைக்கு உயர்த்த வேண்டும். புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது TRFக்கு பங்களிப்பதைப் போல முக்கியமானது. புதிய உறுப்பினர்கள் என்றால் அறக்கட்டளைக்கு அதிக

நிதி என்று பொருள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரோட்டரியின் வளர்ச்சிக்கு இருக்கும் உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வது மிக முக்கியமானது. இது விஷயத்தில் DGEக்கள், AGக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ரோட்டரி சங்கங்கள் வலுவாக இருந்தால்தான் உறுப்பினர்களைத் தக்கவைக்க முடியும் என்றும் மேத்தா தெரிவித்தார்.

ரோட்ராக்டர்கள் மெல்ல மெல்ல ரோட்டேரியன்களாக உருவாக வேண்டும். ரோட்டரி மீது அவர்களுக்கு உள்ள ஈர்ப்பை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை அடிமைபோலவோ அல்லது நாம் சொல்லும் வேலைகளைச் செய்யும் ஆட்கள் போலவும் கருதாமல் அவர்களை நமக்குச் சமமானவர்கள் போல் நடத்த வேண்டும். நமது சேவைகளிலும், சர்வதேச மானியத் திட்டங்களிலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவி வகிக்கும் காலத்தில் நடைபெறும் சர்வதேச மாநாட்டுக்கு 60 ரோட்ராக்டர்களை அழைக்க திட்டமிட்டுள்ளேன். நான் தலைமைப் பதவியில் இருக்கும் போது 6 மாநாடுகள் நடைபெறும். அவற்றில் 5 பல்வேறு நாடுகளிலும் கடைசி மாநாடு ஹூஸ்டனிலும் நடைபெறும் சர்வதேச மாநாட்டின் போது நடைபெறும். ரோட்டரி நாட்கள் என்பது ரோட்டரியின் பணிகளை எடுத்துக்காட்டுவதற்கான வாய்ப்பாக கருதவேண்டும். எனவே ரோட்டரி உறுப்பினர்களாக இல்லாதவர்களை அழைத்து நமது பணிகள், சேவை என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டும். நமது செயல்பாடுகளை மற்றவர்களுக்கு புரியவைப்பதன் மூலம் புதிய உறுப்பினர்களை ஈர்க்க முடியும் என்றார் சேகர் மேத்தா.

பொது மானியத் திட்டங்களை (GG) நிறைவேற்றும்போது அதற்கு பங்களித்த கார்பொரேட் நிறுவனங்களையும், சர்வேதச பங்களிப்புச் செய்தவர்களையும் அழைத்து திட்டச் செயல்பாடுகளைப் பார்வையிடச் செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்கள், தங்கள் பங்களிப்புகள் சமுதாயத்திற்கு எந்தவகையில் பயன்படுகிறது என்பதை நேரில் தெரிந்து கொள்ள முடியும். அவர்கள்தான் சிறந்த மக்கள் தொடர்பாளர்கள். திட்டச் செயல்பாடுகளை பார்வையிட்டுச் சென்றபின் தங்களது நிதியுதவி மற்ற நாட்டு மக்களுக்கு எந்த வகையில் உதவியாக இருந்தது என்று மக்களிடம் வெளிப்படுத்துவார்கள் என்றார் மேத்தா.

உலகையே உலுக்கி வரும் அரசியல் பிரச்னைகளை ரோட்டரி எப்படி சமாளிக்கிறது என்ற கேள்விக்கு, ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் சொன்ன வார்த்தைகளை மேத்தா மேற்கோள் காட்டினார். ரோட்டரியினருக்கு சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். எங்களின் முக்கிய குறிக்கோள் பன்முகத் தன்மையும் எதையும் தாங்கும் இதயமும்தான் என்றார் மேத்தா.

ரோட்டரியின் இதயம் அறக்கட்டளை (TRF):

TRF அறங்காவலர் தலைவர் PRIP ஜான் ஜெர்ம் அறக்கட்டளை பற்றிய தமது எண்ணங்களை மாவட்டத் தலைவர்கள் மற்றும் சங்கத் தலைவர்களிடம் பகிர்ந்து கொண்டார். ரோட்டரிக்கு இதயம் போன்றது TRF. அதாவது ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒவ்வொரு ஆண்டும் தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து அறக்கட்டளையை வலுப்படுத்த வேண்டும். உலகில் அமைதியையும் ஒற்றுமையையும் எங்களால் ஏற்படுத்த முடியும் என்றார்.

உலகையே கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தி வந்த காலத்தில் அதை ரோட்டரி சவாலாக ஏற்று எப்படி எதிர்கொண்டது என்பதை அவர் விவரித்தார். நிவாரப்பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள அறக்கட்டளை எவ்வாறு துரிதமாக செயலாற்றியது என்பதை குறிப்பிட்டதுடன் இதற்காக உழைத்த ஊழியர்களை அவர் பாராட்டினார். ஏறக்குறைய கொரோனா நிவாரணப் பணிகளுக்கு $20 மில்லியன் செலவிடப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டினார். DDF பரிமாற்றங்கள் மற்றும் பொது நிதியுதவி மூலம் இவை சாத்தியமானது. ரோட்டேரியன்கள் பலர், சர்வதேச மாநாட்டுக்காக கொடுத்த பணத்தை, மாநாடு ரத்தானதால் திருப்பிக்கொடுத்தபோது அதை அவர்கள் பேரிடர் நிதிக்கு திருப்பிக்கொடுத்தது உதவிகரமாக இருந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ரோட்டரியுடன் கார்ப்பொரேட்டுகள் இணைந்து செயலாற்றுவதற்கான வழிமுறைகளை நாம் ஆராய வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் TRF வளரமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போலியோ ஒழிப்புத் திட்டத்தில் நமது சேவையை நினைத்துப் பாருங்கள். பிலிப்பின்ஸில் 6 மில்லியன் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசிபோட 760 மில்லியன் டாலருடன் 3H திட்டத்தைத் தொடங்கினோம். 2025இல் 2.025 பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டவேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். சங்கங்கள் தங்களுக்கு என்று தனியாக அறக்கட்டளை வைத்திருப்பது சரியானதா என்ற கேள்விக்கு, TRF அறக்கட்டளைக்கு அவர்கள் கணிசமான பங்களிப்பை அளிக்கும் வரை அது சரியானது தான் என்றார்.

போலியோ ஒழிப்புத் திட்டத்துக்குத்தான் TRF முன்னுரிமை அளிக்கும். போலியோ ஒழிப்பு பிரசாரத்துக்காக ஒவ்வொரு சங்கமும் 1,500 டாலர் பங்களிப்புச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாவட்டமும் தங்களது பட்ஜெட்டில் DDF-இல் 20 சதவீதத்தை போலியோ நிதியாக ஒதுக்க வேண்டும். DDF நிதி ஒரு டாலருக்கு ஒரு டாலர் என்ற விகிதத்தில் பொருத்தினால், கேட்ஸ் அறக்கட்டளை 2-க்கு 1 என்ற விகிதத்தில் பொருந்தும். அது எப்படி உருவாகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்றார் அவர்.■

இனவாதத்துக்கு எதிராக உரக்கக் குரல் கொடுங்கள்: நாக்

ஜெய்ஸ்ரீ

நாம் இனவாதத்தைச் சிறிதும் பொறுத்துக்கொள்வதில்லை. மதிப்பை முன்னிறுத்துதல், பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல், நெறிமுறைத் தலைமையைக் கோருதல், அமைதியை முன்னேற்றுவதற்காக ஓய்வின்றிப் பணியாற்றுதல் ஆகியவை நம் பணியின் மையக் கொள்கைகள். உறுப்பினர்களில் ஒரு நியாயமான சமநிலையைக் கொண்டிருக்கவேண்டும் என்று ரோட்டரி சங்கங்களுக்குக் கற்றுத்தாருங்கள். போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படாத சிறுபான்மைக் குழுக்களைக் கவனியுங்கள். நினைவிருக்கட்டும், ரோட்டரியன்கள் பேச்சற்றவர்கள் இல்லை, எந்தவகையான இனவாதத்துக்கு எதிராகவும் நாம் நம்முடைய குரலை எழுப்பவேண்டும்'' என்றார் RI தலைவர் ஹோல்கர் நாக்.

அமைப்புரீதியிலான இனவாதத்தை ரோட்டரி எப்படிச் சமாளிக்கும் என்பதுபற்றிய ஒரு கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ரோட்டரி மெய்நிகர் மாநாட்டில் RID ஸ்டீஃபனி அர்சிக் வழி நடத்திய ஓர் உரையாடல் நிகழ்ச்சியில் ஹோல்கர் நாக்கும், TRF அறங்காவலர் தலைவராகிய K R ரவீந்திரனும் இந்த ஆண்டு மாவட்ட ஆளுநர்கள், சங்கத் தலைவர்களிடம் தங்களுடைய முக்கியத்துவங்கள், திட்டங்களைப் பகிர்ந்துகொண்டார்கள்.

உள்வரும் தலைவர்களை வரவேற்ற நாக், ''நம் ஒவ்வொருவருடைய பதவிகளும் மிகுந்த பொறுப்பைக் கொண்டவை, ஒரு குழுவாகச் சேர்ந்து பணியாற்றாமல் நம்மில் யாரும் வெல்ல இயலாது. நாம் அனைவரும் தன்னார்வலர்கள், தன்னார்வலர்களை வழிநடத்துதல் ஒரு சவால்'' என்றார். சங்கத் தலைவர்கள் தங்களுடைய திட்டங்களில் ரோடராக்டர்களைப் பங்குபெறச் செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்; மாவட்ட ஆளுநர்கள் ரோடராக்டர்களை மாவட்டக் குழுக்களில் நியமிக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தார்.

RI தலைவர் ஹோல்கர் நாக்

ஒவ்வொரு திட்டத்தின் முக்கியப் பங்கும், ரோட்டரியை வளர்ப்பதாக இருக்கவேண்டும். பெண்கள், சிறுபான்மையினர், இளம் தொழில் வல்லுனர்கள் நம்மிடையே கூடுதலாக வரவேண்டும். உண்மையான தொழில் சார்ந்த நெறிமுறை கொண்ட மக்களைத் தேடுங்கள். ஆனால், உங்கள் உறுப்பினர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுங்கள்; உங்கள் சங்கத்துக்குச் சரியான பொருத்தமாக இருக்கிறவர்களைமட்டுமே தேர்ந்தெடுங்கள். நீங்கள் வாழ்நாள் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள், என்றார் அவர்.

நோய்ப் பரவலின்போது ரோட்டரி எதிர்நோக்குகின்ற சவால்களைப் பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்கிற, அவர்களுடைய ஆர்வத்தை உயிர்ப்புடன் வைக்கிற தேவையை வலியுறுத்தினார். இளம் தொழில் வல்லுனர்கள், ரோடராக்டர்கள், பெண்களை ஈர்க்காவிட்டால், நாம் முக்கியத்துவத்தை இழக்கும் ஆபத்து உள்ளது. இந்த நோய்ப் பரவலின்போதும், உறுப்பினர் எண்ணிக்கையில் குறிப்பிடக்கூடிய சரிவு ஏதும் இருக்கக்கூடாது என்றார் அவர்.

TRFபற்றி அறங்காவலர் தலைவர்

ரவீந்திரன் பேசுகையில், எல்லாம் வழக்கம்போல் நடக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது என்றார். அறக்கட்டளையிலுள்ள நாம், இருவிதமான சவால்களைச் சந்திக்கத் தயாராகவேண்டும். முதலில், நம்முடைய நிதி திரட்டும் திறன். இரண்டாவது, உலக அளவில் நம் திட்டங்களை நிறைவேற்றும் திறன். கோவிட்-19 காரணமாக, நாம் இளம்பிள்ளைவாத ஒழிப்பு நடவடிக்கைகளை நிறுத்திவைத்துள்ளோம். ஏனெனில், நம் இளம்பிள்ளைவாத ஒழிப்புப் பணியாளர்களால் வீட்டுக்கு வீடு சென்று தடுப்பு மருந்து கொடுக்க இயலவில்லை. இதனால், இளம்பிள்ளைவாதத்தின் எண்ணிக்கை பெருகலாம் என்று நன்றாகத் தெரிந்து தான் நாம் இதைச் செய்துள்ளோம். ஆனால், இதை நாம் தொடர்ந்தால், நம்முடைய தன்னார்வலர்களுக்குக் கொரோனாவைரஸ் ஆபத்து வரும்.''

கோவிட் கண்காணிப்பை ஆதரித்தபடி நாம் இளம்பிள்ளைவாதக் கண்காணிப்பைத் தொடர்வோம் என்றார் அவர். ரோட்டரி கட்டமைக்க உதவியுள்ள இளம்பிள்ளைவாத எதிர்ப்பு உள் கட்டமைப்பானது, கோவிடைத் தடுக்கப் பயன்படுகிறது. முன்பு எபோலா, மஞ்சள் காய்ச்சல் மற்றும் ஏவியான் ஃப்ளூ போன்றவை பரவியபோது ரோட்டரி எப்படி எதிர்வினையாற்றியதோ, அதேபோல் இப்போது பல நாடுகளின் தயாரிப்பு, எதிர்வினை நடவடிக்கைகளை இதன்மூலம் ஆதரிக்கிறது.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாம் கண்டிப்பாக நம்முடைய எட்டுதலை விரிவாக்கலாம். தடுப்பு மருந்துகள் வழங்குதலில் நாம் சிறந்தவர்கள். மிக விரைவில், கோவிடுக்கு ஒரு தடுப்பு மருந்து கிடைக்கும். அப்போது, UN மற்றும் WHO நம்முடைய திறமையை நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம், ரோட்டரியின் வலைப்பின்னலைப் பயன்படுத்தி இந்தத் தடுப்பு மருந்துகளை மக்களுக்குக் கொண்டு செல்லலாம், குறிப்பாக, ஆப்பிரிக்க மற்றும் தெற்காசிய நாடுகளில் இது மிக உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன் என்றார்.

பண நல்கைகளுக்கு இணைத் தொகை வழங்குவதை நிறுத்துகிற அறங்காவலர்களுடைய தீர்மானத்தைப்பற்றிப் பேசிய ரவீந்திரன், நம் அறக்கட்டளையின் முன்னணித் திட்டமான பன்னாட்டு நல்கைத் (GG) திட்டம் மிகப் பெரிய வெற்றியடைந்துள்ளது. 2013-14ல் GGகள் அறிமுகமானபோது, TRF $47.3 மில்லியன் மதிப்புள்ள 868 GGக்களை வழங்கியது. 2018-19ல் இந்த எண் $86.6 மில்லியன் மதிப்புள்ள 1,403 நல்கைகளாக உயர்ந்திருந்தது என்று விளக்கினார். ஆனால், இந்தத் தேவை 80 சதவிகிதம் உயர்ந்த போது, அவற்றுக்கான ஆண்டு நிதிப் பங்களிப்புகள் வெறும் 7 சதவிகிதம்தான் உயர்ந்தன.

நல்கைகளுக்கான தேவை இப்படி உயரும் என்று யாரும் ஊகித்திருக்கவில்லை. இதனால், ஓர் இணைத்தொகையை வழங்குவதில் ஒரு பெரிய அழுத்தம் உண்டாகியுள்ளது. அதுதான் நம்முடைய அடிப்படைப் பிரச்னை என்றார் அவர். தொடர்ந்து, சென்ற ஆண்டு, 2020 மே மாதத்தின் நடுப்பகுதி வரையிலான பன்னாட்டு நல்கைகளுக்காக உலக ஒதுக்கீட்டுத் தொகையை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டோம். அதன்பிறகு, நம் வெற்றியே நமக்குப் பிரச்னையாகிவிட்டது என்று நாங்கள் உணர்ந்தோம்.

துரதிருஷ்டவசமாக, இந்த ஆண்டு TRF GGகளுக்கான தன்னுடைய உலக நிதியில் கிட்டத்தட்ட $12 மில்லியன் குறைவாகக் கொண்டுள்ளது; 2020 ரோட்டரி ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 25 சதவிகிதம் குறைவாகும். இந்தத் தேவை கோவிடுடன் தொடர்புடையதல்ல; இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஆண்டு நிதிப் பங்களிப்பு குறிப்பிடக்கூடிய வகையில் குறைந்ததால் இது நிகழ்ந்தது.

ரோட்டரி சங்கத் தலைவர்கள் ரோட்டராக்ட் தலைவர்களோடு பேசவேண்டும், அவர்களைத் தங்கள் சங்கத்துக்கு அழைக்க வேண்டும், அவர்களுடன் நல்லுறவைப் பேணவேண்டும் என்றார் ரோடராக்ட் குழு இயக்குநர் ஜோயெ வேசன். ஒரு திட்டத்தின் தொடக்கத்திலிருந்து, திட்டமிடல், செயல்படுத்தல்வரை அனைத்திலும் ரோட்டரியும் ரோடராக்டும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்றார் அவர்.■

TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன்

PRIP *பேரி ரஸ்ஸின் (நடுவில்) மற்றும் எலவேட் ரோட்டராக்ட் குழு தலைவர் டேவிட் ஸ்டோவால் (வலதிலிருந்து நான்காவது) கோப்புப்படம்.*

2022 முதல் ரோடராக்ட் உறுப்பினர் கட்டணம் அறிவிப்பு

ஜெய்ஸ்ரீ

2022ல் தொடங்கி, பல்கலைக்கழக அடிப்படையிலான சங்கங்களின் ரோடராக்டர்கள் ஆண்டு நிலுவைத்தொகையாக $5 செலுத்த வேண்டும், சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு இந்தத் தொகை $8ஆக இருக்கும். ஜூலை 1, 2022லிருந்து உலக நல்கைத் திட்டங்களில் பங்குபெறக்கூடிய ரோடராக்ட் சங்கங்களுக்குக் கூடுதல் ஆதரவு வழங்கும் செலவை ஈடு செய்வதற்காக இந்த நிலுவைத்தொகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரோடராக்ட் சங்கங்கள் ஒரு GGயின் பன்னாட்டு அல்லது உள்ளூர் ஆதரவாளராக இருக்கலாம், ஆனால் அதற்கு, அவர்கள் இதற்குமுன் ஒரு ரோட்டரி சங்கத்துடன் இதேபோன்ற நல்கையில் இணைந்து பணியாற்றியிருக்கவேண்டும். RI மெய்நிகர் மாநாட்டின் இடைவெளி நிகழ்வொன்றில் 'ரோடராக்டை உயர்த்துவோம்' செயல் பிரிவுத் தலைவர் டேவிட் ஸ்டோவல் இதை அறிவித்தார். இந்த நிகழ்வில், PRIP பேரி ரஸ்ஸின், ரோடராக்ட் குழுவின் இணைத் தலைவர்களான தைவானைச் சேர்ந்த எலிஸ்லின் மற்றும் உகாண்டாவைச் சேர்ந்த ரொனால்ட் கவாட்ட்வா ஆகியோர், CoL 2019ல் ரோடராக்டை உயர்த்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு நிகழ்ந்த பல மாற்றங்களை விவாதித்தார்கள்.

ரோட்டரி உறுப்பினர் என்பதன் வரையறையை விரிவாக்கி அதில் ரோட்டரி மற்றும் ரோடராக்ட் ஆகிய இரண்டையும் சேர்க்கவேண்டும் என்று PRIP ரஸ்ஸின் முன்வைத்திருந்தார்.

ரோடராக்ட் கொள்கைகளை மேம்படுத்துவது, ஓர் உள்ளடக்கிய மற்றும் நெகிழ்வுத்தன்மை கொண்ட உறுப்பினர் அனுபவத்தை உண்டாக்குவதற்கான வழிகளை விவாதிப்பதற்காகத் தலைவர் மார்க் மலோனி சென்ற ஆண்டு உருவாக்கிய இந்தச் செயல் பிரிவில் ரோடராக்டர்கள், ரோட்டரியன்கள் ஆகிய இருவரும் இடம்பெற்றுள்ளார்கள். ரோட்டரி ரோடராக்டுக்கு என்ன சேவைகளை வழங்கலாம் என்பதைக் கண்டறிவதற்காக நாங்கள் நடத்திய கணக்கெடுப்பில் உலகெங்குமுள்ள

ரோடராக்டர்களை நாங்கள் சேர்த்தோம். ரோடராக்டர்களுக்குக் கூடுதல் தன்னாட்சி, நெகிழ்வுத் தன்மையை அளித்து அவர்களைச் சமமான கூட்டாளிகளாக நடத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது'' என்றார் ஸ்டோவல்.

ரோடராக்டர்களுக்கு இப்போது ரோட்டரி உறுப்பினர் பொறுப்பு அளிக்கப்படுவதால், அவர்கள் இப்போது RI இடமிருந்து கூடுதல் ஆதரவைப் பெறுவார்கள், My Rotaryல் நிர்வாகக் கருவிகளை அவர்கள் பயன் படுத்தலாம், டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனலின் புதிய தலைமை மேம்பாட்டு வளங்கள், மேம்படுத்தப்பட்ட இணைய இலக்கு அமைத்தல் கருவிகள் மற்றும் ஒரு மேம்பட்ட இணையச் சங்க நிர்வாக அனுபவம் போன்ற பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அக்டோபர் 2019ல், இந்தச் செயல் பிரிவு வழங்கிய ஆலோச னையின் அடிப்படையில் RI வாரியம் ரோடராக்டில் பல மாற்றங்களை அங்கீகரித்தது. அவற்றில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது, ரோடராக்டின் உயர் வயது வரம்பை நீக்குவது. ஜூலை 1 முதல், ரோடராக்டர்களுக்கு 31 வயதாகும் போது அவர்கள் தங்களுடைய சங்கத்தி லிருந்து விலகவேண்டியதில்லை.

ரோடராக்டர்களில் 4 சதவிகிதத் தினர் மட்டுமே ரோட்டரியன் களாகிறார்கள் என்று செயல்பிரிவு கண்டறிந்தது. ரோட்டரியுடன் தொடர்ந்து இயங்க விரும்பிய, ஆனால், வழக்கமான ரோட்டரி சங்கத்துக்குத் தான் தயாராகிவிட்டதாக உணராத அல்லது ரோட்டரியின் நிலுவைத்தொகைகளை மிகக் கூடுதல் என்று நினைக்கிற ரோடராக்ட் உறுப்பினர்களுக்கு வயது வரம்பு ஒரு தடையாக இருந்தது. இப்போது, விதிமுறைகள் மாற்றப்பட்டு விட்டதால், சமீபத்தில் ரோடராக்டி லிருந்து வெளியேறிய சிலர் மீண்டும் அங்கு இணைவார்கள் என்று நம்பலாம்'' என்றார் எலிஸ்.

ரோடராக்டர்கள் எப்போதும் ரோட்டரிக்கு நகரமாட்டார்கள், ரோடராக்டர்களை வயதான உறுப்பினர்கள் மெதுவாக ஆக்கிரமித்து விடுவார்கள் என்று ஒரு கவலை இருந்தது. ரோட்டரி சங்கங்கள் இளம் ரோடராக்ட் உறுப்பினர்களுக்குப் பொருந்தும் வகையில் தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும், அவர்கள் ஒரு ரோட்டரி சங்கத்தில் இணைய விரும்பும்படி மாறவேண்டும்'' என்றார் ரஸ்லின். நீங்கள் இணைய விரும்பும் ரோட்டரி சங்கம் உங்களுக்குக் கிடைக்காவிட்டால், நீங்கள் ஒரு புதிய ரோட்டரி சங்கத்தை உருவாக்கலாம்'' என்று ரோடராக்டர்களிடம் கூறினார்.

ரோடராக்டர்கள் தங்களுடைய ரோடராக்ட் சங்கங்களுக்கு அடிக்கடி செல்லவேண்டும், அதேபோல், அவர்களும் இங்கு வரவேண்டும், என்றார் அவர். அதே நேரம், ரோடராக்ட் சங்கங்கள் விரும்பினால் தாங்களே ஒரு வயது வரம்பை நிர்ணயிக்கலாம் என்று ரஸ்லின் சுட்டிக் காட்டினார்.

ரோடராக்ட் உறுப்பினர்கள் தங்களுடைய சங்கத்தில் இன்னும் கூடுதல் காலம் இருக்கலாம் என்று அனுமதிப்பதன்மூலம், அவர்கள் ரோட்டரியைப்பற்றிச் சிந்திக்கக் கூடுதல் நேரம் கிடைக்கிறது என்றார் கவாட்ட்வா. இந்த மாற்றங்களால், ரோடராக்டில் இன்னும் கூடுதல் காலம் சேவை புரிந்து கூடுதல் அனுபவம், வழிகாட்டுதலைப் பெற்ற வலுவான ரோட்டரியன்கள் உருவாவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

மற்ற மாற்றங்கள்

புதிய ரோடராக்ட் சங்கங்கள் உருபெற ரோட்டரி சங்கத்தை நம்பியிருக்க வேண்டியதில்லை. இப்போது அவர்கள் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்ளலாம், அல்லது, இன்னொரு ரோடராக்ட் சங்கத்தைத் தங்கள் ஆதரவாளராகத் தேர்ந்தெடுக்கலாம்.

அத்துடன், மாவட்ட மற்றும் RI குழுக்களில் இடம் பெறுவதற்கு ரோட்டரியன்களுடன் ரோடராக்டர்களுக்கும் தகுதி உண்டு. சிறப்பான சேவைக்கான மேற்கோள் மற்றும் மிகச் சிறந்த சேவை விருது போன்ற அங்கீகாரங்கள் இப்போது ரோடராக்டர்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளன.

இலக்குகள்

2022க்குள், ரோடராக்டர்கள் RIல் பதிவு செய்யும் எண்ணிக்கையை 100 சதவிகிதம் உயர்த்தவேண்டும், ரோட்டரி சங்கங்களில் சேரும் ரோடராக்டர்களின் எண்ணிக்கையை 20 சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்று RI இலக்கு நிர்ணயித்துள்ளது. ''இப்போதைய விகிதமான 4 சதவிகிதம் என்பதிலிருந்து நாம் முன்னேற வேண்டும். சமூக அடிப்படையிலான சங்கங்களைச் சேர்ந்த அனைத்து ரோடராக்டர்களும் ரோட்டரியில் தங்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்'' என்றார் ரஸ்லின். இன்னோர் இலக்கு, 2029க்குள் ஒரு மில்லியன் ரோடராக்டர்களைப் பெற வேண்டும்.■

RI மெய்நிகர் மாநாட்டில் Rtr எலிஸ் லின், PRIP ரஸ்லின், எலவேட் ரோட்டராக்ட் குழுத்தலைவர் ஸ்டோவால் மற்றும் Rtn ரொனால்ட் கவாட்டவா.

Rotary PEOPLE OF ACTION

ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் ரோட்டரியினர்

ரோட்டரி செய்திக்குழு

RID 3120, RC வாரணாசி சென்ட்ரல் அன்னபூர்ணா திட்டத்தின் மூலம், மாநில பெண்கள் முதியோர் ஆசிரமத்தில் தங்கியிருப்பவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மதிய உணவை வழங்குகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிளப் உறுப்பினர்கள் முதியோர் இல்லத்திற்குச் சென்று தங்கியிருப்பவர்களிடம் மதிய உணவிற்கு அவர்கள் என்ன சாப்பிட விரும்புகிறார்கள் என்று கேட்கிறார்கள். உணவு விருப்பத் தேர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டு அங்கு உள்ள மருத்துவர் ரோட்டேரியன் அருண் குப்தா அவர்களால் அங்கீகரிக்கப்படுகிறது. இவரது வீடு முதியோர் ஆசிரமத்திலிருந்து 500மீ தூரத்தில் அமைந்திருந்தது; பொது மருத்துவத்தை வாழ்க்கைத் தொழிலாக கொண்ட குப்தா 1991-ல் அவர் கிளப் செயலாளராக இருந்தபோது, "அந்த காப்பகத்துக்கு உதவி தேவை" என்று உணர்ந்ததால் முதியோர் இல்லத்தை தத்தெடுக்குமாறு சங்கத்தை கேட்டுக்கொண்டார். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 72 வயதில் பட்டய உறுப்பினராக தொடர்ந்து அந்த காப்பகத்தின் உள் மருத்துவராக பணியாற்றும் அவர், "உணவுக்காக ஆசிரமத்திற்கு வந்து, அதோடு வயதான பெண்களையும் தொந்தரவு செய்யும் குரங்குகளை விரட்டியடிக்க வேண்டும் என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கவில்லை" என்று கூறினார். காப்பகத்தின் பால்கனி மற்றும் தாழ்வாரத்தை சுற்றி ரூ.40,000 செலவில் எஃகு வலை அமைக்கப்பட்டது. அது குரங்குகளால் ஏற்பட்ட பிரச்சினையை சரிசெய்தது; "ஆனால் கட்டிடம் சீர்குலைய தொடங்கியதால் விரைவான சீரமைப்பு தேவைப்பட்டது." விரைவில் கிளப் கட்டிடத்தை சீரமைக்க நிதியுதவி செய்து காப்பகத்தைச் சுற்றி ஒரு மதில் சுவரை எழுப்பியதோடு, பெண்கள் திறந்தவெளியில் கூடி புத்துணர்வான காற்றை சுவாசிப்பதற்கு ஏற்ற ஒரு சிறு தோட்டமும் அமைக்கப்பட்டது. நீர் சேமிப்பு தொட்டிகள் நிறுவப் பட்டு கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் புதுப்பிக்கப்பட்டன.

ரோட்டேரியன் லல்லா ராம் மௌரியாவுக்கு சொந்தமான ஹோட்டல் அமயாவில் மதிய உணவு

RC வாரணாசி சென்ட்ரல் உறுப்பினர்கள் மக்களுக்கு போர்வைகள் வழங்குகின்றனர். சங்கத்தலைவர் சஞ்சய் குப்தா மற்றும் IPDG சஞ்சய் அக்ரவால் அவர்களும் உள்ளனர்.

தயாரிக்கப்படுகிறது. "ஆதரவற்ற பெண்களுக்கு அவர்கள் விரும்பியதை சாப்பிட வாய்ப்பு அளிக்கும் வகையில் 2019ஆம் ஆண்டில் இந்த ஞாயிற்றுக்கிழமை மதிய உணவு பாரம்பரியத்தை ஆரம்பித்தோம்," என்கிறார் கிளப்பின் முன்னாள் தலைவர் சஞ்சய் குப்தா. இன்று காப்பகத்தில் ஒரு சலவை இயந்திரமும் குளிர்சாதன பெட்டியும் உள்ளது, ஆனால் LED TV நிறுவப்பட்டபோது தான் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

டாக்டர் குப்தா, அவர்களது மருத்துவ தேவைகளை கவனித்துக் கொள்வது மட்டுமல்லாமல், இல்லத்தில் இறப்பவர்களின் இறுதி சடங்குகளையும் செய்கிறார். "அவர் தனது முயற்சிகளிலும் உணர்ச்சி களிலும் ஈடுபடுகையில் நாங்கள் பணத்தை பங்களிப்பு செய்கிறோம்" என்று சஞ்சய் குப்தா கூறுகிறார்.

கடந்த ஆண்டு குளிர்காலத்தின் போது வாரணாசியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ளவர்களுக்கு 1,000 போர்வைகளை கிளப் விநியோகித்தது. ஆசிரமத்தின் மிகவும் மூத்த பெண்மணியான சம்பா தேவி தனது 102 வயதில் உயிர் நீத்தார். கிளப் முன்பு அவரது பித்தப்பை மற்றும் இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்கு நிதியுதவி அளித்தது. பொதுமுடக்கத்தின் போது கிளப் தொடர்ந்து உலர் உணவுப்பொருட்கள், பால் மற்றும் பழங்களை ஆசிர மத்திற்கு வழங்கியது.■

இளம் கலைஞர்களை அங்கீகரிக்க ஒரு நிகழ்ச்சி

ரோட்டரி செய்திக்குழு

தொற்று நோய் பொது முடக்கத்தின் போது இளைஞர்களின் திறமையை அங்கீகரித்து ஊக்குவிக்கவும் பொதுமக்களிடையே நல்ல எண்ணத்தை உண்டாக்கும் திட்டமாகவும் RC பருச் நர்மதா நகரி மற்றும் RID 3060 ஆகியவை சூப்பர் ஸ்டார் கலகர் என்ற தலைப்பிட்ட நிகழ்நிலை பாடல் மற்றும் நடன போட்டியை ஏற்பாடு செய்யப்பட்டது.

கிளப்பானது கலைத் திறன் தேர்வு மற்றும் இறுதி போட்டிக்காக இரண்டு சுற்று நேரடி ஒளிப்பாய்வு நிகழ்வை ஏற்பாடு செய்தது, மேலும் இவை அதிக பார்வையாளர்களை கவர்வதற்காக நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டன. IPDG அனிஷ் ஷா, DG பிரசாந்த் ஜானி மற்றும் DGN சந்தோஷ் பிரதான் உள்ளிட்ட பிரபலங்கள் மற்றும் ரோட்டரி பிரமுகர்கள் போட்டியாளர்களை ஊக்குவிப்பதற்கும் ரோட்டரி செய்தியை பரப்புவதற்கும் இந்த நிகழ்வில் பேசினர்.

முழு நேரடி நிகழ்ச்சியும் நிகழ்வுத் தலைவர் சஹேஜாதா பதானின் ஆதரவோடு பெண்கள் ரோட்டரியன்கள் மற்றும் உறுப்பினர்களின் துணைவியர்களால் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டது.

சுமார் 160 பங்கேற் பாளர்களில், 95 பேர் பாடல் மற்றும் நடன பிரிவுகளில் இறுதிப் போட்டிக்கு சென்றனர். நிகழ்ச்சியை வெற்றிபெற கிளப் தலைவர் ஷைலேஷ் ஷா மற்றும் நிகழ்வு இணைத் தலைவர் புனம் சேத் ஆகியோர் ஆதரவு வழங்கினர்.■

Rotary PEOPLE OF ACTION

பசுமை பணியில் ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

சுற்றுச்சூழலை காப்பது ரோட்டரி அதிகம் கவனம் செலுத்தும் அம்சங்களில் ஏழாவதாக சேர்க்கப் பட்டுள்ளது. PRIP இயன் ரைஸ்லியின் தலைமையில் ஒரு பணிக்குழு ரோட்டரி மானியத்தில் சுற்றுச்சூழல் திட்டங்களை கையாளும் கொள்கைகளை உருவாக்கியது. RI மெய்நிகர் மாநாட்டின் இறுதி நாளான ஜூன் 26 அன்று இதற்கான முடிவு அறிவிக்கப்பட்டது. சுற்றுச் சூழல் தொடர்பான திட்டங்களுக்கான மானிய விண்ணப்பத்தை ஜூலை 1, 2021 முதல் TRF ஏற்கும்.

இதற்கிடையில், ரோட்டரி உறுப்பினர்கள் நாடு முழுவதும் மரம் நடும் திட்டங்களை மேற்கொண்டு வருவதால் பசுமைப்படுத்தும் முயற்சி கள் வேகம் பெறுகின்றன.

சுற்றுச்சூழலை ஆதரிப்பதற்காக ஒரு தனித்துவமான கவனத்தை ஏற்படுத்துவது ரோட்டரி உறுப்பினர்களுக்கு பூமியை பேணி வளர்ப்பதற்கும், வனங்களின் பரப்பளவை அதிகரிப்பதற்கான வழிகள், நீர்நிலைகளை புத்துயிரூட்டுதல் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது ஆகியவை குறித்து கூடுதல் யோசனைகளை வழங்கும் என்கிறார் RID 3181ஐ சேர்ந்த DG M ரங்கநாத் பட். 82 ரோட்டரி கிளப்புகளைக் கொண்ட இந்த மாவட்டம், 5 லட்சம் மரக்கன்றுகளை நடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

USAவின் RID 6270, RC ஃபோன் டுலாக் மார்னிங் உடன் இரட்டை கூட்டாண்மையில் இணைந்துள்ளது RC கோயம்புத்தூர் காஸ்மோபாலிட்டன், RID 3201. உறுப்பினர்கள் பழங்களைத் தரும் மரங்களின் மரக்கன்றுகளை நட்டு அவற்றுக்கு கூட்டாளர் கிளப் உறுப்பினர்களின் பெயரைக் வைத்துள்ளனர். "நாங்கள் செடிகளை வளர்ப்பதற்காக ஒரு தோட்டக்கலை நிபுணரை

நியமித்துள்ளோம். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவை பழங்களை தரும்போது, நாங்கள் அவற்றை அந்த வட்டாரத்தில் உள்ள ஒரு ஆதரவற்றோர் இல்லத்திற்கு கொடுப் போம்," என்கிறார் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன் ஜோஷி.

RID 3240ல், DG சுபாஷிஷ் சாட்டர்ஜி 92 கிளப்புகளில் உள்ள 3,100 ரோட்டரி உறுப்பினர்களையும் ஜூலை 17 முதல் மூன்று நாட்களில் தலா ஒரு மரக்கன்றையாவது நடுவதற்கு அழைப்பு விடுத்தார். ஷியாமலிமா என்று அழைக்கப்படும் இந்த திட்டத்தின் கீழ் 3,240 மரக்கன்றுகள் என்ற இலக்கையும் தாண்டி 3,638 மரக்கன்றுகள் நடப்பட்டன. "பொது முடக்க கட்டுப்பாடுகள் காரணமாக, கிளப் உறுப்பினர்கள் தங்கள் தோட்டங்கள், மொட்டை மாடிகள் அல்லது பால்கனிகளில் செடிகளை நட்டனர்," என்கிறார் சாட்டர்ஜி.

RID 3053இன் அனைத்து பெண்களின் கிளப்பான RC ஜோத்பூர் பத்மினி மரக்கன்றுகளை நடுவதன் மூலம் நடைபாதைகள் மற்றும் சாலைகள் நடுவில் உள்ள பிரிவுகளை பசுமையாக்க மாற்றினார்கள்.

ஜூலை மாதம் 2,00,000 மரக்கன்றுகளை நடுவதற்கான இலக்கை RID 3060 அறிவித்துள்ளது, RC ராஜ்பிப்லா 82,500 மரக்கன்றுகளை நட்டுள்ளது, மேலும் மாத இறுதிக்குள் 1,00,000 மரக்கன்றுகளை நடமுடியும் என்ற நம்பிக்கை தெரிவிக்கிறது.

RID 3190, ரோட்டரி பெங்களூர் சவுத்வெஸ்ட், 130 கிமீ தூர பைக் பேரணி மூலம் பசுமையாக்கும் முயற்சியின் செய்தியை பரப்பியது, மேலும் அவர்கள் செல்லும் வழியில் காலியாக உள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டிருக்கிறார்கள்.

RID 3141, RC மும்பை வெர்சோவா ஆகஸ்ட் 15 அன்று விதையை பரப்புவதன் மூலம் வெகுஜன மரக்கன்றுகளை நடும் முயற்சியை அறிவித்துள்ளது. பழம் தரும் மரங்களின் 20,000 மரக்கன்றுகளை அண்மையில் மாவட்டம் நட்டத்தோடு, 2,50,000 விதைப்பந்தைகளை மாவட்டம் முழுவதும் பரப்பவும் திட்டமிட்டுள்ளது. ரோட்டராக்டர்கள் ஒரே நாளில் 20,000 விதைப்பந்தைகளைத் தயாரிக்கத் திட்டமிடுவதன் மூலம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்காக முயற்சிக்கின்றன,■

ரோட்டரி முகக்கவசம் மற்றும் கை தூய்மைப்படுத்தி வழிகாட்டுதல்கள்

இந்தப் பன்னாட்டு நோய்ப் பரவலின்போது, சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்கையில் நாம் நுண்ணுணர்வுடன் இருக்க வேண்டும். இந்த நேரத்தில், பெரிய அல்லது நன்றாகத் தெரிகிற ரோட்டரி சின்னங்களுடனான முகக்கவசங்கள் அல்லது கை தூய்மைப்படுத்திகளை மக்களுக்கு வழங்கினால், நாம் இந்த நல நெருக்கடியைப் பயன்படுத்திப் பணம் திரட்டுகிறோம் அல்லது உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்குகிறோம் என்று சிலர் எண்ணலாம். இந்தக் காரணத்தால், சங்கங்களால் மக்களுக்கு வழங்கப் படுகிற அல்லது விற்கப்படுகிற எந்த முகக்கவசம் அல்லது கை தூய்மைப்படுத்தியும் ஒரு கவனமான வடிவமைப்புடன் இருக்கவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இந்த வடிவமைப்பில் மாஸ்டர்ப்ராண்ட் கையொப்பம்,உன்னத அடையாளம், அல்லது ரோட்டரி சின்னம் இருக்குமானால், அந்தச் சின்னம் சிறியதாக, இருக்க வேண்டும். சங்க உறுப்பினர்களுடைய தனிப்பட்ட பயன்பாட்டுக்கென்று வடிவமைக்கப்பட்ட முகக்கவசங் களில் இன்னும் பெரிய, நன்கு தெரிகிற ரோட்டரி சின்னம் இருக்கலாம்.

ரோட்டரி முகக்கவசங்கள் வாங்குதல் அல்லது வடிவமைத்தல்

உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் அங்கீகாரம் பெற்ற, ரோட்டரி-சின்னத்தைக் கொண்ட முகக்கவசங் களை விற்கத் தொடங்கியுள்ளார்கள். உரிமம் பெற்ற சிலர், சங்கங்கள் தங்களுடைய சொந்த வடிவமைப்பு களை உருவாக்கவும் உதவலாம்.

உங்களுடைய சொந்த முகக் கவசங்களின் வடிவமைப்பைத் தயாரிக்க விரும்பினால், அல்லது, உரிமம் பெறாத ஒரு விற்பனையாளர் தயாரித்த அல்லது உருவாக்கிய முகக்கவசங்களின் வடிவமைப்பைக் கொண்டிருந்தால், முகக்கவசங்களின் மாதிரி வடிவமைப்புடன் ஒரு வெளியிடல் கோரிக்கையைச் சமர்ப்பியுங்கள்.

தனிப்பயனாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பை உருவாக்கும்போது, உங்கள் சங்கம் அல்லது திட்டச் சின்னத்தைச் சேருங்கள். உங்கள் சங்கச் சின்னத்தை உருவாக்க, brandcenter.rotary.org என்ற இணையத்தளத்தைப் பாருங்கள். உங்கள் சங்க அல்லது திட்டச் சின்னத்தைச் சேர்க்கத் தீர்மானித்தால், அது சிறியதாகவும், பெரிய அளவில் தெரியாததாகவும் இருக்கவேண்டும். உங்கள் தனிப்பயன் வடிவமைப்பு ஆராயப்படும், அது அங்கீகரிக்கப் பட்ட பிறகு, அதன் உற்பத்திக்கான அனுமதியை ரோட்டரி வழங்கும்.

ரோட்டரி சின்னம் கொண்ட முகக்கவசம் வாங்குதல் அல்லது வடிவமைத்தல் பற்றிய கேள்விகளை rilicensingservices@rotary.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

சமூகத்தினருக்கு முகக்கவசங்கள் நன்கொடையாக அளித்தல்:

நீங்கள் மக்களுக்கு முகக்கவசத்தை நன்கொடையாக அளிக்கிறீர்கள் என்றால், முகக்கவசங்கள் இல்லாமல் பேக்கிங்கில் ரோட்டரியின் சின்னத்தைப் பயன்படுத்தலாம்.

சமூகத்துக்கு முகக்கவசங்களை விற்றல்;

உங்கள் சங்கம் ரோட்டரி சின்னம் கொண்ட முகக்கவசங்களை மக்களுக்கு விற்க விரும்பினால், 30 ஜூன் 2021 வரை ஒரு வரம்புக் குட்பட்ட அடிப்படையில் அவற்றை விற்கலாம். இந்த முகக்கவசம் உங்களுடைய சங்க அல்லது திட்டச் சின்னத்துடன் தனிப்பயனாக வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும். #Rotary Cares என்பதைக் காட்டுவதற்காக, ஒரு நன்கொடைக்கு மாற்றாக இந்த முகக்கவசங்களை உங்கள் சங்கம் இலவசமாக வழங்கலாம். சங்கங்கள் தங்களுடைய சங்க அல்லது திட்டச் சின்னத்தைப் பயன்படுத்தினால், மற்றும் அவர்களுடைய வடிவமைப்பை ஒரு வெளியிடல் கோரிக்கையின் வழியாக RI அங்கீகரித்திருந்தால், சங்கங்கள் முகக்கவசங்களை விற்பதற்கு உரிமம் பெறவேண்டியதில்லை.

விற்கப்படும் முகக்கவசங்கள் அனைத்தின் விளம்பரப் பொருட்களிலும் இதுபோன்ற ஒரு பொறுப்பு துறப்பு இடம்பெற வேண்டும்: “துணியாலான முகக் கவசங்கள் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு மட்டுமே உருவாக்கப்படுகின்றன. இவை மருத்துவப் பயன்பாட்டுக்காக உருவாக்கப்படவில்லை; மருத்துவத் தரத்திலான தனிப்பட்ட பாதுகாப்புக் கருவிக்கு இவை மாற்றாகாது.”

ரோட்டரி கை தூய்மைப்படுத்தி

உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடம் கை தூய்மைப்படுத்தியை வாங்கலாம். நீங்களே உங்கள் சொந்த கை தூய்மைப்படுத்தியைத் தயாரிக்க விரும்புகிறீர்கள், அல்லது, உங்கள் சங்கம் அல்லது திட்டச் சின்னத் துடன் கை தூய்மைப்படுத்தியைத்

தயாரிப்பதற்காக உரிமம் பெறாத ஒரு விற்பனையாளருடன் பணியாற்ற விரும்புகிறீர்கள் என்றால், உள்ளூர், தேசிய மற்றும் பன்னாட்டுக் கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள் அனைத்தையும் நீங்கள் பின்பற்றவேண்டும். நீங்கள் ஒரு மாதிரி வடிவமைப்புடன் ஒரு வெளியிடல் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும். ப்ராண்ட் இல்லாத கை தூய்மைப் படுத்திகளை RI ஆய்வுக்காக வழங்கவேண்டியதில்லை.

கை தூய்மைப்படுத்தியை வாங்குதல் அல்லது தயாரித்தல் பற்றிய கேள்விகளை rilicensingservices@rotary.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

சமூகத்தினருக்குக் கை தூய்மைப் படுத்தியை நன்கொடையாக அளித்தல் மற்றும் விற்றல்

ரோட்டரி சின்னம் கொண்ட கை தூய்மைப்படுத்தியை நன்கொடையாக அளிக்க அல்லது விற்க விரும்புகிறீர்கள் என்றால், பெரிதாகத் தெரியாத சங்க அல்லது திட்டச் சின்னத்தை நீங்கள் அதில் சேர்க்கவேண்டும், உரிமம் பெற்ற ஒரு விற்பனையாளரிடம் கை தூய்மைப்படுத்திகளை வாங்கி நன்கொடையளித்தால் இது தேவையில்லை.

கை தூய்மைப்படுத்திகளை விற்பதை நாங்கள் ஊக்குவிக்க வில்லை. அதே நேரம், உங்கள் சங்கம் அதைச் செய்யத் தீர்மானித்தால், உங்கள் சங்கம் ஒரு நன்கொடைக்கு மாற்றாக அதை வழங்கலாம். சங்கங்கள் தங்களுடைய சங்க அல்லது திட்டச் சின்னத்தைப் பயன்படுத்தினால், மற்றும் அவர்களுடைய வடிவமைப்பை ஒரு வெளியிடல் கோரிக்கையின் வழியாக RI அங்கீகரித்திருந்தால், சங்கங்கள் கை தூய்மைப்படுத்திகளை விற்பதற்கு 30 ஜூன் 2021 வரை உரிமம் பெறவேண்டியதில்லை, அவற்றை ஒரு வரம்புக்குட்பட்ட அடிப்படையில் விற்கலாம்.

ஆல்கஹால் அடிப்படையிலான அல்லது ஆல்கஹால் அல்லாத மற்ற பொருட்கள் அடிப்படையிலான எல்லாக் கை தூய்மைப்படுத்திகளும், விற்கப்பட்டாலோ, நன்கொடையாக வழங்கப்பட்டாலோ அனைத்து உள்ளூர், தேசிய மற்றும் பன்னாட்டுக் கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்களுக்கும் இணங்கவேண்டும், உங்கள் வழங்கல் அல்லது விற்பனையின்போது, "99.9 சதவிகிதக் கிருமிகள் மற்றும் பேக்டீரியாக்களை நீக்கும் செயல்திறன் கொண்டது அல்லது ஃப்ளூ அல்லது கொரோனாவைரஸை அழிக்கிறது" போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தவேண்டாம்.

© rotary.org.

காப்பீடு மற்றும் ஆபத்தைக் குறைத்தல்

அமெரிக்க ரோட்டரி சங்கம் மாவட்டப் பொதுக் கொள்கை, முகமூடிகள் அல்லது கை தூய்மைப்படுத்திகளை விற்கிற, தயாரிக்கிற, வடிவமைக்கிற அல்லது வழங்குகிற சங்கங்கள் அல்லது மாவட்டங்களுடைய தனித்துவமான தேவைகளைக் கையாளும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள சங்கக் காப்பீட்டுக் கொள்கை களுக்கும் இது பொருந்தலாம். கை தூய்மைப்படுத்தி அல்லது முகமூடித் தயாரிப்பில் அல்லது வழங்கலில் ஈடுபடும் எந்தச் சங்கம் அல்லது மாவட்டமும் தன்னுடைய ஆர்வங்களைப் பாதுகாப்பதற்குத் தனியான காப்பீட்டைப் பெறவேண்டும். கூடுதலாக, அனைத்துச் சங்கங்கள், மாவட்டங்களும்:

- *விற்பனையாளர்களுடனான ஒப்பந்தங்களை ஆராய வேண்டும், தங்கள் கட்டுப் பாட்டைத் தாண்டிய ஆபத்துகள் அல்லது பொறுப்புகளை அவை ஊகித்துக்கொள்ளவில்லை என்று உறுதி செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பொருளை விற்பவர் அந்தப் பொருளின் உற்பத்தி அல்லது வடிவமைப்பால் எழும் கோரல்களுக்குப் பொறுப்பேற்க ஒப்புக்கொள்ளக்கூடாது.*
- *ஒரு விற்பனையாளர் ஒப்பந்தத்தில் உள்ள ஈட்டுறுதி வசதி, இழப்பின் ஆபத்தை அந்த இழப்புக்கு உண்மையில் பொறுப்பான நபர்களுக்குப் பரப்பவேண்டும். விற்பனையாளர்களுடனான ஒப்பந்தங்களில், அனைத்து நபர்களும் போதுமான அளவு காப்பீட்டைப் பராமரிக்க வேண்டும் என்று கோருகிற ஒரு வசதியும் இருக்கவேண்டும்.*
- *எந்தவொரு விற்பனையாளர் ஒப்பந்தத்தையும் வரைவதற்கு அல்லது ஆராய்வதற்கு நீங்கள் ஒரு வழக்கறிஞரிடம் ஆலோசனை பெறவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.*



இந்தியக் குழந்தைகளுக்காக RC பாம்பே, ரோட்டரி இந்தியா இணைந்து வழங்கிய "சின்னச் சின்ன ஆசை"

ஜெய்ஸ்ரீ

நலிந்த குழந்தைகளுடைய எதிர்காலத்துக்காக நிதி திரட்டும் சின்னச் சின்ன ஆசை என்ற நட்சத்திர நிகழ்ச்சியொன்றை ரோட்டரி இந்தியா, RC பாம்பே, விஜ்கிராஃப்ட் பன்னாட்டுப் பொழுது போக்கு நிறுவனம் ஆகியோர் சேர்ந்து அறிமுகப்படுத்தினார்கள், மனிதராக இருத்தல் என்கிற சல்மான் கான் அறக்கட்டளை ஆதரவில் நடந்த இந்த மூன்று மணி நேர நிகழ்ச்சி, ஜூன் 28 அன்று கலர்ஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இந்த நிகழ்ச்சியைச் சல்மான் கான் வழங்கினார், பாடல்கள், நடனம் ஆகியவற்றுடன் நெடுநேரம் பார்வையாளர்களை மகிழ்வித்தார். பாடலாசிரியர் கௌசர் முனிர் எழுதிய பாடலொன்றை அமிதாப்பச்சன் வழங்கினார். இந்தத் திட்டத்துக்காகத் தன்னுடைய நேரத்தை வழங்குவதில் தான் மிகவும் மகிழ்வதாகச் சல்மான் கான் கூறினார், நம் குழந்தைகளுடைய எதிர்காலத்துக்கான இந்த முயற்சியில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இப்போது நாம் செய்யும் நல்லவை, ஒரு மேம்பட்ட எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்றார்.

RIPE சேகர் மேத்தா, இந்தியாவில் ரோட்டரியின் 100 ஆண்டுகளை நாம் கொண்டாடுகிற நேரத்தில், ரோட்டரி அரசாங்கத்துடன் இணைந்து நம் நாட்டைக் கட்டமைப்பதில் இன்னும் பெரிய பங்கொன்றை வகிக்கும் என்றார். RI இயக்குநர் கமல் சங்வி, கல்வி, ஊட்டச்சத்து, தூய்மை ஆகிய துறைகளில் நாம் பணியாற்றுவோம்; நாம் எல்லாரும் சேர்ந்து நம் நாட்டுக் குழந்தைகளுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலம் என்னும் பரிசை வழங்குவோம் என்றார். இந்த நிகழ்ச்சியின்மூலம் திரட்டப்பட்ட நிதி, கோவிட்-தடுப்புக்கான உதவிப்பணிக்கும், குழந்தைகள் நலன், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுடன் தொடர்புடைய நீண்ட காலத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

நாம் ஒரு நாளைக்கு மூன்று வேளை நன்றாகச் சாப்பிடும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளோம். ஆனால், இங்கு பல குழந்தைகளுக்கு ஒரு கோப்பைப் பால்கூடக் கிடைப்பதில்லை. அந்த அப்பாவிக் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்கு நாம் சேர்ந்து பணியாற்றுவோம். ஏனெனில், நலமான குழந்தைகள் நலமான நாட்டை உருவாக்குவார்கள் என்றார் RI இயக்குநர் பரத் பாண்ட்யா.

மத்திய அமைச்சர்கள் பிரகாஷ் ஜவதேகர், நிதின் கட்காரி, ஹர்ஷ்

வர்தன், ரமேஷ் பொக்ரியல் நிஷாங்க் மற்றும் கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோர் ரோட்டரியின் பல முயற்சிகளைச் சுட்டிக்காட்டினார்கள், இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதல், இளம்பிள்ளைவாதம் இல்லாத இந்தியாவைக் கொண்டுவருதலில் அதன் பங்கையும் குறிப்பிட்டார்கள்.

கடந்த பல ஆண்டுகளில் சமூகங்களை நன்முறையில் பாதித்துள்ள ரோட்டரிச் செயல்பாடு களின் கதைகளைப் புகழ் பெற்ற பாலிவுட் ஆளுமைகள் கூறினார்கள். RC பாம்பே-யின் முதன்மைத் திட்டங்களை இந்த நிகழ்ச்சி கவனப்படுத்திக் காட்டியது. எடுத்துக் காட்டாக, பத்தாண்டுகளுக்கு முன்பாக இந்தச் சங்கம் தொடங்கிய, நலிந்த குழந்தைகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டமான "பவிஷ்ய யான்". இந்தத் திட்டம் ஒரு பள்ளியில் 40 குழந்தைகளில் தொடங்கி, ஆறு நகராட்சிப் பள்ளிகளில் 1,600 குழந்தைகளைச் சென்று சேரும் அளவுக்கு வளர்ந்திருப்பது மனத்துக்கு மகிழ்ச்சி தருகிறது. எங்கள் குழந்தைகளில் பலர் பொறியாளர்களாக, பட்டயக் கணக்காளர்களாக வளர்ந்துள்ளார்கள், விருந்தோம்பல், பயணம் போன்ற துறைகளில் நுழைந்துள்ளார்கள் என்றார் சங்கத் தலைவர் பிரீத்தி மேத்தா. இந்தச் சங்கம் செயல்படுத்துகிற ஜல் ஜீவன் திட்டம், பள்ளிகளுக்குக் குடிநீர் வசதிகளை வழங்குகிறது.

DGக்கள் ஜோஸ் சக்கோ மாதவஸ்ஸேரி (RID 3201), தாமஸ் வாவனிக்குன்னெல் (3211), PNB முருகதாஸ், S முத்துப்பழனியப்பன் (3232), சௌம்ய ரஞ்சன் மிஷ்ரா (3262), சுபாசிஷ் சாட்டெர்ஜீ (3240), அலோக் குப்தா (3012), சன்னில் மெஹ்ரா (3141), டாக்டர் சந்தீப் கடம் (3142), PDGகள் அனீஷ் ஷா (3060) மற்றும் ரவி தோட்ரே (3131) மற்றும் RC பாம்பே தலைவர் பிரீத்தி மேத்தா ஆகியோர் இந்த நோக்கத்துக்காக ரூ.50 லட்சம் வழங்க உறுதியளித்தார்கள். இடம்பெயர்வோர் நெருக்கடியைப்பற்றியும், கோவிட்-19 முடக்கத்திற்கு நடுவில், பணியாளர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று சேர உதவும் தன்னுடைய முன்னெடுப்புகளைப்பற்றியும் சோனு சூட் பேசினார்.

PDG N சுப்ரமணியம், RID 3011, பேட்டியில் கொரோனாவைரஸுக்கு எதிராக நோயெதிர்ப்பாற்றலை வளர்த்துக் கொள்வதுபற்றிப் பேசினார். நலம் தரும் உணவுகளை உண்ணுங்கள். வைட்டமின் C போன்ற வைட்டமின்களையும், துத்தநாகத்தையும் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள், தண்ணீர் குடியுங்கள், போதுமான அளவு தூங்குங்கள். அதே நேரம், கோவிடுடன் தொடர்பில்லாத மருத்துவப் பிரச்னைகளையும் புறக்கணித்துவிடாதீர்கள் என்றார்.

சல்மான் கான், கமால் கானின் நடனத்துடன், அரிஜித் சிங், நேஹா கக்கர், அமித் திரிவேதி, சங்கர் மகாதேவன், சலீம் சுலைமான், ஜொனீதா காந்தி, உள்ளிட்ட பலர் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்கினார்கள்.

நன்கொடை வழங்க விரும்புவோர் https://bit.ly/ChhotiSiAsha என்ற இணைப்பின் வழியாக நன்கொடை வழங்கலாம், பணம் செலுத்தும் இணைப்பொன்றைப் பெறுவதற்கு, 917428212244க்கு மிஸ்ட் கால் அனுப்பலாம்.■

Rotary PEOPLE OF ACTION

ரோட்டரியனுடைய மருத்துவமனை கோவிட் சிகிச்சை மையமாக மாறுகிறது

ரஷ்மீதா பகத்

அகமதாபாத்தின் புறநகரில் அமைந்துள்ள குஜராத்தின் ஆட்டோமொபைல் மையமான சனந்த் பகுதியில், மே மாதத்தின் இரண்டாவது வாரத்தில் கோவிட்-19 நோய்த்தொற்றுகள் அதிகரித்ததால், மே 13 முதல் கடுமையான ஐந்து நாள் ஊரடங்கு அறிவிக்கப்பட்டதும், ரோட்டரி இ கிளப் ஆஃப் கேலக்ஸி 3051, RID 3051ஐச் சேர்ந்த டாக்டர் தபன் ஷாவுக்குச் சொந்தமான சனந்த் ஜந்தா மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவ மனையின் உதவியை குஜராத் அரசு கோரியது. சனந்தில் நியமிக்கப்பட்ட கோவிட்-19 மருத்துவமனையை அமைக்க வேண்டியதன் அவசியத்தை அகமதாபாத் கலெக்டர் தெரிவித்திருந்தார்.

"நாங்கள் எங்கள் கிளப்பின் ஆன்லைன் கூட்டத்தை ஏற்பாடு செய்து, எங்கள் பகுதியில் அதிகரித்து வரும் கொரோனா நேர்மறை கேஸ்கள், மற்றும் கோவிட்-19 சிகிச்சைக்காக ஒரு மலிவான தனியார் அமைப்பிற்கான வலுவான தேவை ஆகியவை பற்றி விவாதித்தோம்," என்று அவர் கூறுகிறார்.

அவரது கிளப் உறுப்பினர்கள் சிலரின் உதவியுடன், 35 படுக்கை களைக் கொண்ட அவரது சனந்த் ஜனதா மருத்துவமனை 24 மணி நேரத்திற்குள் புதுப்பிக்கப்பட்டது. இந்த அவசர நிலையை சமாளிக்க நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள், ஆக்ஸிஜன் சப்ளை, உணவு மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ICU சிகிச்சை ஆகியவற்றுடன் சேர்த்து தனிமைப்படுத்தலுக்கான இடமும் வழங்கப்பட்டன.

"ஒரு சில தனியார் மருத்துவ மனைகள் கோவிட் நோயாளிகளை எடுத்துக் கொள்ள தயக்கம் காட்டியதையடுத்து, மற்றும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதன் மூலம் தொற்றுநோய்க்கான அபாயத்தை தவிர்க்க மருத்துவர்கள் மறுத்ததைத் தொடர்ந்து நாங்கள் இவ்வாறு செய்தோம்" என்று ஷா கூறுகிறார்.

மேலும், சனந்தில் வசிப்பவர்கள் பெரும்பாலும் குறைந்த ஊதியம் பெறுபவர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, கடந்த சில வாரங்களில் கோவிட் நோயாளிகளுக்கான அனைத்து வசதிகளும் மருத்துவ மனையால் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு முறையான காப்பீடும் இல்லை, அத்துடன் அவர்கள் பக்கத்தில் உள்ள நகரத்தின் அரசு மருத்துவமனைகளுக்குச் செல்லும் வாய்ப்பும் குறைவு.

அரசாங்கம் உறுதியளித்த "வரையறுக்கப்பட்ட பட்ஜெட் மற்றும் மானியத்தை" பெறுவதில் தாமதம் இருப்பது சவாலாக உள்ளது என ஷா கூறினார். "ஆனால் மருத்துவமனை நிர்வாகம் தயங்கவில்லை, எங்கள் மருத்து வர்கள் செலுத்திய நிதியுடன் நாங்கள் சமாளித்தோம். மேலும் மருத்துவர்கள் அனைவரும் எந்தவித கட்டணமும் இன்றி நோயாளிகளுக்கு தொடர்ந்து சேவை செய்வதை உறுதி செய்தோம். PPE கிட்கள்,

N95 முகமூடிகள் மற்றும் பிற டிஸ்போஸபிள்கள் கிடைப்பது குறைவாக இருந்ததால், ஒரு சில மருத்துவர்கள் உட்பட பெரும்பாலான பணியாளர்கள் 24x7 பணியில் இருந்தனர். "இந்த கடினமான நேரத்தில் எங்கள் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் சம்பாதித்த ஒரே செல்வம் எங்கள் நோயாளிகளின் ஆசீர்வாதம் தான்" என்று ஷா புன்னகைக்கிறார்.

இது ஒரு உள்ளூர் குடியிருப் பாளரான அக்பர் மோமினால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது, அவர் தனது உறவுக்காரர் அகமத்பாய் மோமின் அவர்களின் கோவிட்-19 சோதனை நேர்மறையாக இருந்ததாகவும், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்ததாகவும் கூறுகிறார். "முதலில் நாங்கள் அவரை ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம் என நினைத்தோம், ஏனென்றால் அது அரசாங்க கோவிட் மையமாக நியமிக்கப்பட்டிருந்ததால், ஒரு அரசு மையம் ஆபத்தானது மற்றும் சரியான சிகிச்சை வசதி கள் இருக்காது என்று பலரும் எங்களிடம் சொன்னார்கள். ஆனால் நாங்கள் இந்த ஜனதா மருத்துவமனையிற்கு சென்ற போது ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருப்பதைக் கண்டோம்." பணியாளர்களின் அர்ப்பணிப்பு, தூய்மை மற்றும் சுகாதாரம், குடும்பத்தினர் எல்லோருக்குமான 14 நாள் தனிமைப்படுத்துதல், பரிமாறப்பட்ட உணவு போன்ற வற்றை அவர் பாராட்டுகிறார். "முழு சேவையும் இலவசமாக இருந்தது, அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு நாங்கள் வீடு திரும்பிய பிறகும், அவர்கள் எங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நலம் விசாரித்தார்கள்," என்று அவர் மேலும் கூறினார்.

தனது மருத்துவமனையில் மீட்பு விகிதங்கள் "நாடு முழுவதும் உள்ள சிறந்த தனியார் மருத்துவ மனைகளுடன், குறைந்த இறப்பு விகிதத்துடன் பொருந்தக்கூடும், என்று ஷா கூறுகிறார்.

ரோட்டேரியன்களைத் தவிர, "மனவ் சேனா அறக்கட்டளை போன்ற NGOக்கள் எப்போதும் எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன, மேலும் சனந்தின் மூத்த மருத்துவர்களான டாக்டர் G K சௌஹான் மற்றும் டாக்டர் அஜய்காந்தி போன்றவர்கள் எப்போது வேண்டுமானாலும் எங்களுக்கு உதவ முன் வந்தார்கள். எங்கள் கிளப் தொடர்ந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நோயாளிக்கும் பழங்களை விநியோகித்துள்ளது, என்றார்."■

பொது சுகாதார மையத்திற்கு லேபராஸ்கோபிக் இயந்திரம்

ரோட்டரி செய்திக்குழு

RC *மெட்ராஸ் மிட்டவுன் உறுப்பினர்கள் பொது சுகாதார மையத்தில் லேப்ராஸ்கோபி இயந்திரத்துடன்.*

அறுவை சிகிச்சைகளின் சிறந்த பலனை உறுதி செய்வதற்கும், இருக்கும் பழைய இயந்திரத்தை மாற்றுவதற்கும், RC மெட்ராஸ் மிட் டவுன், RID 3232, சென்னையின் மேற்கு மாம்பலத்தில் உள்ள பொது சுகாதார மையத்திற்கு உலகளாவிய மானிய திட்டத்தின் மூலம் அதிநவீன லேபராஸ்கோபிக் சாதனத்தை வழங்கியது.

DG (2019–20) G சந்திரமோகன் ஒரு சிறப்பு நிகழ்வில் கிளப் தலைவர் பவேஷ் ஷா மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் முன்னிலையில் சுமார் 50,000 அமெரிக்க டாலர் மதிப்புள்ள இயந்திரத்தை அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியில் கிளப் 5,000 சானிடைசர் பாக்கெட்டுகளையும் வழங்கியது.

'புதிய லேபராஸ்கோபிக் இயந்திரம் 16 ஆண்டுகள் பழைய சாதனத்திற்கு மாற்றாக அமைவோதொடு அதன் உயர் வரையறை தெளிவு மூலம் பல்வேறு அறுவை சிகிச்சைகள் சிறந்த பலன் தருவதை உறுதி செய்யும்' என்று ஷா கூறினார். ஒரு வருடத்தில் PHC-இல் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சைகளை செய்து கொள்ளும் பெரும்பாலும் நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர வர்க்கங்களைச் சேர்ந்த 350 க்கும் மேற்பட்ட நோயாளிகள் இந்த உயர் தொழில்நுட்ப இயந்திரத்தின் மூலம் பயனடைவார்கள் என்று அவர் கூறினார். மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான இந்த GG திட்டத்திற்கான உலகளாவிய பங்காளர்களாக, RCக்கள் நார்த் ஃப்ரெஸ்னோ, RID 5230 மற்றும் US-ன் க்யூபர்டினோ, RID 5170 ஆகியோரை இந்த கிளப் இணைந்துள்ளது.■

பங்களாதேஷில் ரோட்டரியின் கோவிட் எதிர்ப்பு பணி

காஜி அம்ததுல் ஹோக்

விநியோகம் செய்ய தயாராக உள்ள உணவுப் பொருட்கள்.

பங்களாதேஷில் மார்ச் 24 அன்று கோவிட்-19 ஊரடங்கு அதிகாரப்பூர்வமாக விதிக்கப்பட்டது, ஆனால் வீட்டிலிருந்து வெளியில் செல்வதில் சுய கட்டுப்பாடுகள் மற்றும் வீட்டிலிருந்து பணிபுரிவது ஆகியவை, பெரும்பாலும் தனியார் துறையில், மார்ச் தொடக்கத்தில் இருந்து மார்ச் நடுப்பகுதி வரை தொடங்கின. மக்களில் பயத்தைத் தூண்டாமலிருக்க, "பொதுவான விடுமுறைகள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

இருப்பினும், உலகத்துடன் சேர்ந்து நாமும் கஷ்டப்பட்டோம். உலகெங்கிலும் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்கு இப்போது நம் வீட்டு வாசல் வரையிலும் வந்திருப்பதை நாம் உணர்ந்தோம். அது உற்சாகம் மற்றும் பயம் கலந்த உணர்வாக இருந்தது. நாளுக்கு நாள் வீட்டுக்குள்ளேயே அடைந்துகிடப்பது எப்படி இருக்கும்? அதிகாரிகள் கடுமையான ஊரடங்கை அமல்படுத்துவார்களா? நமக்கு விரைவில் தெரிய வரும். இப்போதைக்கு, குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுதல், நீண்ட நேர மதிய உணவு இடைவேளைகள், அடிக்கடி தேநீர் இடைவேளை மற்றும் பரபரப்பான வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதைக் குறிக்கிறது. அது அவ்வளவு கடினமாக இருக்க முடியுமா என்ன?

எனது கேள்விக்கு மிக விரைவில் பதில் கிடைத்தது. ஒரு நாள், நான் காலியான தெருக்களில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு சைக்கிள்–ரிக்ஷா ஓட்டுபவர் கண்களில் இருந்து கண்ணீரை அமைதியாகத் துடைப்பதைக் கவனித்தேன். நான் நின்று அவரிடம் என்ன காரணம் என்று கேட்டேன், ஊரடங்கினால் கடந்த சில நாட்களாக அவருக்கு வருமானம் எதுவும் இல்லை என்றும் அவர் தனது குடும்பத்தின் ஒரே பொருளீட்டுநர் என்றும் கூறினார். நான் அவருக்கு எப்படி உதவி செய்வது என்று தெரியாமல், அவரை அவரது துயர நிலையில் விட்டுவிட்டு, நடந்து சென்றுவிட்டேன்.

அடுத்த நாள், இன்னொரு சம்பவம் நடந்தது. எனது அடுக்குமாடி கட்டிடத்திலில் வீட்டு வேலை செய்யும் எனக்கு தெரிந்த பெண்மணி, கோவிட்

பயம் காரணமாக வேலையில்லாமல் இருந்ததால் எனது குடியிருப்பின் செக்யூரிட்டி காவலரிடமிருந்து கொஞ்சம் அரிசி கேட்டு வாங்கி எடுத்துச் செல்ல மிகவும் தயக்கத்துடன் வந்திருந்தாள். தனது குழந்தைக்கு உணவளிக்க அவளது வீட்டில் உணவு இல்லை. அவள் சங்கடத்தை மறைக்க மாலை இருட்டிய பிறகு அவனிடம் உதவி கேட்டு வந்திருந்தாள், மற்றொரு பின்தங்கிய ஆத்மாவான அந்த காவலரும் அமைதியாக அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தான்.

இந்த இரண்டு சம்பவங்களும் என் மனசாட்சியைக் குலுக்குவதற்கு போதுமானதாக இருந்தன. எனது சுற்றுப்புறத்தில் தினசரி தொழிலாளர்கள் அதிகாலையில் வேலைக்குச் செல்வதையும், மாலையில் வீடு திரும்புவதையும் நான் பார்த்திருக்கிறேன். நான் அவர்களின் முகங்களில் உற்சாகத்தையும் சோர்வையும் பார்த்திருக்கிறேன், ஆனால் இத்தகைய அமைதியான மனச்சோர்வை ஒரு போதும் பார்த்ததில்லை. என்னை விட மிகக் குறைந்த வருமானம் உள்ள ஒருவருக்கு அல்லது என்னைப் போன்றவர்களுக்கு "லாக் டவுன் (ஊரடங்கு)" என்ற வார்த்தையின் முழு தாக்கத்தை இப்போது புரிந்துக்கொண்டேன். நமக்கு ஒரு புதிய மற்றும் சற்றே உற்சாகமான அனுபவமாக இருப்பது, நமது பேரக்குழந்தைகளுக்கு படுக்க போகும் நேரத்தில் சொல்லக்கூடிய ஒரு நல்ல கதையாக இருக்கும் இது வெறும் அசௌகரியம் மட்டுமே, ஆனால் வீட்டு வேலை செய்பவர்கள் அல்லது ரிக்ஷா இழுப்பவர்கள் போன்ற தினசரி கூலி பெறுபவர்களுக்கு நரகத்தைத் தவிர வேறில்லை. ஒரு ரோட்டரியனாகவும் மற்றும் 'தன்னலம் கருதாத பொதுப்பணிசு என்ற எங்கள் குறிக்கோளை முழு மனதுடன் நம்புவதாலும், இந்த மக்களுக்காக ஏதாவது செய்யப்பட வேண்டும், அதுவும் விரைவாக செய்யப்பட வேண்டும் என்பதை நான் அறிவேன்.

"ரோட்டரி என்பது சுற்றத்தார்கள், நண்பர்கள் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பவர்கள் எண்ணங்களை பரிமாறிக்கொள்வதும், தலைவர்களுடன் சேர்ந்து நிலைத்திருக்கும் மாற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுக்க ஒன்றுபடுவதுமான இடம் என்று எங்களுடைய ரோட்டரி கிளப்பில் நாங்கள் நம்புகிறோம்." நான் இந்த நம்பிக்கையை செயல் மூலம் நிறைவேற்ற விரும்புகிறேன். மார்ச் 23 அன்று, எனது ரோட்டரி மற்றும் ரோட்டரி அல்லாத அனைத்து நண்பர்களுடனும், என் உணர்ச்சி களைப் பகிர்ந்து கொண்டேன், அவர்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும், தேவைப்படும் போது எனக்கு ஆதரவளிக்கவும் வேண்டுகோள் விடுத்து ஒரு உரை செய்தியை அனுப்பினேன். எனது கிளப்பின் கடந்த காலத் தலைவர்களான, ஹலிமா, மஹஜபீன், மசூத் மற்றும் மற்ற உறுப்பினர்கள், தாஹெர், மஹ்ஃபூசா, ஜாகியா, சயீத் மற்றும் அஜீஸ் ஆகியோர் உடனடியாக அழைத்தனர் அல்லது ஒரு உரை செய்தியை பதிலாக அனுப்பினர், மேலும் உதவி தேவைப்படும் மக்களுக்கு நல்லது என்று நான் நினைத்ததைத் தொடர்ந்து செய்ய எனக்கு உதவி மற்றும் ஊக்கத்தை அளித்தனர். அவர்கள் ஆன்லைனில் உதவி மற்றும் நிதி உதவியை வழங்குவார்கள், மற்றும் ஒரு சிறிய அளவிலான பணியைத் தொடங்க தன்னார்வலர்களை நான் ஒன்று திரட்டுவேன். இந்த நம்பிக்கை எனது தன்நம்பிக்கையை மேலும் உயர்த்தியதுடன், முழு நாடும் அச்சத்திலும் மௌனத்திலும் அடங்கியிருந்த நேரத்தில் என்னை நடவடிக்கை மேற்கொள்ள ஊக்குவித்தது.

ஒரு தனி போர்வீரர்

நான் ஒரு தனி போர்வீரனாக மேற்கொண்ட பணியைத் தொடங்க வேண்டும் என்று நான் அறிவேன். நான் மார்ச் 23 அன்று வீட்டு வேலை செய்பவர்கள் வாழும் சுற்றுப்புறத்திலுள்ள பல்வேறு சேரிகளுக்கும், தொலைதூரப் பகுதிகளுக்கும் சென்று பணியைத் தொடங்கினேன். நிலைமையை உணரவும் சூழ்நிலையின் ஈர்ப்பை பகுப்பாய்வு செய்யவும் என்னுடன் வரும் தன்னார்வலர்களிடமிருந்து எனக்கு ஆதரவு கிடைத்தது. எங்கள் பணி வறுமை ஒழிப்போ அல்ல, ஏழைகளின் பசியைக் குறைப்பதோ அல்ல, உலகம் முழுவதும் பரவும் கோவிட் தொற்றுநோயால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதே ஆகும். ஊரடங்கு மற்றும் தொற்றுநோயால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பதை நாங்கள் அறிவோம், ஆனால் அதை செயல்படுத்த நேரம் எடுக்கும். அதுவரை, இந்த மக்கள் பட்டினியால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, நாங்கள் அவர்களுக்காக உதவினோம்.

தேவைப்படுபவர்களுக்கு உணவு மற்றும் சுகாதார கிட்களை விநியோகிப்பதே எங்கள் திட்டம், மேலும் இத்தகைய கோவிட்-19 பதிலளிப்பு பங்களாதேஷில் உள்ள ஒரு ரோட்டரி கிளப்புக்கு முதல் முறையாகும். நாங்கள் பணி செய்யக்கூடிய 10 பகுதிகளை பட்டியலிட்டோம், விரைவான மதிப்பீடு செய்தோம் மற்றும் எங்களிடமிருந்து அவசர உணவு மற்றும் சுகாதார கருவிகளைப் பெற வேண்டிய நபர்களின் செல்போன் எண்களுடன் ஒரு பட்டியலை தயாரித்தோம்.

ஆதரவைத் திரட்டுதல்

அதை செய்து முடித்ததும், இந்த தொற்றுநோய்க்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சமூக இடைவெளி விதிமுறைகளை மதிக்கும் ஒரு சேகரிப்பு முறையை நாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இது சவாலாக இருந்தது, ஆனால் ஒரு உள்ளூர் அமைப்பான ஷமாஜிக் கவுன்சிலின் தன்னார்வலர்களின் உதவியுடன் விரைவாகவும் ஆக்கப்பூர்வமாகவும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது.

முதலில் எங்கள் பட்டியலில் உள்ளவர்களின் வீடுகளுக்கு

அருகிலுள்ள சில மளிகைக் கடைகளை அடையாளம் கண்டோம். அதன் பிறகு நாங்கள் கடைக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம், மேலும் குடும்பத்திற்கு குறைந்தது ஒரு வாரம் வரை நீடிக்கும் அடிப்படை உணவு மற்றும் சுகாதாரப் பொருட்களைக் கொண்ட பராமரிப்புப் பொதிகளை எங்களுக்காக முன்கூட்டியே பேக் செய்யும் ஒரு திட்டத்தை வகுத்தோம். அடுத்து, நாங்கள் பெறுநர்களுக்கு டோக்கன்களைக் கொடுத்தோம், அவர்கள் உண்மையான நிவாரணம் பெறுவோர் என்பதை நிரூபிக்க மளிகைக் கடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு கூடைக்குள் அவர்கள் டோக்கன்களை வைக்க வேண்டும். நாங்கள் எங்கள் பட்டியலிலிருந்த பெறுநர்களை அழைத்து கூட்டம் கூடுவதைத் தவிர்ப்பதற்காக வெவ்வேறு நேரங்களில் கிட்களை பெற்றுக்கொள்ளச் சொன்னோம். பெறுநர்கள் கவுண்டரில் வைக்கப்பட்டிருந்த கூடையில் டோக்கன்களைக் வைத்தனர்; கடைக்காரர் அவர்களது பேக்கேஜை கூடையில் வைத்தார்.

அடுத்ததாக வெளியே வந்து கடைகளிலிருந்து பேக்கேஜ்களை எடுத்துச் செல்ல இயலாத படுத்தபடுக்கையாக உள்ளவர்கள் அல்லது மிகவும் அதிக வயதானவர்களை அடைந்து நிவாரண உதவியளிப்பது சவாலாக வந்தது. இவர்களுக்காக நாங்கள் வீட்டுக்கு வீடு சென்று அவர்களின் கதவைத் தட்டி, பராமரிப்புப் பேக்கேஜ்களை அவர்களின் வீட்டு வாசலுக்கு வெளியே வைக்கும் வழங்கும் சேவையை ஏற்பாடு செய்தோம்.

கீழ் நடுத்தர வர்க்கத்தை உள்ளடக்குதல்

சேரிகளை உள்ளடக்கியவுடன், செல்வந்தர்களைப் போல் தோன்றும், ஆனால் உண்மையில் அவ்வாறு இல்லாதவர்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தோம்; அதாவது பணியில் இருந்தவர்கள், ஆனால் வாழ்வாதாரத்திற்கான சேமிப்பு இல்லாதவர்கள். இவர்கள் தினசரி கூலித் தொழிலாளர்கள் அல்ல என்பதால், தேவையுள்ள ஏழைகளின் கீழ் இவர்கள் வருவதில்லை. இருப்பினும், அவர்களுக்கு தேவைகள் இருந்த போதிலும், உதவி கேட்க அவர்கள் வெட்கப்பட்டனர். இந்த மக்கள் அழுத்தத்தில் இருப்பதையும், எங்கள் உதவி அவர்களுக்கு தேவை என்பதையும் நாங்கள் அறிவோம். நாங்கள் அவர்களது தொலைபேசி எண்களைப் பெற்றோம், ஆனால் அவர்களது பெயர்களைப் பயன்படுத்தாமல், அவர்களின் தொலைபேசி எண்களின் கடைசி இலக்கங்கள் மூலமாக மட்டுமே அவர்களை அடையாளம் கண்டு அவர்களது கண்ணியத்தைப் பாதுகாத்தோம். இந்த மக்களுக்கும் பராமரிப்பு பேக்கேஜ்கள் விநியோகிக்கப்பட்டன.

அப்போது முதல், இந்த முன்முயற்சி, நன்கு வேகமடைந்து, இப்போது முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. இன்னும் பலர் இந்த பயணத்தில் எங்களுடன் சேர்ந்துள்ளனர், மற்றும் இன்னமும் உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவ எங்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். 115 வீடுகளுக்கு உதவுவதன் மூலம் தொடங்கிய இந்த திட்டம், ஒரு வாரத்தில் 1500 வீடுகளாக பெருகியது, இப்போது பல ரோட்டரி கிளப்புகள் பங்களாதேஷ் முழுவதும் கிட்டத்தட்ட 100 ரோட்டரி கிளப்புகள் என்று நான் கருதுகிறேன் அத்தகைய நிவாரணங்களை அவர்கள் சொந்த மாகவோ அல்லது மாவட்டத்தின் ஆதரவுடனோ வழங்குகிறார்கள், மற்றும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதன் மூலம் பயனடை கின்றன. எங்கள் கிளப் மட்டுமே 300,000 டக்கா மதிப்புள்ள நிவாரணப் பேக்கேஜ்களை பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

வாழ்வாதாரத்தை இழந்தவர் களுக்கு காய்கறி கடை போன்ற சிறிய முயற்சிகளைத் தொடங்க, இப்போது சிறிய மூலதனத்தை வழங்கத் தொடங்கியுள்ளோம்; அது அவர்களின் குடும்பங்களுக்குத் உதவும்.

எழுத்தாளர் பங்களாதேஷின் RC சோனர்கான் டாக்கா, RID 3281, முன்னாள் தலைவர். அவர் 1999 முதல் ரோட்டேரியனாக இருந்து வருகிறார், மேலும் 2010–இல் தனது கிளப்பின் தலைவராக இருந்தபோது, ஒரு பெரிய கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனை திட்டத்தைத் தொடங்கினார். அவரை மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம். hoqueka@gmail.com.

பஞ்சுலாவைச் சேர்ந்த கோவிட் வீராங்கனை

V முத்துக்குமரன்

பஞ்சுலாவில் உள்ள சிவில் மருத்துவமனையில், நிர்வாகத் தலைவரான Dr ரீட்டா கல்ரா, கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆலோசனை வழங்க, சுகாதாரம், உணவுத்திட்டம் மற்றும் யோகா மற்றும் தியானம் உள்ளடக்கிய ஆரோக்கியமான வாழ்க்கைமுறை குறித்து அவர்களுக்கு கல்வி கற்பிக்க எந்த நேரமும் தனிமைப்படுத்தல் மற்றும் OPD வார்டுகளை கண்காணிக்க ஒரு நிபுணர் குழுவை வழிநடத்துகிறார். வைரஸ் பரவியதிலிருந்து, சண்டிகருக்கு அருகிலுள்ள 350 படுக்கைகள் கொண்ட மாவட்ட மருத்துவமனை மிகக் குறைந்த நேரத்தில் சிறப்பு வார்டுகள், ஆய்வகங்கள் போன்றவற்றைக் கொண்ட அர்ப் பணிக்கப்பட்ட கோவிட் சுகாதார மையமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில், RID 3080 சண்டிகர் மிட் டவுனின் முன்னாள் தலைவரான Dr ரீட்டா, மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் மருத்துவரல்லாத பணியாளர்கள் உட்பட 1,000 பணியாளர்களைக் கொண்ட HR துறையை வழி நடத்துகிறார். அவரது முக்கிய பொறுப்புகளில் சில நோய்த்தொற்று கட்டுப்பாடு, மருத்துவமனை பதிவுகளை பராமரித்தல் மற்றும் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடங்கும். "WHO கொரோனா வைரஸை உலகம் முழுவதும் பரவும் ஒரு தொற்றுநோயாக அறிவித்த பின்னர், நோயாளிகள் மற்றும் குடிபெயர்ந்த குடும்பங்களை பரிசோதிக்க ஒரு பிரத்யேக ஃப்ளூ OPDஐ நாங்கள் அமைக்க வேண்டியிருந்தது," என்று அவர் கூறினார். ஊரடங்கின் போது கோவிட் தனிமைப்படுத்துதல் வார்டுகள் மற்றும் ஒரு ICU அமைத்தல் மற்றும் அவற்றின் திறமையான செயல்பாட்டை மேற்பார்வை செய்தல் ஒரு பெரிய சவாலாக இருந்தது.

"NGOக்களிடமிருந்து நன்கொடைகள் மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகள் மூலம் கோவிட் நோயாளிகளுக்கு பொருத்தமான உணவு முறையையும் நாங்கள் பரிந்துரைப்பது சாத்திய மானது. எங்கள் குழு கோவிட் சோதனைக்கு ஒரு மூலக்கூறு ஆய்வகத்தை நிறுவியுள்ளது," என்றார் Dr ரீட்டா.

தனிமைப்படுத்தும் வார்டுகள்

அதிகாலையில் இருந்தே, Dr ரீட்டா கோவிட் நோயாளிகளுக்கு 100க்கும் மேற்பட்ட படுக்கைகளுடைய ஆறு தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளை பார்வையிடுகிறார், ஆலோசனை

மருத்துவமனை ICUவில் Dr ரீட்டா கல்ரா.

வழங்குகிறார் மற்றும் பணியாற்றும் ஊழியர்களுடன் உரையாடுகிறார். நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு உணவின் தரத்தையும் அவர் சரிபார்க்கிறார். இந்த மருத்துவமனையின் OPDயில் சுமார் 250 பேரும், ஒரு நாளில் 40 நோயாளிகளும் கோவிட் சிகிச்சைக்காக வருகிறார்கள்.

கோவிட் நோய்த் தொற்றுகள் அதிகரித்து வருவதால், 22 படுக்கை கள் கொண்ட ICU விரிவுபடுத்தப்பட்டு, நோயாளிகளுக்கு கிருமி இல்லாத சுற்றுச்சூழலை வழங்குவதற்காக திருத்தப்பட்ட HVAC (வெப்பமாக்கல், காற்றோட்டம் மற்றும் ஏர் கண்டிஷனிங்) அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது, என்றார் அவர். ICMRஇன் ஒப்புதலுடன் மருத்துவ மனையின் இரத்த வங்கியில் பிளாஸ்மா சிகிச்சை வசதி விரைவில் அமைக்கப்படும்.

இந்த மருத்துவமனையில் கோவிட் தொடர்பான பெரும்பாலான வசதிகள், PPE கருவிகள் மற்றும் உபகரணங்கள் அரசாங்க மானியங்கள், MPLADS (MP உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்) மற்றும் ரோட்டரி போன்ற NGOகளின் பங்களிப்புகளின் மூலம் நிதியளிக்கப்பட்டன, அவை கோவிட் நிவாரண பணிக்கான நிதியை விரைவாக வழங்குவதற்காக கோவிட் பேரழிவு ரெஸ்பான்ஸ் ஃபண்டுகளை ஏற்படுத்தியுள்ளன. "புறநகர் முகாம்களில் கோவிட் கண்காணிப்பை வலுப்படுத்த இரண்டு ஆம்புலன்ஸ்களுக்காக (வேன்கள்) உலகளாவிய மானியத்திற்கு நான் விண்ணப்பித்துள்ளேன்" என்று Dr ரீட்டா கூறினார்.

கோவிட் குழு

மூன்று ஷிஃப்ட்களில் செயல்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கோவிட் அவசரகால பதிலளிப்பு குழுவை Dr ரீட்டா வழிநடத்துகிறார். "எங்களிடம் ஒரு பட்டியல் அமைப்பு உள்ளது, இதன்படி நாளொன்றுக்கு குறைந்தது 20–25 பேரை கண்காணிக்க டாக்டர்கள் கோவிட் நோயாளிகளை வாரத்திற்கு ஒரு முறை பார்ப்பார்கள்." சுகாதாரம், துப்புரவு, ஊட்டச் சத்து மற்றும் மனநலம் மற்றும் சமூக நல்வாழ்வுக்கான உடற்பயிற்சி குறித்த கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலமாக மட்டுமே ஆரோக்கியமான வாழ்க்கை முறை சாத்தியமாகும் என்று அவர் விளக்கினார்.

பல்பணி நிபுணர்

கடந்த நான்கு மாதங்களாக ஊரடங்கு மற்றும் கோவிட் கேஸ்கள் இருப்பதால் அவரது தொழில் வாழ்க்கை மிகவும் பரபரப்பாக இருந்துள்ளது. கோவிட் குழுவை வழிநடத்துவதும், மருத்துவ மனை விவகாரங்களை நிர்வகிப்பதும் மிகவும் கடினமானது. ஆனால் அவர் தனது வழக்கமான யோகா மற்றும் தியான அமர்வுகள் "மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பயனுள்ளதாக இருப்பதை உணர்கிறார். ரோட்டரி மூலம் சமூகத்துடன் இணைவதற்கான நேரத்தை யும் நான் ஒதுக்குகிறேன்."

கோவிட் நோய்த் தொற்றின் பயங்கரத்தில் இருந்து வெளியே வந்த பிரபா (38) மற்றும் கவிதா (25) ஆகியோர் Dr ரீட்டா மற்றும் அவரது குழுவினரின் "இரக்கம், தொற்றுநோயை எதிர்த்து போராட செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய நல்ல ஆலோசனை" ஆகியவற்றிற்காக அவர்களை பாராட்டினர். மற்றொரு நோயாளியான, பிரதீப் (40), மருத்துவமனையில் அளிக்கப்பட்ட நல்ல சூழலினால் வீட்டிலேயே இருப்பதைப் போன்று உணர்ந்ததாகக் கூறினார். "நொய்த்தொற்றின் போது ஆதரவு அமைப்புகளை நிறுவுவதிலும், தடுப்பு பராமரிப்பு முன்முயற்சிகளை மேற்கொள்வதிலும் Dr ரீட்டா உந்துசக்தியாக இருக்கிறார்" என்று RC சண்டிகர் மிட் டவுன் தலைவரான சஞ்சய் பாட்டியா கூறினார். நோயாளிகள், பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுக்களுக்கான அவரது ஆக்கச் சிந்தனையுடைய யோசனைகள் நிலையான நெறிமுறைகளை விட முன்னேறியுள்ளன, என்றார் அவர்.

"ஒருபோதும் தளராத" மனப்பான்மையுடனும், சமூகத்திற்கு 100 சதவீதத்தை வழங்குவதில் அவரது அர்ப்பணிப்புடனும், "Dr ரீட்டா பஞ்ச்குலாவின் இரும்பு பெண்மணி" என்று கிளப் செயலாளர் ஷுச்சி தாக்கூர் கூறினார்.

"தற்சமயம் நாங்கள் ஒரு கோவிட் சுகாதார மையமாக எங்களை நிலைநிறுத்திக் கொண்டாலும், அதை முழுமையாக அர்ப்பணித்த கோவிட் மருத்துவ மனையாக மாற்றுவதே எங்கள் நோக்கமாகும். மேலும் எங்கள் அடுத்த முயற்சி, நேர்மறை பரிசோதனை முடிவைக் கொண்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும் அவர்களின் பிறந்த குழந்தைகளுக்கும் சிறப்பு கவனிப்பை வழங்குவதற்காக ஒரு ICU, OT மற்றும் பிரசவ அறை அமைப்பதாகும்" என்று அவர் கூறினார்.

வடிவமைப்பு: L குணசேகரன்

கோவிட்-19 நிவராணப் பணியில் "தனி ஒருவன்"

அனுபா ஜெயின்

ரோட்டரி மாவட்டம் 3190-இன் கீழ் செயல்படும் ரோட்டரி பெங்களூரு மன்யாதா சங்கத்தின் தலைவர் முகமது தஸ்லீலுக்கு பெங்களூர் ரோட்டரி சங்கம் வருடாந்திர மெக்லிவர் விருதை வழங்கியுள்ளது. ரோட்டரி பெங்களூரு நூற்றாண்டு சங்கம் அவருக்கு சிறந்த சமூக சேவைக்கான விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த மார்ச் மாதம் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டபோது புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவியதற்காகவும், பொது முடக்கத்தின் தொடக்க காலத்தில் முன்னணியில் நின்று பல்வேறு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதையும் அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

பொது முடக்கத்தின் முதல் இரண்டு மாதங்களில் தனிப்பட்ட முறையில் இரண்டு அல்லது மூன்று தொண்டர்களுடன் தஸ்லீல் சேவையில் ஈடுபட்டார். மே மாத இறுதியில் புலம்பெயர் தொழிலாளர்கள் சொந்த ஊர் திரும்ப ஷிராமிக் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டபோது அவர்களுக்கு தஸ்லீல் மிகவும் உதவிகரமாக இருந்தார். அவரின் முயற்சிக்கு 25 தொண்டர்களும் சங்க உறுப்பினர் ஒருவரும் உறுதுணையாக இருந்துள்ளனர்.

பொது முடக்கம் தொடங்கிய திலிருந்தே தஸ்லீல் மற்றும் அவரது குழுவினர் அதிகாலை 5 மணிக்கு அருகில் உள்ள ஒரு கிடங்கில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அங்கு பாதிக்கப் பட்டவர்களுக்காக உணவுப் பொட்டலங்களையும் அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருள்களை பாக்கெட்டுகளாகத் தயாரித்தும் மாற்றுத்திறனாளிகள், தினக்கூலிகள், புலம்பெயர் தொழிலாளர்கள், கொரோனா நோய் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்கள், மற்றும் சேரியில் வசிக்கும் ஏழைகளுக்கு விநியோகித்து வந்தனர்.

இதுதவிர 10 ஆயிரம் முகக்கவசங்கள், முக தடுப்புகள், 5 ஆயிரம் பாட்டில் கிருமி நாசினிகள், 32 டன் காய்கறிகள்

RC *பெங்களூரு மான்யதாவின் ஆக்ஸிஜன் வங்கி.*

மற்றும் உணவு தானியங்களை 16,000த்துக்கும் மேலான மாற்றுத் திறனாளிகள் குடும்பத்தினருக்கு தஸ்லீல் வழங்கியுள்ளார். தினமும் 40 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் தயாரித்து மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள், புலம்பெயர் தொழிலாளர்கள், கொரோனா தொற்று அதிகம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கி யுள்ளார். இது தவிர 'இஸ்கான்' கோயிலுக்கு காய்கறிகளும் விநியோகித்துள்ளார். கோயில் பசுமடத்தில் பராமரிக்கப் பட்டு வரும் 50 பசுக்களுக்குத் தேவையான தீவனங்களையும் வழங்கியுள்ளார். மேலும் பொது முடக்கத்தால் வேலையின்றி வீட்டிலேயே முடங்கிப்போன 200 ஆட்டோ டிரைவர்களுக்கு நிதியுதவியும் வழங்கிவந்துள்ளார்.

மன்யாதா ரோட்டரி சங்கம் அண்மையில் 'ஆக்ஸிஜன் சேமிப்பு' வங்கியை ஏற்படுத்தியுள்ளது.

சங்கத் தலைவர் மொஹமது தஸ்லீல் மக்களுக்கு பழங்கள் வழங்குகிறார்.

ஏழைகளுக்குத் தேவையான வைட்டமின் மாத்திரைகள் வழங்குவது, ஆக்ஸிஜன் தேவைப் படுபவர்களுக்கு அதற்கான வசதிகளை செய்து தருவது என பலவிதங்களில் உதவி வந்துள்ளனர். கடந்த 3 மாதங்களில் 50 தொண்டர்கள் உதவியுடன் ரூ.39 லட்சம் மதிப்புள்ள நிவாரண உதவிகளை சங்கம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் RC பெங்களூரு சவுத்வெஸ்ட், RID 3190, உறுப்பினர்.

மாணவர்களுக்கு ரோட்டரி முகக்கவசங்கள்

ரோட்டரி செய்திக்குழு

நாடு தழுவிய ஊரடங்கு காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட SSLC தேர்வு எழுதும் மாணவர்களின் பாதுகாப் பிற்கான ஏற்பாடுகளைச் செய்ய RID 3190இன் கல்வியறிவுக் குழு கர்நாடக அரசுக்கு உதவுகிறது. நிலுவையில் உள்ள SSLC தேர்வுகள் ஜூன் 25 முதல் ஜூலை 24 வரை நடத்த திட்ட மிடப்பட்டிருந்தன. அறிவிப்பு வந்த போது, "தேவைகளை நாங்கள் கண்டறிந்து, தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முகக்கவசங்களை வழங்க உதவுவதற்காக எட்டு வருவாய் மாவட்டங்களில் உள்ள எங்கள் கிளப்களை அணுகினோம்" என்று மாவட்ட கல்வியறிவு குழுத் தலைவர் குருநாகேஷ் அவர்கள் கூறினார்.

70 கிளப்புகளின் ஆதரவுடன், முகக் கவசங்கள் எட்டு பிரிவுகளில் தயாரிக்கப் பட்டன, அதில் பெண்கள் சுய உதவிக்குழுக்கள் மற்றும் மாநிலத்தின் பல்வேறு NGOக்களின் வாழ்வாதார முயற்சிகள் உள்ளடங்கும். ரோட்டரி சின்னத் துடன் கூடிய 250,000 பருத்தி துணியாலான முகமூடிகள் 1,030 தேர்வு மையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தேர்வுக்கூடக் கண் காணிப்புக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் முகமூடிகள் வழங்கப் பட்டன.■

ஜோத்பூரில் மகிழ்ச்சியைப் பரப்பும் மகளிர் ரோட்டரி சங்கம்

கிரண் ஜெஹரா

PM கேர்ஸ் நிதிக்கு ரூ.1 லட்சம் பங்களிப்பு, நலப் பணியாளர்களுக்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள PPE பொதிகள், முகமூடிகளுக்கும் தூய்மைப்படுத்திகளுக்கும் ரூ.66,000, திரும்பி வருகிற இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ரூ.1 லட்சம் செலவில் உணவளித்தல் என்று பல திட்டங்களை நிறைவேற்றியுள்ள RID 3053ன் பெண்கள் மட்டுமே பங்கு பெறும் சங்கமான RC ஜோத்பூர் பத்மினி மூன்று அரசுப் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியுள்ளது, ஜோத்பூரின் வெளிப்பகுதியில் உள்ள சல்வா கல்லா என்ற கிராமத்தில் ஓர் அங்கன் வாடியைப் புதுப்பித்துள்ளது. இந்தக் கிராமத்தில் இந்தச் சங்கம் ஒரு தொழில் சார்ந்த பயிற்சி மையம் மற்றும் ஒரு வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டத்தையும் இயக்கிவருகிறது.

மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பி வரும்போது அவர்களுடைய மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்க நாங்கள் ஆவலுடன் உள்ளோம்'' என்கிறார் சங்கத் தலைவர் ராஜ்ஸ்ரீ சௌதரி. இவரே ஒரு கிராமப் பின்னணியிலிருந்து வந்திருப்பவர் என்பதால், இவர் கிராமப்புறங்களை மையமாகக் கொண்ட முன்னேற்றத் திட்டங்களில் பணியாற்ற விரும்பினார்.

இதற்காக, இந்தச் சங்க உறுப்பினர்கள் வெவ்வேறு கிராமங்களின் RCC உறுப்பினர்களைத் தொடர்புகொண்டார்கள், அவர்களுடைய கிராமங்களைச் சுற்றியுள்ள பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை, பெண், ஆண் விகிதத்தைக் கண்டறிந்தார்கள். மாணவியருடைய விகிதம் மிகுதியாக இருந்த பள்ளிகளை நாங்கள் தனிப்பட்டமுறையில் சென்று பார்க்கத் தீர்மானித்தோம் என்கிறார் ராஜ்ஸ்ரீ.

சுமார் 30 பள்ளிகள் இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றன, நிறைவாக, புத்நகர், அக்தாலி, பிபர்லை கிராமங்களைச் சேர்ந்த மூன்று அரசுப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான பிரியா மேத்தா, பிபர்லை நகராட்சிப் பள்ளி மாணவரான பதின்மூன்று வயது பாவ்னாவைச் சந்தித்ததை நினைவுகூர்கிறார். பாவ்னா ஓர் ஆசிரியராக

RC ஜோத்பூர் பத்மினி சங்கத்தின் கணினி கற்பிப்பு மையத்தில் மாணவர்கள்.

மகிழ்ச்சி பள்ளி ஒன்றில் சங்க உறுப்பினர்கள் சங்கத்தலைவர் ராஜஸ்ரீ சவுதரியுடன்.

விரும்பினார். ஆனால், அவர் பூப்பெய்திவிட்டதால், அந்தக் கல்வியாண்டின் நிறைவில் மீண்டும் பள்ளிக்குச் செல்ல அவருக்கு அனுமதி கிடைக்காது. இதனால், அவருடைய கனவு நிறைவேறாது என்பதுதான் சோகம்.

இந்தப் பள்ளியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனிக் கழிப்பறை இல்லை. அங்குள்ள கழிப்பறை ஒரு சிறிய அறைதான், அதில் தண்ணீர் இணைப்போ, கை கழுவும் நிலையமோ இல்லை என்கிறார் பிரியா.

இந்தத் திட்டத்துக்கான நிதியைத் திரட்டுவதற்காக, இந்தச் சங்கம் ஜோத்பூர் ஜூனியர்-தான்ஜ நடத்தியது, ரூ.22 லட்சம் திரட்டியது. இந்தத் தொகை முழுவதும் பள்ளிகளைப் புதுப்பித்தல், WinS வசதிகளை, ஒரு நூலகத்தை, விளையாடும் கருவிகளை அமைத்தல், சீருடைகள், காலணிகள், பள்ளிப் பைகள், அமர் பொருட்களுக்காகச் செலவிடப்பட்டது. பாவ்னா போன்ற பெண்கள் மீண்டும் பள்ளிக்குத் திரும்பவேண்டும், தங்கள் கனவுகளை நனவாக்கவேண்டும், இதுதான் எங்கள் விருப்பம் என்கிறார் ராஜ்ஸ்ரீ. இந்த ஆண்டு, இலங்கையிலுள்ள RC கண்டி ஹில் கேபிடல், RID 3220உடனும் TRFஉடனும் இணைந்து இந்தச் சங்கம் ஒரு $50,000 பன்னாட்டு நல்கைக்காகப் பணியாற்றுகிறது. இந்தத் தொகையைக் கொண்டு ஏழு அரசுப் பள்ளிகளில் WinS வசதிகள் நிறுவப்படும், இதனால் 3,000 மாணவர்கள் பலன் பெறுவார்கள்.

இத்துடன், இந்தச் சங்கமும் அதன் ராஜ்மாதா பள்ளி இன்டராக்ட் சங்கமும் சேர்ந்து, ஜோத்பூரிலுள்ள 17 அரசுப் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான தூய்மை, சுகாதாரப் பயிலகங்களை நடத்தியுள்ளன. நாடகங்கள், விளையாட்டுகளின் மூலம் இவர்கள் இளம்மாணவ, மாணவியருக்கு மாதவிலக்குத் தூய்மை பற்றிய நுண்ணுணர்வை உண்டாக்கினார்கள்.

மார்ச் மாதத் தொடக்கத்தில் இச்சங்கமும் அதன் RCCகளும் சேர்ந்து, ஜோத்பூரைச் சுற்றியுள்ள வெவ்வேறு கிராமங்களில் 200 பறவைக்குளியல் மையங்களை அமைத் தார்கள். இந்தத் திட்டத்தில் கிராம மக்கள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள்; வெப்பமான கோடைக் காலத்தின் போது பறவைகள், மிருகங்களுடைய நீர் வேட்கையைத் தங்களால் தீர்க்க இயலும் என்று மகிழ்ந்தார்கள் என்கிறார் சங்கத் தலைவர்.

சல்வா கல்லா-விலுள்ள அங்கன்வாடி, சுற்றியுள்ள ஐந்து கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு உதவுகிறது. இந்தச் சங்கம், ரூ.30,000 செலவில் அந்த வளாக த்தைப் புதுப்பித்தது, ஒழுகுகிற கூரையைச் சரிசெய்தது, சுவர்களுக்கு வண்ணம் பூசியது. முடக்கத்தின்போதும், அங்கன்வாடியில் சிறு குழந்தைகளுக்கு உணவு, பால் வழங்கப் பட்டது. இந்தக் கடினமான நேரத்தில் கிராமத்து மக்களால் தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு எந்தப் பணமும் சம்பாதிக்க இயலவில்லை. ஆகவே, இது அவர்களுடைய குழந்தைகளுக்கு ஒரு வரமாக அமைந்தது என்கிறார் ராஜ்ஸ்ரீ.

ஏப்ரல் மாதத்தின் நடுவில், ஜோத்பூரிலுள்ள இரு அரசு மருத்துவ மனைகளில் ரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டது. கோவிட் சூழலால் பெரிய ரத்தக்கொடை முகாம்களுக்கு ஏற்பாடு செய்ய இயலவில்லை. ஆகவே, சங்க உறுப் பினர்கள் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து, மற்ற பல சங்கங் களுடன் இணைந்து செயல்பட்டார்கள், 41 ரத்தக்கொடை முகாம்களின் வழியாக 2,000க்கும் மேற்பட்ட யூனிட்கள் ரத்தத்தைத் திரட்டினார்கள்.■

Rotary PEOPLE OF ACTION

பள்ளிகளுக்கு 10,000 இருக்கைகளை வழங்கவுள்ளது RID 2982

V முத்துக்குமரன்

தமிழ் நாட்டின் நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொமாரபாளையத்திலுள்ள "எக்செல் மாநாட்டு மைய"த்தில் நீலத்திட்டம் சிறப்புறத் தொடங்கப் பட்டது. அடுத்த ஐந்து ஆண்டு களில், RID 2982ன் ஆறு வருவாய் மாவட்டங்களில் 400 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 10,000 மேசை-இருக்கைகளை வழங்கும் இலக்குள்ள திட்டம் இது.

ஒரு மாவட்ட நல்கையிலிருந்து 324 மேசை-இருக்கைகளை வழங்க நாங்கள் திட்டமிட்டபோது, அரசுப் பள்ளிகளுக்கு அப்படிப்பட்ட 10,000 அமர் பொருள் தொகுதிகளுக்கான தீவிரத் தேவை உள்ளது தெரியவந்தது. ரோட்டரியன்கள், தனியார் அமைப்புகள், பெருநிறுவனங் களுடைய ஆதரவுடன், சென்ற ஆண்டில் 90 பள்ளிகளுக்கு நாங்கள் ரூ.36 லட்சம் செலவில் 1,000 மேசை-இருக்கைகளை வழங்கினோம்" என்கிறார் IPDG A K நடேசன்.

இந்த மேசை-இருக்கைகள், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களில் பல இடங்களில் உள்ள MSME பிரிவுகளால் உள்ளூரிலேயே செய்யப்பட்டன. இத்துடன், பள்ளிக் கல்வி அமைச்சர் K A செங்கோட்டையன், மற்றும் மாநில அமைச்சர்கள், நாமக்கல் ஆட்சி தலைவர் K மேகராஜ், S P R அருளரசு கலந்துகொண்ட ஒரு நிகழ்வில், பள்ளிகளுக்கு 322 கை கழுவும் நிலையங்களும் வழங்கப்பட்டன. வரும் ஆண்டு களில், அருகிலுள்ள RIDகளான 2981, 3201, 3202, 3000க்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். எக்செல் கல்வி நிறுவனங்கள் குழு, காவேரி தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மகேந்திரா கல்வி நிறுவனங்கள், முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி, ஞானமணி தொழில்நுட்பக் கல்லூரி, கிறிஸ்டி குழு ஆகிய கல்வி அமைப்புகளும் நீலத் திட்டத்துக்குப் பங்களித்துள்ளன.

இப்பகுதியில் தாமதமில்லாமல்

தமிழ்நாடு பள்ளி கல்வி அமைச்சர் K A செங்கோட்டையன் மற்றும் அமைச்சர்கள் "நீலத்திட்டம்" துவக்க விழாவில் IPDG A K நடேசன் மற்றும் பல முன்னாள் ஆளுநர்களும் உள்ளனர்.

பள்ளித் திட்டத்தைத் தொடங்குவதற் காக ஜூலையில் RC ராசிபுரம் $5,000 பங்களித்தது, இதற்கு இணையான ஒரு தொகையை நடேசன் வழங்கினார்.

மருத்துவமனைகளுக்குக் கோவிட் தொடர்பான பெரிய நன்கொடைகள்

இந்த மாவட்டம், 40 மாவட்டத் தலைமையக, உள்ளூர் மருத்துவ மனைகள், முதன்மை நல மையங்களுக்குப் பலவிதமான கோவிட்-தொடர்பான கருவிகளை நன்கொடையாக அளித்துள்ளது. நாங்கள் இப்போது மருத்துவ மனைகளில் கை கழுவும் நிலையங்களை நிறுவிவருகிறோம்'' என்றார் நடேசன்.

மருத்துவமனைகளுக்கு வழங்கப் பட்ட கோவிட் நன்கொடைகளை 5300, 5330 ஆகிய RIDகள் ஆதரித்தன, லாஸ் வேகாஸ் PDG ச்செயாப் எலாவர், சான் பெர்னார்டினோ PDG மன்ஜூர் மஸ்ஸே ஆகியோர், வழங்கும் RID 2982வுடன் இதை ஒருங்கிணைத்தார்கள்.

இன்னும் பெரிய அளவில், இந்த மாவட்டத்திலுள்ள 71 சங்கங்களும் மருத்துவ முகாம்களை நடத்துகின்றன, கோவிட்-19க்கு எதிரான மக்களுடைய நோயெதிர்ப்பாற்றலை வலுப்படுத்து வதற்காக அவர்களுக்கு மூலிகை மருந்துகளை வழங்குகின்றன. இது வரை, கடந்த மூன்று மாதங்களில் நாங்கள் இப்படி 95 முகாம்களை நடத்தியுள்ளோம், இதன்மூலம், இந்தப் பகுதியில் சுமார் 50,000 பேர் பலன் பெற்றுள்ளார்கள். எங்களுடைய மாற்று மருந்துகளுக்கு மாவட்ட மருத்துவக் குழுக்கள் ஒப்புதல் அளித்துள்ளன'' என்று விளக்குகிறார் நடேசன்.

இத்துடன், இந்த மாவட்டம் மூன்று லட்சம் முகக்கவசங்கள், 9,000 N95 முகமூடிகள் (மருத்துவமனைகள், தூய்மைப் பணியாளர்களுக்கு), ஆறு மாவட்ட மருத்துவமனைகளுக்கு 1,500 PPEக்களை வழங்கியுள்ளது. கோவிட் பேரிடர் எதிர்வினை நிதியிலிருந்து சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்து வமனைக்கு ரூ.7.70 லட்சம் மதிப்புள்ள மின்சார மருத்துவ உதவி வண்டி ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு ரோட்டரி டயாலிசிஸ் மையங்கள்

இந்த மாவட்டத்திலேயே முதன்முறையாக, ஓசூர், நாமக்கல்லில் தலா ஐந்து இயந்திரங்களுடன் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பிரேசிலைச் சேர்ந்த RIDக்கள் 4630, 4751 உதவியுடன் ஓர் உலக நல்கைத் திட்டத்தின்கீழ் இது நிறைவேற்றப்பட்டது. இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் RO ஆலை, மல்ட்டிப்பாரா கண்காணிப்பான்கள், முற்றிலும் தானியங்கியான ஃபௌலர் படுக்கைகள், குளிர்பதன வசதி கொண்ட சிகிச்சை மையங்கள் உள்ளன. தலா $73,000 மதிப்புள்ள இந்த இரண்டு டயாலிசிஸ் பிரிவுகளுக்காக, பிரேசிலைச் சேர்ந்த PDG அன்டோனியா கர்டாசோ எங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டார் என்றார் நடேசன்.■

RID 3070 வன் மஹோத்ஸவை பெரிய அளவில் கொண்டாடுகிறது

ரோட்டரி செய்திக்குழு

இந்தியாவில் உள்ள ரோட்டரி கிளப்புகள் ஜூலையில் கொண்டாடுகிற வன் மஹோத்ஸாவின் போது, மாவட்டத்திலேயே அதிக அளவில் மரம் நடுகின்ற கிளப்பை பாராட்டும் வகையில், RID 3070-ஐச் சேர்ந்த PDG சுரீந்தர் சேத், ஒவ்வொரு தாவரத்திற்கும் ரூ.10 அன்பளிப்பாகக் கொடுப்பார். மரம் நடுதலை பெரிய அளவில் செய்யு மாறு கிளப் தலைவர்களை மாவட்ட செயலாளர் சுனில் தத்தா வலியுறுத்தியுள்ளார். ''தரிசு நிலங்களிலும், வெற்று இடங்களிலும், பூர்வீக மரக்கன்றுகளை நடுமாறு அவர் எங்களை ஊக்கப்படுத்தியுள்ளார்'' என்று RC சுந்தர் நகரைச் சேர்ந்த ஜெகதீஷ் சந்த் படேல் கூறினார்.

PDG சேத்தால் வழங்கப்படும் இந்த பணச்சலுகையானது, அந்த வெகுமதியைப் பெறும் வகையில் அதிக எண்ணிக்கையிலான மரங்களை நடுவதில் கிளப்புகளிடையே

போட்டிக்கு வழிவகுத்துள்ளது என்று அவர் கூறினார். இருப்பினும், சரியான பராமரிப்பு, வழக்கமான நீர்ப்பாசனம் மற்றும் வேலியிடுதல் ஆகியவை அந்தப் புதிய தாவரங்கள் உயிர்பிழைத்திருப் பதற்கு முக்கியமாகும். ''தாவரங்கள் உயிர்பிழைத்திருப்பதை சரி பார்த்து உறுதி செய்வதற்கான வழிமுறையை நாம் அறிமுகப் படுத்த வேண்டும்'' என்று படேல் கூறினார்.■

சுவிட்சர்லாந்தில் சீஸ் தயாரிப்பும், மாட்டுச் சவாரியும்!

ரஷீதா பகத்

பொது முடக்க காலத்தில் நான் பெரும்பாலும் வீட்டிலேயே முடங்கிக்கிடந்தாலும் இடையிடையே அவ்வப்போது அலுவலகம் செல்வதுண்டு. தற்போது நான் இந்தியாவில் அதிலும் குறிப்பாக சென்னையில் இருக்க வேண்டிய சூழ்நிலையில் மனதை கவர்ந்த இடங்களுக்கு நான் சென்று வந்ததையும், அங்கு எனக்கு திகிலான, சுகமான அனுபவங்களையும் மனதில் அசைபோட்டேன்.

அப்படி எனது நினைவுக்கு வந்தது சுவிட்சர்லாந்து நாட்டுப் பயணம். அது ஒரு வித்தியாசமான பயணம். 2013ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலாத்

ரைன் ஆற்றங்கரையில்.

துறை அந்த நாட்டின் கிராம மக்களின் வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொள்ள 33 நாடுகளைச் சேர்ந்த 144 பத்திரிகையாளர்களுக்கு அழைப்புவிடுத்திருந்தது. சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலாத் துறை தங்கள் நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் இப்படி அழைப்பு விடுப்பதுண்டு. இந்த ஆண்டு பழங்கால வாழ்க்கைமுறை என்ற குறிக்கோளுடன் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பென்ஸெல் என்ற இடத்தில் எங்கும் பசுமையாக காட்சியளிக்கும் ஆல்பைன் பிரதேசங்கள், ஸ்காஃபாஸென் கான்டன் பகுதியில் ரைன் நதிக்கரையோர தாழ்நிலப்பகுதிகள், கான்ஸ்டன்ஸ் ஏரிப் பகுதியில் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கான சொர்க்க பூமி மற்றும் அழகிய சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்.

பசுக்களின் தேசம், சீஸ், சாக்லேட்டுகள்:

விவசாயம் மற்றும் பால் பண்ணைத் தொழில்களுக்குப் பிரசித்தி பெற்றது சுவிட்சர்லாந்து என்று சொல்லுவார்கள். ஆனால், 2013ஆம் ஆண்டு கோடை காலத்தில் இங்குள்ள விவசாயிகளுக்கு அது கடினமான நேரம். நான் அங்கு 5 நாள்கள் தங்கியிருந்தபோது அங்குள்ள விவசாயிகள், கோடையில் இங்கு விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவு. வீட்டில் உள்ள பெண்கள் கற்பி்த்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதிநேர வேலைக்குச் செல்வதன் மூலமே குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியும் என்றனர்.

ஆனால், எல்லை நெருக் கடிகளுமே ஒரு புதுமையானத் தீர்வுகளைக் கொண்டு வருகின்றன என்பதே உண்மை. சுற்றுலாவந்த பத்திரிகையாளர்களில் சிலர், அரைநாள் ஒரு பண்ணையில் செலவழிக்க விரும்பியதால் டோரிஸ் மற்றும் ஹென்ஸ் மோர்கன் தம்பதிகளுக்குச் சொந்தமான 29 ஏக்கர்

உறைய வைக்கும் சதுப்பு நிலம்.

பரப்பளவிலான போல்டர்ஹாஃப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஸ்காஃபாஸென் கான்டன் பகுதியில் ரைன் நதி தாழ்நிலப்பகுதியில் அமைந்திருந்த அந்த வேளாண் மற்றும் பால் பண்ணை பார்ப்பதற்கே ரம்மியமாக இருந்தது. ஒருபக்கம் இயற்கை வேளாண்மை சார்ந்த மிளகு, தக்காளி, சுரைக்காய், வெள்ளரி, காலிஃபிளவர், காளான் மற்றும் மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. அதன் அருகிலேயே பால் பண்ணையும் அமைந்திருந்தது. அங்கு 25 பசுக்களும், 30 எருமை மாடுகளும் வைத்து பராமரிக்கப்பட்டு வந்தன. இவற்றின் மூலம் தினமும் 300 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் ஒருபகுதி வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்டு எஞ்சிய பால் சுவை மிக்க பாலாடைக் கட்டிகளாக (சீஸ்) தயாரிக்கப்படும். ஹென்ஸ் மோர்கன் இறைச்சி கடை ஒன்றையும் நடத்தி வந்தார். ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்பவர்களுக்கு அவர்கள் எப்படி கேட்கிறார்களோ அப்படி மாட்டிறைச்சி வழங்கப்படும். பண்ணை முழுவதும் சூரியசக்தி மின்சாரத்தில் இயங்கிவந்தது. தங்களது தேவைபோக மீதமுள்ள மின்சாரம் அரசுக்கு விற்கப்பட்டு வந்தன. இந்தியாவிலும் இது நடப்பதை நான் கற்பனை செய்து பார்த்தேன்.

பண்ணைச் சுற்றுலா:

சுவிட்சர்லாந்து அதிக செலவுபிடிக்கும் நாடு என்பது எங்களுக்குத் தெரியும். உள்ளூர் மக்களும் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளதை உணர்ந்திருப்பார்கள். விவசாயம் மற்றும் பால் பொருள்கள் தயாரிப்பு மூலம் கிடைக்கும் வருமானம் ஒரு குடும்பத்தை பராமரிக்க போதுமானதாக இல்லை என்பதால் ஹென்ஸ் மற்றும் அவரது மனைவி டோரிஸ் சில ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் பண்ணையில் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தனர். அவற்றில் ஒன்று பாலாடைக் கட்டி தயாரிப்பது. மற்றொன்று மாட்டுச் சவாரி.

அன்று நாங்கள் 14 பேர் அவர்களின் பண்ணையில் நேரத்தை செலவிட்டோம். முதலில் பாலாடைக் கட்டி தயாரிப்பில் ஈடுபட்டோம்.

இந்தியாவில் சமையலறையின் வெப்பத்தை சமாளித்த பெண்களுக்கு இந்த வெப்பம் ஒன்றும் பெரிதல்ல. நாங்கள் அனைவரும் சமையலறையில் ஒன்றுகூடினோம். விவசாயியான ஹென்ஸ் புதிதாக உற்பத்தியான பாலை கொதிக்கவைப்பதற்காக ஒருபெரிய கொப்பரை கடாயில் கொட்டினார். ஒவ்வொருவருக்கும் ஒருவேலை தரப்பட்டது. ஒருவர் பாலின் கொதிநிலையை கண்காணிக்க வேண்டும். மற்றொருவர் பாலை கிளறிவிட வேண்டும். வேறுஒருவர் பாலாடைக்கட்டி தயாரிப்பதற்கான பொருள்களைப் போட்டு கலக்க வேண்டும். பால் உறைந்து ஜெல்லிபோல் ஆனவுடன் அதை துண்டுபோடும் பணி தரப்பட்டது. அதை திடப்பொருளாக்குவது என்பது எங்களுக்கு எளிதாக இருந்தபோதிலும் அதை கத்தியால் துண்டுபோடுவது கடினமாகவே இருந்தது.

ஒரு பெரிய பலகையில் மஞ்சத் தூள், பச்சை வெங்காயம், மசாலாப் பொருள்கள் நறுக்குவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்தன. எங்களில் ஒரு சிலருக்கு அந்தப்பணி வழங்கப் பட்டது. அதை நறுக்குவதற்கு எங்களுக்கு கூர்மையான கத்திகள் வழங்கப்பட்டன. அந்த வேலை எங்களுக்கு பிடித்தமானதாக இருந்ததால் அதை போட்டி போட்டு செய்ய நாங்கள் முன்வந்தோம். இறுதியில் நறுக்கப்பட்ட காய்கறிகள், மசாலாப்பொருள்கள் பாலாடைக் கட்டிக்குள் வைக்கப்பட்டன.

வேலை சற்று கடினமாக இருந்தபோதிலும் அதை புத்துணர்ச்சியுடன் செய்தோம். முகக்கவசம் தேவைப்படவில்லை. கொரோனா வைரஸ் பயமும் அப்போது இல்லை. உடலுழைப்பு இருந்ததாலோ என்னவோ நன்றாக பசி எடுத்தது. ஒரு ஜாடியில் வைக்கப்பட்டிருந்த கிரீம்களிலிருந்து நாங்களே வெண்ணெய் தயாரித்து ரொட்டியில் தடவி சாப்பிட்டோம்.

நாங்கள் பாலாடைக்கட்டி தயாரித்துக் கொண்டிருந்தபோது ஹென்ஸ் எங்களை படம் பிடித்திருந்தார். நாங்கள் புறப்படும் முன்பு நாங்கள் தயாரித்த பாலாடைக் கட்டியை ஒரு சிறிய மரப்பெட்டியில் வைத்து அதன் மேல் எங்கள் படத்தையும் வைத்துக் கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். இது எங்களுக்கு நற்சான்றிதழ் அளித்ததுபோல் இருந்தது.

பால் கட்டி செய்யப்படுகிறது.

பின்னர் மாட்டுப் பண்ணைக்கு அழைத்துச் சென்று பால் கறப்பது எப்படி என்று சொல்லிக்கொடுத்தனர். சாதாரணமாகவே சுவிட்சர்லாந்து நாட்டு மாடுகள் கொழுகொழு என்று குண்டாக இருக்கும். அவற்றின் மடியிலிருந்து பாலைக் கறந்து ஒரு மடக்கு குடித்தபோது அதன் ருசியே அலாதியாக இருந்தது. சுவிட்சர்லாந்து நாட்டு பண்ணை அனுபவம் புதுமையாக இருந்தது.

மாட்டுச்சவாரி:

பால் பண்ணையில் பராமரிக்கப்படும் மாடுகளின் மீது அமர்ந்து சவாரி செய்வது ஒரு புதுமையான அனுபவம். நாங்கள் சவாரிக்குச் செல்வதற்கு முன்பு ஒரு ஜோடி ஆடைகளை கூடுதலாக கையில் எடுத்துச் செல்லுமாறு எச்சரித்தனர். முதல்நாள் மழை பெய்து சாலை சேறு, சகதியாக இருந்ததால் இப்படிச் சொல்கிறார்களோ என்று நினைத்தோம். ஆனால், எங்கள் வழிகாட்டி சொன்ன கதை வேறாக இருந்தது. ஜப்பானிய பத்திரிகையாளர் ஒருவர் மாட்டுச் சவாரிக்கு வெள்ளை நிற கால்சட்டையுடன் வந்துள்ளார். அவர் சவாரி செய்த மாடும், மற்றொரு மாடும் ஒன்றை ஒன்று உரசிச்சென்ற போது சாணம் போட்டதில் அவரது வெள்ளை கால்சட்டையின் நிறமே மாறிவிட்டிருந்ததாம்.

இதனால் நாங்கள் பயந்து விடவில்லை. ஆனால், இது எங்கள் பயணத்தின் இறுதிநாள். எனவே சாணக் கறைபடிந்த ஜீன்ஸுடன்

வீடு திரும்ப விரும்பவில்லை. மாட்டுச் சவாரியின்போது ஏற்படும் விபரீதங்களுக்கு தாம் எந்த விதத்திலும் பொறுப்பாக முடியாது என்று எங்களிடம் பொறுப்பு துறப்பு படிவத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டார் ஹென்ஸ். முதலில் மாட்டுச் சவாரிக்கு நான் தயாராக இல்லை. ஆனால், ஹென்ஸ், "என்னை நம்புங்கள், உங்களால் முடியும்" என்றார். பின்னர் மனதைத் தேற்றிக்கொண்டு மாட்டுச் சவாரிக்கு தயாரானேன். எனக்கு கிடைத்த மாட்டின் பெயர் அம்பரா.

"உங்கள் பசுவிடம் பேசுங்கள், அவற்றை தொட்டு உணருங்கள், தட்டிக்கொடுங்கள். அப்போதுதான் மாட்டுச்சவாரி உங்களுக்கு வசதி யாக இருக்கும்" என்றார் ஹென்ஸ். நான் அதைச்செய்ய முயன்றபோது அம்பரா தனது அதிருப்தியையும், கோபத்தையும் வெளிப்படுத்தியது, வாலை மிரட்சியுடன் ஆட்டியது. எனக்கு உதவி செய்ய வந்த ஜெர்மன் பெண் சபின் என்னிடம், தன் மீது அமர்ந்த ஈக்களை விரட்டவே மாடு அப்படிச் செய்தது என்றார். ஆனால், எனக்கு சிறிது பயம் ஏற்பட்டது.

அடுத்து எங்களின் ஒரு கையில் கருப்பு குச்சியும் மற்றொரு கையில் மாட்டின் கயிற்றையும் கொடுத்துவிட்டு மாட்டுக்கு முன்னே நடக்குமாறு கூறினார். "ஒருபோதும் மாடு உங்களை வழிநடத்த அனுமதிக்காதீர்கள். நீங்கள்தான் முதலாளி என்பதை பசு விடம் காட்டுங்கள். இல்லையெனில் மாடு தன் விருப்பப்படி செயல்பட்டு விடும்" என்றார் ஹென்ஸ். அதாவது மாடு நம்மை கீழே தள்ளிவடும் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

"அம்பரா"- நிஜமாகவே பாஸ்:

மற்ற பசுக்கள் எங்கள் குழுவினரின் பின்னால் செல்ல முற்பட்டன. ஆனால், அம்பரா பயணத்தை தொடர மறுத்தது. தலையை கீழே சாய்த்து புற்களை மேய ஆரம்பித்துவிட்டது. கயிற்றால் இழுத்து, பின்பக்கத்தை ஒரு தட்டு தட்டினேன். ஆனால், அது மசியவில்லை. அப்போது ஹென்ஸ், "செல்லமாக தட்டாமல் ஓங்கி ஒரு அடிகொடுங்கள்" என்றார். ஆனால், என்னால் அதைச் செய்ய முடியவில்லை.

சபின் உடன் வந்து அம்பராவை பிடித்து அதனுடன் ஏதோ பேசினார். அவ்வளவுதான். அம்பரா நடக்க ஆரம்பித்தது. நான் மாட்டின் மேல் ஏற முற்பட்டேன். குட்டையாக இருந்ததால் என்னால் ஒரே நடையில் மேலே ஏறமுடியவில்லை. ஹென்ஸ் எனக்கு உதவினார். நான் மாட்டின் மீது அமர்ந்து சவாரிக்கு தயாரானதும் ஹென்ஸ் படமெடுத்தார். அவர் சென்றதும் நான் கீழே குதித்து விட்டேன். பேசாமல் மாட்டின் பின்னால் நடந்துவிடலாம் என நினைத்திருந்த நேரத்தில் ஹென்ஸின் கழுகுக்கண் பார்வையில் சிக்கினேன். உடனே சபின் வந்து என்னை மாட்டின் மீது ஏற்றிவிட்டார். ஒரு ஐந்து நிமிடம் சவாரி செய்யுங்கள். பின்னர் கீழே இறங்க விரும்பமாட்டீர்கள் என்றார் சபின். என்னை நம்புங்கள். இது ஒரு மறக்க முடியாத அனுபவமாக இருக்கும் என்றார் ஹென்ஸ்.

மாட்டுச் சவாரியின்போது கீழே விழுந்துவிட்டால் எலும்புகள் நொறுங்கிப் போகுமே என்று நினைத்தேன். ஆனால், சபின் சவாரி செய்பவர்களையும் மாட்டையும் உற்சாகப்படுத்திக் கொண்டே வந்தார். மெல்ல மெல்ல ரைன் நதிக்கரையை அடைந்தோம். எங்களை சுமந்துவந்த 7 மாடுகளும் குளிர்ந்த நீரில் ஆசுவாசப்படுத்திக்கொண்டன. திடீரென அம்பரா தனியாக தண்ணீருக்குள் கால்களை எடுத்து வைத்தது. எனக்கு பயமாக இருந்தது. நீச்சல் தெரியும் என்பதால் தண்ணீரில் குதித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், சபின் எனக்கு தக்க சமயத்தில் கைகொடுத்தார். அவர் போட்ட

அலங்கரிக்கப்பட்ட மாடுகளும் விவசாயிகளும்.

கட்டளைக்கு அம்பரா கீழ்ப்படிந்தது. ஒருவழியாக பண்ணைக்கு திரும்பினோம். மாட்டுச்சவாரி சுகமாக முடிந்தது. எனது ஆடையை மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

வேடிக்கையும் விளையாட்டும் நிறைந்த இந்த பயணம் நான்கு மணி நேரம் நீடித்தது. இதற்கு 120 பவுண்டு கட்டணமாம். குறைந்த தூரமாக இருந்தால் கட்டணம் 90 பவுண்டு. மாட்டுச் சவாரி செய்ய முன்வராதவர்களுக்கு மாட்டுவண்டி சவாரி செய்யும் வசதியும் உள்ளது. 20 பேர் அமர்ந்து செல்ல ஒரு மணி நேர பயணத்துக்கு 350 பவுண்டு கட்டணம் செலுத்த வேண்டும். நான் குறிப்பிட்ட இந்த கட்டணங்கள் 2013 ஆண்டில் இருந்தது.

புதிதாக தயாரிக்கப்பட்ட பாலாடைக்கட்டி, தக்காளி, இறைச்சி, ரொட்டி இவற்றுடன் சிற்றுண்டி சாப்பிட்ட பின் ஸ்டீன் ஆம் ரைன் முதல் ஸ்பாஹுசைன் வரை நதிப் பயணத்துக்கு தயாரானோம் அங்குதான் ரைன் நீர்வீழ்ச்சி உள்ளது.

பொது முடக்க காலத்தில் தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டின் மொட்டை மாடியில் நடைபயிற்சி மேற்கொண்டிருக்கும்போது வானில் விமானங்கள் பறந்து செல்லும் காட்சியைப் பார்க்கும்போது எனக்கு சுவிட்சர்லாந்து பயணம் நினைவுக்கு வந்தது. இயல்புநிலை திரும்பாதா என்று தோன்றும். ஆனால், அது இப்போதைக்கு இல்லை. நீண்டாகாலம் ஆகும் என்றே தோன்றுகிறது. மீண்டும் ஒரு சுகமான பயணம் இப்போதைக்கு இல்லை என்றே தெரிகிறது. இதுபோன்ற இனிமையான பயணங்கள் நமது மனதில் அசைபோடும்போது நாம் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி என்று எனக்குத் தோன்றும்.

சுவிட்சர்லாந்தில் ஒரு பாரம்பரிய கிராமப்புற வீடு.

ஒருங்கிணைப்பு: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

கிராமவாசிகளின் கண் பார்வையை மீட்கும் RC பனாஜி ரிவியாரா

கிரண் ஜெஹ்ரா

கோவாவிலிருக்கும் புனித ஜான் முதியோர் இல்லத்தில் உள்ள ஃபாஸ்டினா D மெல்லோ (77) புன்னகையோடும் மகிழ்ச்சிக் கண்ணீரோடும் பேசுகிறார், ஒரு கண் புரை அறுவைச் சிகிச்சை மூலம் தன்னுடைய கண் பார்வையை மீட்டுத்தந்த RC பனாஜி ரிவியாரா, RID 3170, ரோட்டரியன்களுக்கு நன்றி கூறுகிறார். நான் தேவதைகளைப் பார்ப்பதுபோல் உணர்ந்தேன் என்கிறார் அவர். கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தச் சங்கம் கண் புரை அறுவைச் சிகிச்சை முகாம்களை நடத்திவருகிறது, இதுவரை ரூ.1.3 கோடி செலவில் கிட்டத்தட்ட 900 அறுவைச் சிகிச்சைகளை நிறைவு செய்துள்ளது.

சென்ற ஆண்டு, கோவாவுக்கு அருகிலுள்ள எட்டுக் கிராமங்களில் ரூ.24.45 லட்சம் செலவில் நடத்தப்பட்ட கண் பார்வை முகாம்களின் வழியாக 1,000 முதியவர்கள் வடிகட்டப்பட்டார்கள். 450 நோயாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன, மேலும் 200 பேர் கண் புரை அறுவைச் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்கள். முடக்கம் காரணமாக, எங்களால் 163 அறுவைச் சிகிச்சைகளைதான் செய்ய இயன்றது என்கிறார் சங்கத் தலைவர் யோகீஷ் குல்கர்ணி.

ஃபாஸ்டினா டி மெல்லோ, கண் புரை அறுவை சிகிச்சைக்குப்பின்.

குளத்தை மீட்டல்

கோவாவிலிருந்து 12கிமீ தொலைவிலுள்ள பிலெர்னெ என்ற அழகான கிராமம் பறவைகளின் வருகைக்காகப் புகழ் பெற்றது. ஆனால், துரதிருஷ்டவசமாக, அங்குள்ள குளங்கள் செடிகளாலும் பிளாஸ்டிக்காலும் மூடப்பட்டுள்ளன என்கிறார் குல்கர்ணி.

ஆகவே, இங்குள்ள பல நெல் வயல்களுக்கு நீர்ப் பாசனத்தில் உதவுகிற ஒரு குளத்தைத் தேர்ந்தெடுத்தது இந்தச் சங்கம். உலகச் சுற்றுச்சூழல் நாளன்று அங்கு ஒரு மிகப்பெரிய தூய்மைப் படுத்துதல் மற்றும் தூர் வாருதல் திட்டத்தை நிறைவேற்றியது. இந்த நீர்நிலையில் திரண்டிருந்த சேறு, தூர் மற்றும் படிவுகள் இங்கிருந்து நீக்கப்பட்டன; இதன்மூலம் நீர் நிலையின் சேமித்தல் திறன் உயர்ந்தது. குளத்துக்கு அருகிலிருந்த மூன்று கிணறுகளும் மீட்கப்பட்டன; இது, கிராமத்து மக்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைத்தது. ஒட்டுமொத்தத் திட்டத்துக்கும் ரூ.80,000 செலவானது.

கோவாவிலிருந்து 30கிமீ தொலைவிலுள்ள பிகோலிம் என்ற கிராமத்திலிருக்கிற சிறப்புக் குழந்தைகளுக்கான கேசவ் சேவா சாதனா பள்ளியை இந்தச் சங்கம் ஆதரிக்கிறது. தொடக்கத்தில், இந்தப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களின் சிகிச்சைக்கு உதவுகிற ஒரு

ஃபிசியோதெரபிக் கருவியை நாங்கள் அவர்களுக்கு அளித்தோம். பின்னர், அவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சி களைத் தொடங்கினோம்'' என்கிறார் குல்கர்ணி.

இங்குள்ள குழந்தைகள் மெழுகுவர்த்தி, ஊதுவத்தி செய்யவும், தைக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு பன்னாட்டு நல்கை, UK மற்றும் USஐச் சேர்ந்த ரோட்டரி சங்கக் கூட்டாளிகளின் உதவியுடன், இந்தப் பள்ளியில் ஒரு தொழில் மையமும் அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், நெருலில் உள்ள பிரகதி உயர்நிலைப் பள்ளியை இந்தச் சங்கம் ஒரு மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியுள்ளது. கோவா-வைச் சுற்றியுள்ள கிராமப் பள்ளிகளில் MHM விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்துகிறது.

மார்ச் 2020ல், $40,096 மதிப்புள்ள ஒரு GGயின் வழியாக, ரக்னஷ்ரே என்ற தொண்டு நிறுவனத்தில் ஒரு மாமோகிராம் கருவியை நிறுவியது இந்தச் சங்கம். $99,565 மதிப்புள்ள ஒரு GGயின் வழியாக, தேவையுள்ளவர்களுக்குக் கோவிட் உதவி வழங்கியது. முடக்கத்தின்போது, HIV-பாசிட்டிவ் குழந்தைகளை ஆதரிக்கும் ஓர் NGOவை ஆதரித்த இந்தச் சங்கத்தின் முயற்சிகளை ஐக்கிய நாடுகள் அவையும் UNAIDSம் பாராட்டியுள்ளன.■

சுத்தப்படுத்திய ஒரு குளத்திற்கு முன் சங்க உறுப்பினர்கள்.

சென்னை மாநகராட்சியின் வருவாய் அலுவலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முழு ஊரடங்கின் போது பேசின் பிரிட்ஜில் முகாம்களில் தங்கியுள்ள சுமார் 800 இடம் பெயர்ந்தோருக்கு RC மெட்ராஸ் மெரினா, RID 3232–இன் உறுப்பினர்கள் உணவு வழங்கினார்கள். அந்த ரோட்டரி கிளப் உறுப்பினர்கள், அந்தப் பகுதியில் இருந்த மூடியிருந்த ஒரு உணவகத்தை அடையாளம் கண்டு, அதில் மே 17 வரையில் தினமும் காய்கறிகளுடன் 2,000 ரொட்டிகளை தயாரிக்கச் செய்தார்கள்.

உணவு விநியோகம் தவிர, அந்த கிளப் 750 சில்வர் தட்டுகளையும், 900 டம்ளர்களையும், 600 சோப்புக் கட்டிகளையும், 4,800 சீயக்காய் பாக்கெட்டுகளையும், 150Kg சமையல் எண்ணெய் மற்றும் 500Kg கோதுமை மாவையும் அந்த இடம் பெயர்ந்தோர் குடும்பங்களுக்கு அன்பளிப்பாக வழங்கியது. இத்திட்டத்திற்கான செலவுத்தொகை ரூ. 7.75 லட்சம் கிளப் உறுப்பினர்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்டது.■

முகாம்களில் உள்ள இடம் பெயர்ந்தோர்களுக்கு RC மெட்ராஸ் மெரினா உணவளிக்கிறது

ரோட்டரி செய்திக்குழு

பலவீனமான சங்கங்களை பலப்படுத்துவோம்

சஞ்சீவ் ராய் மெஹ்ரா,
கணக்குத் தணிக்கை மற்றும் வரி ஆலோசகர், RC புதுதில்லி, RID 3011.

"கொவிட்-19" வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காலத்தில் உறுப்பினர் சேர்க்கை என்பது மிகப்பெரிய சவால் என ரோட்டேரியன்கள் பலரும் நினைத்திருந்த நேரத்தில் நாங்கள் 17 சங்கங்கள் மூலம் 500க்கும் மேலான புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். பலவீனமாக உள்ள சங்கங்களை வலுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்கிறார் சஞ்சீவ் ராய் மெஹ்ரா.

பொது முடக்கம் அமலில் உள்ள இந்த நேரத்தில் இரண்டு சர்வதேச திட்டங்களைத் தொடங்கியுள்ளார். ஒன்று வணிகர் மன்றம். உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரி மாவட்டங்களுடன் தொடர்புகொண்டு கலாசாரம் மற்றும் வர்த்தக பரிமாற்றங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இரண்டாவது சர்வதேச அளவில் பேச்சுப்போட்டி நடத்துவது. பொது முடக்கம் காரணமாக இளைஞர்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதால் அவர்களின் படைப்பாற்றல் திறன் வீணாகிறது. இதை போக்கும் வகையில் செப்டம்பர் மாதத்துக்குள் இந்திய அளவிலும், அக்டோபருக்குள் சர்வதேச அளவிலும் இறுதிப்போட்டி நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் மெஹ்ரா.

TRF அறக்கட்டளைக்கு 2 மில்லியன் டாலர் நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சவாலான காரியம்தான். எனினும் துணிந்து கால் எடுத்து வைக்கிறோம். பொது முடக்கம் முடிந்த பின்னர் தில்லியில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகளை விநியோகிக்க திட்டமிட்டுள்ளோம். அப்போது அவர்களிடம் ரோட்டரியின் நற்பணிகளை எடுத்துக்கூறி ரோட்டரியில் சேருமாறு வலியுறுத்துவோம் அல்லது ரோட்டரிக்கு நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்வோம் என்கிறார் சஞ்சீவ் ராய் மெஹ்ரா.

மெஹ்ரா மற்றொரு திட்டத்திலும் முனைப்பு காட்டி வருகிறார். யமுனையில் கழிவுகள் கலப்பதால் ஏற்படும் மாசுபடுதல் பற்றி தில்லி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் திட்டம் உள்ளது. தில்லியில் யமுனை 22 கி.மீ. தொலைவுக்கு ஓடுகிறது. ஆனால், தொழிற்சாலைகள், வீடுகளிலிருந்து 76 சதவீத கழிவுகள் ஆற்றில் கலக்கிறது. இதனால் நிலத்தடி நீரும் மாசுபடுகிறது. யமுனையை சுத்தப்படுத்த ரூ.92,000 கோடி தேவைப்படுகிறது. சர்வதேச நிதியுதவி மூலம் ரோட்டரி இத்திட்டத்துக்கு உதவ முடியும் என்றார்.

சஞ்சீவ் ராய் மெஹ்ரா, 25 வயதில் 1978ல் ரோட்டரியில் சேர்ந்தார். தில்லியில் 1982ல் ரோட்ராக்ட் கிளப்பை உருவாக்கினார். போலியோ இல்லாத நாடாக இந்திய அறிவிக்கப்பட்டபோது, 1994ல் தாம் உள்ளூர் நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு அரசு மருத்துவமனையின் "வராண்டா"வை குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி போடும் இடமாக பயன்படுத்திக்கொள்ள அனுமதி கேட்டதை அவர் நினைவுகூர்ந்தார். அவர்கள் எங்களுக்கு அனுமதி வழங்கிய போதிலும் எங்களின் முயற்சியை கேலி செய்தனர். போலியோவை ஒழித்துவிடலாம் என இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அதிலுள்ள பிரச்னையின் தன்மை இவர்களுக்குத் தெரியாது என்று கூறினார்கள். ஆனால், போலியோ ஒழிப்பில் நாம் சாதனை புரிந்துள்ளோம். அந்த வகையில் எங்களுக்குப் பெருமைதான் என்கிறார் மெஹ்ரா.

மெஹ்ராவின் தந்தைக்கு 100 வயதாகிறது. அவர் 1952 முதல் ரோட்டேரியனாக இருந்து வருகிறார். இப்போது அவர் ரோட்டரியின் செயல்பாடுகளை ரோட்டரி செய்திகள் மூலம் படித்துத் தெரிந்து கொள்கிறார். இவருடைய தாய் இன்னர்வீல் சங்க உறுப்பினர். மகன், மகள் இருவரும் ரோட்டரியில் இணைய ஆர்வமாக உள்ளனர்.

ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெய்ஸ்ரீ

இரண்டாம் நிலை AKS உறுப்பினராக தயாராகிறார்

ரஷ்மி குல்கர்னி,
கட்டட வடிவமைப்பாளர், RC புனே பார்வதி, RID 3131.

RID 3131இன் முதல் பெண் கவர்னரான ரஷ்மி குல்கர்னி, அவரது கணவர் PDG வினய் குல்கர்னி அவர்களுடன் இணைந்து இரண்டாம் நிலை AKS உறுப்பினராவதற்கு பிரமாணம் ஏற்றதன் மூலம் அறங்காவலர் வட்டத்தில் இணைகிறார். இந்தியாவில் AKS உறுப்பினராகும் முதல் பெண் கவர்னராக ரஷ்மி அறியப்படுவதோடு, PDG குல்கர்னியுடன் இணைந்து ரோட்டரியின் AKS அறங்காவலர் வட்டத்தை அடைந்த முதல் கவர்னர் தம்பதியினர்.

ரஷ்மி தனது மாவட்டத்திற்கான பல திட்டங்களை வரிசைப்படுத்தியுள்ளார். ரூ.8 கோடி செலவிலான நீர் நிலை மேலாண்மை மற்றும் ஏரிகள், நதிகளை தூர்வாருதல் போன்ற நீர் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுத்திருக்கிறார். RIPE சேகர் மேத்தா, TRF அறங்காவலர் குலாம் வாகன்வதி, PRIPக்கள் ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி ஆகியோரின் முன்னிலையில் இணையவழி காணொளி காட்டி மூலம் பதவில் அமர்த்தப்பட்டார்.

அவர் தனது பதவிக் காலத்தில் குறைந்தது 25,000 கண்புரை அகற்றுதல் அறுவை சிகிச்சைகள் செய்ய திட்டமிட்டுள்ளார், அதோடு அறக்கட்டளை மூலம் கோவிட் தொடர்பான திட்டங்களில் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளார், அதன் தடுப்பு மற்றும் சிகிச்சை திட்டங்கள் அதில் அடங்கும்.

டயாலிசிஸ் கருவிகளை நிறுவுவதற்கும், மருத்துவ மனைகளுக்கு உபகரணங்கள் வழங்குவதற்கும், இரத்த வங்கிகளை அமைப்பதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார். "நான் இனிய கிராமமும் மகிழ்ச்சியான பள்ளிகளும் என்பதன் கீழ் திட்டங்களை முன்னெடுப்பேன்," என்று அவர் கூறுகிறார். மகாராஷ்டிராவின் ராய்காட் மாவட்டத்தில் நிசர்க் சூறாவளியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிவாரணப் பணிகளின் ஒரு பகுதியாக ரஷ்மி சிமென்ட் கூரைத் தாள்களை வழங்கியுள்ளார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக RC புனே பார்வதியின் உறுப்பினராக இருப்பதோடு 2011-12 ஆம் ஆண்டில் அதன் தலைவராகவும் இருந்தார்.

உறுப்பினர் எண்ணிக்கையை வலுப்படுத்த முன்னுரிமை

PNB முருகதாஸ், பட்டய கணக்காளர்,
RC விருதுநகர் எலைட், RID 3212.

ரோட்டரிக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில், TRFக்கு நிதி திரட்டவும் புதிய உத்திகளை வைத்திருப்பதாகக் கூறுகிறார் முருகதாஸ். எப்படியும் தம்மால் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியும் என்றும் TRF அறக்கட்டளைக்காக 1 மில்லியன் டாலர் நிதிப் பங்களிப்புச் செய்ய முடியும் என்றும் நம்பிக்கையுடன் கூறுகிறார். இந்த ஆண்டு AKS உறுப்பினராவதற்கும் திட்டமிட்டுள்ளார். "நான் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வழிநடத்த விரும்புகிறேன்" என்று கூறும் அவர், தமது மாவட்டத்திலிருந்து பல பெரிய நன்கொடைகளை எதிர்பார்க்கிறார். கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் நிதி திரட்டவும் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக கூறுகிறார். எனவே போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் பங்கு என்ன என்பதை விடியோ மூலம் காட்சிப்படுத்தி நிதி திரட்ட இருப்பதாகக் கூறினார். இதன் மூலம் உறுப்பினர் எண்ணிக்கையையும் TRFக்கு நிதிப்பங்களிப்பையும் அதிகரிக்க முடியும் என்கிறார் முருகதாஸ்.

வங்கி ஊழியர்கள், அதிகாரிகள், ஓய்வூதியதாரர்களை ரோட்டரியில் சேர்க்கவும் இலக்கு வைத்துள்ளார். எங்கள் மாவட்டத்தில் 6,000 வங்கிக் கிளைகள் உள்ளன. அவர்களில் பலர் ரோட்டரியில் சேர ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால், இதுவரை அவர்கள் அழைக்கப்படவில்லை. இதேபோல ஓய்வூதியம் பெறுபவர்களில் பலர், ரோட்டரி பணக்காரர்களுக்கானது, அதை நாம் அணுக முடியாது என்ற எண்ணத்தில் உள்ளனர். இது ஒரு மாயை என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். எங்கள் மாவட்ட ரோட்டரியில் பெண்கள் மாவட்டப் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இது பெண்கள் அதிக அளவில் ரோட்டரியில் இணைய உந்துதலாக இருக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் கொடுத்த 50 ஆயிரம் டாலர் நன்கொடை மூலம் பொது மானிய திட்டத்தின்கீழ் 15 பள்ளிகளில் படிக்கும் 15,000 மாணவர்களுக்கு பாது காப்பான குடிநீர் கிடைக்க உதவியது. இந்த திட்டத்தை தொடரப்போவதாகவும் DG முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

முருகதாஸ் 1991ஆம் ஆண்டு முதல் ரோட்டரியில் செயல்பட்டு வருகிறார்.■

அனைவருக்கும் கல்வியை உறுதிசெய்தல்

ரமேஷ் பஜாஜ், ஜவுளி ஏற்றுமதியாளர்,
RC பானிபட், RID 3080.

ரோட்டரி நண்பர்களின் தூண்டுதல் பேரில் 1991ல் ரோட்டரியில் சேர்ந்தார் ரமேஷ் பஜாஜ். 1983-84ல் ரோட்டராக்டாக இருந்தார். GSE குழு தலைவராக இருந்தபோது டேராடூனில் உள்ள ஹிம் ஜோதி பள்ளிக்காக, ஆர்கன்ஸாஸ் மாநிலம், RID 6110 மூலம் $40,000 டாலர் மானியம் PRID சுதர்ஷன் அகர்வால் அவர்களுக்காக பெற்றது மறக்க முடியாத தருணம் என்கிறார் பஜாஜ். அப்போது அந்த பள்ளி கட்டுமானத்தில் இருந்தது.

மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் குறிப்பாக கிராமங்களில் 130 பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளோம். குழந்தைகள் கல்வி எங்களின் லட்சியம். மரங்களையும், மூலிகைச் செடிகளை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டுமாறு குழுவினரை வலியுறுத்தினேன். தண்ணீர் சேமிப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஆர்வம் கொண்ட அவர், வீடுகளுக்கு தண்ணீர் சுத்திகரிப்பு கருவிகளை விநியோகித்து வருகிறார்.

ஒவ்வொருவரும் புதிய உறுப்பினரை அறிமுகம் செய்யும் போது இருக்கும் உறுப்பினர் ஒருவரை தக்க வைக்க வேண்டும். மாவட்டத்தில் மொத்தம் 90 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. TRF பங்களிப்பை அதிகரிக்க ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். ரோட்டரி உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பிறந்த நாள் மற்றும் திருமண நாள்களின் போது அவர்களுடன் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவிப்பேன். அப்போது அவர்களிடம் சிறப்பு தினங்களில் கோயில்களுக்கு நன்கொடை வழங்குவது போல ஒரு குறிப்பிட்ட தொகையை அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக்கொள்வேன். பசித்தவர்களுக்கு ஒரு நாள் மட்டும் உணவளிப்பது போதாது. தினசரி நடவடிக்கையாக இருக்க வேண்டும். நாங்கள் 20 குடும்பங்களைத் தத்தெடுத்து ஆண்டு முழுவதும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகிறோம்.

பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு வசதியாக அவர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதற்காக பொது மானிய உதவி அல்லது கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதியுதவியை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். பள்ளி செல்லும் பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு சங்கமும் 20 சைக்கிள்கள் வரை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

ரமேஷ் பஜாஜின் மனைவி ரேகாவும் RC பானிபட் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக உள்ளார்.■

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கும் இடம் கட்டுதல்

ஜோஸ் சாக்கோ மாதவச்சேரி, சிவில் என்ஜினீயர்,
RC பெரும்பாவூர், RID 3201.

2018 வெள்ளத்தின் போது மாவட்டத்தில் 15,000 பேர் வீடுகளை இழந்தனர். ஒரு லட்சம் வீடுகள் சேதமடைந்தன. எனவே இந்த ஆண்டு 1,000 தங்கும் இடங்கள் கட்டுவதில் கவனம் செலுத்தி வருகிறேன். 400 வீடுகளில் 200 வீடுகளை புனரமைக்கவும் 200 வீடுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்கிறார் ஜோஸ் சாக்கோ மாதவச்சேரி. 1990-ஆம் ஆண்டு முதல் ரோட்டரியில் இருக்கிறார். இளைஞர்களிடம் அதிகாரம் அளிப்பது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார். இது தவிர 1,000 மகிழ்ச்சிப் பள்ளிகளை ஏற்படுத்தவும் சூரிய சக்தியை மேம்படுத்தவும் காடுகளை உருவாக்கவும் திட்டமுள்ளதாக அவர் கூறுகிறார்.

பொதுமக்களிடம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். கடந்த ஆண்டு மாவட்டத்தில் 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சாலைவிபத்துகளை தடுக்கும் நோக்கில் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த போலீஸாருடன் இணைந்து செயலாற்றுமாறு மாநில டி.ஜி.பி., ரோட்டரிக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் உயிர்காக்கும் மருந்துகள் சேமிப்பு வங்கி ஏற்படுத்தி அதன் மூலம் மருத்துவர்களின் மருந்துசீட்டு அடிப்படையில் அதை தேவைப்படுவோர்க்கு வழங்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

ரோட்டரிக்கு புதிதாக 700 உறுப்பினர்களைச் சேர்க்க திட்டம் உள்ளது. இவர்களில் இளைஞர்கள் அதிகம் இடம்பெறுவர். மாவட்ட பதவிகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். TRF அறக்கட்டளைக்கு 1.3 மில்லியன் டாலர் நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்கிறார் அவர்.

ஜோஸ் சாக்கோ மாதவச்சேரியின் மனைவி மற்றும் சகோதரரும் ரோட்டரி உறுப்பினர்களாக உள்ளனர்.■

புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உதவும் கல்கத்தா ரோட்டரியினர்

ரோட்டரி செய்திக்குழு

கடற்கரையோர வங்காளத்தில் ஆம்பன் புயலால் ஏற்பட்ட பெரிய அளவு சேதத்தைக் கண்ட RC கல்கத்தா நியூ அலிப்பூர், RID 3291, உடனே செயலில் இறங்கியது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான சுந்தர்பன்ஸில் கெயோராதலா என்கிற கிராமத்தில் உள்ள தன்னுடைய ரோட்டரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 200க்கும் மேற்பட்ட கிராம மக்களைத் தங்கவைத்தது.

இந்தப் பாதுகாப்பு முகாமில் கிராம மக்களுக்கு உணவு அளிக்கப்பட்டது; இந்தக் கிராமத்திலுள்ள 50 குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்கான உணவு, உலர் பங்கீட்டுப் பொருட்களையும் இந்தச் சங்கம் வழங்கியது.

இந்தப் பகுதியில் புயலுக்குத் தப்பிய கூரை ஒன்றுகூட இல்லை. ஆகவே, நாங்கள் சேத மடைந்த வீடுகளையும் மீட்டமைத்துள்ளோம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 200க்கும் மேற்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் தாள்கள் ஏற்பாடு செய்யப்பட்டன, இதன்மூலம் அவர்கள் தங்களுடைய வீடுகளை மீண்டும் கட்டமைக்க இயன்றது'' என்கிறார் சங்கத் தலைவர் அஜய் பல்டாவா.

புயலில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவும் சங்க உறுப்பினர்.

சரியான நேரத்தில் செய்யப்பட்ட இந்தப் பழுதுபார்த்தல் பணி மிகவும் பலன் தந்தது, ஏனெனில், அடுத்த வாரமே இந்தப் பகுதியை இன்னொரு புயல், மழை தாக்கியது. அதற்குள் கூரைகள் சரிசெய்யப் பட்டுவிட்டதால், கோவிட் நோய்ப் பரவல் நேரத்தில் 35 குடும்பங்களால் தங்களைத் தனிப்படுத்திக்கொள்ளவும் இயன்றது, என்றார் அவர்.

இந்தத் திட்டத்துக்கு ரூ.2 லட்சம் செலவானது, அதே நேரம், முடக்கத்தின் கட்டுப்பாடுகளால், பாதிக்கப்பட்ட கிராமத்தைச் சென்றடைவதே ஒரு சவாலாக இருந்தது என்றார் அவர்.

இந்தக் கிராமத்தில் வீட்டு வசதித் திட்டத்தை நிறைவு செய்தபின், பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்தத் திட்டமிடு கிறது இச்சங்கம்.■

Wordsworld

City Sites

Sandhya Rao

Places are not simply spaces where people live. They have history and context, character and ambience, and very definite personalities.

The continuing lockdown intended for safety and the good health of the community can get us down worse than Monday morning blues. All I will say is: Take your medicine regularly and you'll be fine. Yes, the medicine is books. Books are the best antidote for frustration, boredom, anxiety, panic… name it and a regular dose of reading a good book will calm you down. It's all about soothing nerves and settling the mind, easing the soul and giving the brain something to chew on. The best thing about this course of medication is that if you don't like a particular book, you can always set it aside and pick up another. Not something you can say for pills and potions!

My bookshelves are in a bit of a mess following a major rehauling of my apartment some months ago. So, while I was rummaging around for a certain title, I realised that I had quite a collection of books about Indian cities. Every time I travel I pick up a book about the place visited — if such a book is available, of course. It's usually a collection of writings about the place by well-known personalities or long-time residents. Why not make a game of this, I thought. I would flip open each book at random and share a small passage from the pages that are revealed. You could then guess which city the passage refers to. Here goes.

This author writes: "There are many stories about the existence of Goddess Laxmi in xxxx. It is said, late one night, when the goddess stood at the main entrance of the city at Teen Darwaza and knocked on the massive gates, the guard, Khwaja Siddiqui, allowed her to enter, left her there, locked the door from inside and went to the palace, to take permission from the sultan. He was beheaded for leaving the goddess standing at the gate. The sultan rushed to welcome the goddess but by then she had disappeared into the city. … Jabbar Mirza comes from a family of caretakers of Laxmi's lamp, which has been kept burning in an alcove at Teen Darwaza. He continued the tradition till he died in 2013. Now, his family looks after the lamp."

Which city could this be? Of course, Google Aunty has all the answers but it's more fun to think about the places you know about. Here's the next passage. This author writes: "An essential feature of xxxx organicism is the way the white Baroque churches nestle with a surprising air of comfort and of true belonging into what is otherwise so archetypically an Indian landscape. It could be said that perhaps nowhere else in India do churches fit so comfortably into the landscape and the village as they do in those of xxxx. …the most harmonious church sites are confined to instances where the Christians drew on the ancient Indian sensitivity to land with inherent numen…" This one should be easy. Think postcards.

These passages were chosen at random, and even randomly, the big picture that emerges is of a gloriously syncretic nation. Is that the reality or is it just a coincidence? A walking tour resulted in the following comments: "People who work on the 'east side' (in the Ashram, for instance) typically work indoors behind high walls. This is increasingly the case on the 'west side' too, as prosperity and changing styles raise a whole raft of barriers to visibility — doors, 'dressed up' shop windows, back rooms,

upstairs premises and even air-conditioned showrooms. Still, xxx's side streets maintain the tradition of small ground floor artisans completely accessible to the street. This arrangement makes each shop a small stage on which many people perform." That's what we could call drama in real life!

From here we go to witness drama of another kind: "While he is still resting in the temple, the director of the *filkhana*, the elephant department, comes to seek his advice and to receive orders about arranging an elephant fight. The Maharaja is then carried in his palanquin through covered passageways to the Moti Burj, a tower from where he watches the elephant fight take place. Thousands of spectators have also assembled to watch this lively scene. From here, he goes by another covered passage to the royal stables to inspect the horses and to play polo with the nobles. If any of the nobles particularly admires one of the horses, the Maharaja may give it to him. There is such a variety of them, with different breeds from Arabia, Iran, Kandahar, Turkey, Bhutan, Kabul and Kathiawar…"

And in the next extract, the author is overcome with nostalgia: "At dusk, the Gandhibazar main road filled your being: it wore the charm of a bashful young girl. At one end was the Ramakrishna Ashram; the other end had Tagore Park with B.P. Wadia Road to its rear. On either side of the road were gigantic trees. One evening, as these trees treated us to their green splendour, B.G.L. Swamy sauntered on the streets of Gandhibazar. Just as we had failed to notice the trees that provided shade to us all along, we had failed to notice B.G.L. Swamy who strolled by in a half-sleeved shirt and shorts, with a cloth bag slung over his shoulder. In and around Gandhibazar, there lived so many personalities who have gone into the pages of history."

Another author records another kind of history: "The Apsara sari shop opposite used to be a paratha restaurant. (Anil) Sharma, who is the fifth generation in his family in the paratha trade, reveals that there is less profit now in the business that stretches from 6 am to 12 pm. Some 25 family members are involved with the restaurant, making all the dishes themselves. Two servants clean up. 'The whole country knows us by our parathas. How many people even know each other in xxxx?' he asks."

The contributions of a beloved citizen are recalled in the next passage: "Of all of the merchant princes, Sir JJ's memory is most revered. Jejeebhoy's first recorded act of charity occurred in 1822, when he spent Rs 3,000 to repay the loans taken by several men jailed for debt. Over the decades, Jejeebhoy money would fund all sorts of endeavours, including a causeway between B_____ and M_____ that, in 1845, would consolidate the island's links with the mainland." It's not difficult to guess which city this amazing philanthropist is associated with; however, the following passage may prove a little more challenging.

"In November 1977," the author records, "a tiny, somewhat whimsical, slightly saucy journalistic voice piped up from among the steady drone of xxxx city's established media. For xxxxites who had been conditioned to perceive journalism as something they savoured with their morning coffee…., *Aside*, India's first English city magazine, was something of an eye-opener. … It neither rooted for the city, nor decried it — it merely watched. Oh, when it had finished doing that, it did comment, in a tone that was urbane, often irreverent, sometimes, biting, but always in a soft voice, just above a whisper."

Have you been able to identify the distinct flavours of each place and relish their individual tastes? That's what's special about this kind of writing — the town, city, village, landscape emerges vividly, triggering so many memories. And just in case you're wondering which cities we've talked about in this column, here are the answers, in no particular order: Puducherry, Mumbai, Goa, Delhi, Ahmedabad, Chennai, Jaipur, Bengaluru. Match on!

The columnist is a children's writer and senior journalist.



சவாலே சமாளி!

V B பிரபு வர்லேகர்

கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தின் விளைவாக அனைத்து துறைகளிலும் பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்கள் பாதிப்படைந்துள்ளன. ஏராளமான வேலை இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. வேலை இல்லாததால் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊருக்கு திரும்ப நேரிட்டுள்ளது. கொரோனா சிகிச்சைக்கு சரியான மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பொருளாதாரம் மீண்டு எழ இன்னும் சில ஆண்டுகள் ஆகலாம். இந்தச் சூழ்நிலையில் பயத்திலும், பதற்றத்திலும் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதைவிட அதை நம் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுடன் வாழ்க்கைப் பணிகளை எதிர்கொள்ள வேண்டும். முகக்கவசம் அணிதல், கையுறைகளைப் பயன்படுத்துதல், எப்போதும் சமூக இடைவெளியை பின்பற்றுதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் நாம் வழக்கமான பணிகளை பயமின்றி செய்யலாம்.

ஒருவேளை உடல்நலக்குறைவு ஏற்படுமானால் மருத்துவமனைக்கு அதிகம் செலவு செய்வதை தவிர்த்து முன்னெச்சரிக்கையாக மருத்துவ காப்பீடுகளில் முதலீடு செய்யலாம். இன்னும் சொல்லப்போனால், ஒருவேளை நாம் இறந்துவிட்டால், குடும்பத்தினரை காப்பாற்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யலாம். அனைத்து வகையான முதலீடுகள் மற்றும் வங்கிக் கணக்குகள் கணவன்-மனைவி இருவரின் பெயரில் இருப்பதை உறுதிசெய்யலாம்.அல்லது குறைந்தபட்சம் நமது சார்பில் ஒருவரின் பெயரை வாரிசாக பரிந்துரைக்கலாம். உங்கள் மறைவுக்குப் பின் உங்களது முதலீடுகள், வங்கியில் இருக்கும் பணம் உங்கள் குடும்பத்தில் யாருக்குச் சேர வேண்டும் என்பதை உயில் வாயிலாகவும் எழுதிவைக்கலாம்.

நீங்கள் தெருவோர கடைகளில் அல்லது உள்ளூர் விற்பனையாளர்களிடம் பொருள்கள் வாங்கும்போது பேரம் பேசாதீர்கள். அவர்களுக்கு இதன் மூலம் கிடைக்கும் வருவாய் குறைவுதான். பொது முடக்க காலத்தில் உங்களது வீட்டுக்கு அருகில் உள்ள கடைகளிலேயே பொருள்களை வாங்குங்கள். உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடைக்காரருக்கு ஆதரவு அளியுங்கள். ஆன்லைன் மூலம் பொருள்களை வாங்க வேண்டாம்.

எனினும் வேலை நிரந்தரமில்லாத வர்கள் அல்லது வர்த்தகர்கள் அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் செலவு செய்துவிட்டு பணத்தை சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். அதே சமயத்தில் உங்கள் திறமையை பயன்படுத்தி கூடுதல் வருமானம் பெறுவதற்கான வழிவகைகளைத் தேடுங்கள்.

ஊழியர்கள்:

பொது முடக்கம் அமலில் உள்ள இந்த காலத்தில் ஒருவர் நிறுவனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் சிக்காமல் இருக்க வேண்டுமானால் உங்கள் நிறுவனத்தைப் பற்றி விமர்சிக்கவோ புகார் தெரிவிக்கவோ கூடாது. ஒருவேளை உங்களின் மாத ஊதியம் குறைக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். நிறுவனத்தில் தொழில் விறுவிறுப்படைய உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

அப்படிச் செய்தால் நீங்கள் உங்கள் நிறுவனத்தில் தவிர்க்க முடியாத ஊழியராகிவிடுவீர்கள். வேலையில்லாதவர்கள் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொண்டு அதை உங்களது தொழில் அல்லது வியாபாரத்துக்கு பயனுள்ளவகையில் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.

தொழில் முனைவோர்:
சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செலவுகளை குறைத்து உற்பத்தியை பெருக்குவதற்கு வழிகாண வேண்டும். புத்துயிர் பெறும் வரை ஊழியர்களிடம் பேசி அவர்களின் சம்பளத்தை குறைக்கலாம். கையில் போதுமான பணப்புழக்கம் உள்ள நிறுவனங்கள் தங்களுக்கு கச்சாப் பொருள்களை விநியோகிப்பவர்களுக்கு முறையாக பணத்தை கொடுக்கலாம்.

மூத்த குடிமக்கள்:
மூத்த குடிமக்கள் வீட்டில் இருந்தபடியே தங்களது டிஜிட்டல் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். இணையதளம் மூலம் வங்கியில் பணப்பரிமாற்றம், மின்சாரம், குடிநீர் கட்டணங்களை மின்னணு முறையில் எப்படி செலுத்துவது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் வீட்டில் இருந்தபடியே உணவு ஆர்டர் செய்வது, மருந்து வாங்குவது, கால்டாக்ஸி புக் செய்வது. மெய்நிகர் வசதியைப் பயன் படுத்தி நிகழ்ச்சிகளில் பங்கேற்பது எப்படி என்பது போன்ற விஷங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

வீட்டுப் பெண்மணிகள்:
ஸ்வெட்டர் பின்னுவது, எம்பராய்டரி, ஓவியம், சமையல், கற்பித்தல் இசை உள்ளிட்ட ஏதாவது ஒரு துறையில் திறமையான குடும்பப் பெண்கள் சமூக ஊடகங்கள் அல்லது சுயஉதவிக்குழுக்கள் மூலம் சேவைகளை சந்தைப்படுத்தி குடும்ப வருமானத்தை பெருக்க முடியும்.

ஒவ்வொரு வாய்ப்பையும் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி நமதே!

கட்டுரையாளர்
RC மபுகா, RID 3170 உறுப்பினர்.

Rotary PEOPLE OF ACTION

பள்ளிக் குழந்தைகளுக்கு மிதிவண்டிகள்

ரோட்டரி செய்திக்குழு

RID 3201இன் ரோட்டரி கிளப்புகள் இந்த ரோட்டரி ஆண்டின் முதல் நாளில் 1,500 மாணவர்களுக்கு மிதிவண்டிகளை நன்கொடையாக அளித்துள்ளது.

DG ஜோஸ் சாக்கோ மாதவாசேரியின் சிந்தனையில் உதயமான பெடல் டு ஸ்கூல் என்ற முன்னெடுப்பு கேரளா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டங்கள் முழுவதும் 12-18 வயதுக்குட்பட்ட 3,000 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்குவதை நோக்க மாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்துக்கான செலவு ரூ.1.42 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

"சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப பொது போக்கு வரத்துக்கு பணம் செலவழிக்க முடியாது. குழந்தைகளை மிதிவண்டிகள் மூலம் பள்ளிக்கு அனுப்புவதற்கு ஒரு சிறந்த ஊக்கமாகும். பல பிராந்தியங்களில் முறையான போக்குவரத்து இல்லாதது உயர்நிலைப் பள்ளி கல்வியின் இடைநிற்றல் விகிதத்திற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய காரணியாகும், என்கிறார் மாவட்ட செயலாளரான மருத்துவர் மணி ராகவன்.

குறிப்பாக தற்போதைய கோவிட் சூழ்நிலையில், மாணவர்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வழிவகைகளை மிதிவண்டிகள் வழங்கும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். "அவர்கள் பாதுகாப்பான சமூக இடைவெளியுடன் பயணிப்பதோடு நெரிசலான பொது போக்குவரத்தைத் தவிர்க்கலாம்." இந்த ஆண்டு இளைஞர்கள், சுற்றுச்சூழல் மற்றும் தங்குமிடம் தொடர்பான திட்டங்களில் கவனம் செலுத்த மாவட்டம் திட்டமிட்டுள்ளது. இளைஞர்கள் மிதிவண்டிகளில் சவாரி செய்யும்போது தினசரி உடற்பயிற்சியைப் பெறுகிறார்கள், மேலும் கிளப்புகள் சுற்றுச்சூழலை பாதிக்காத போக்குவரத்து வழிமுறைகளை ஊக்குவிக்கும். ஆகவே, இந்த திட்டம் இளைஞர்கள், சுற்றுச்சூழல் மற்றும் நேர்மறை ஆரோக்கியம் ஆகியவற்றின் முக்கிய அம்சங்களை நிவர்த்தி செய்கிறது என்று ராகவன் கூறுகிறார்.■

உலகம் எப்போது குணமாகும்?

பரத் மற்றும் ஷலான் சவுர்

குழந்தை நோரா அழுகிறாள். திடீரென்று, அவள் தன்னுடைய அன்புக்குரிய ஒமா மற்றும் ஒபா-வை அன்பாகக் கட்டிக்கொள்வதற்கு அனுமதி இல்லை; தொலைவிலிருந்து கையசைக்கமட்டும்தான் அனுமதி. அதேபோல், மாமா, அத்தை ஆகியோரும் நோராவிடம் அன்பாகப் பேசுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கிடையில் ஒரு பெரிய இடைவெளி விழுந்துவிட்டது, கண்ணுக்குத் தெரியாத ஒரு வைரஸ் எங்கும் பிரச்னைகளை உண்டாக்கிவிட்டது என்பதை இரண்டு வயதுக் குழந்தை ஒருவர் எப்படிப் புரிந்துகொள்வார்?

உலகம் எப்போது குணமாகும்?

அது ஏற்கெனவே குணமாகிவிட்டது. பெருங்கடல்களுக்கு அவற்றின் பிரமாண்டமான ஒளிர்வு திரும்பக் கிடைத்துவிட்டது, காற்றில் புத்துணர்ச்சி திரும்பிவிட்டது, அது காட்டுப் புல்மீது விரைவாக வீசுகிறது, சேறானது, மரங்களையும் காடுகளையும் முளைக்கச்செய்கிற வளமான நிலைக்குத் திரும்பிவிட்டது. சென்று விட்டவர்களை எண்ணி நாம் அழுகிறோம், நம்முடன் இருப்பவர்களுடன் சேர்ந்து சிரிக்கிறோம். இதனிடையே, கோவிடுக்குப் பிந்தைய காலகட்டத்தின் நல்ல குடிமக்களாக நாம் இருப்போம். ஒருவேளை, நாம் புகை பிடிப்பதை, துப்புவதை, காற்றில் நச்சுப்புகையை வெளியேற்றுவதை நிறுத்திவிடலாம்.

உயர்ந்த நோக்கங்கள்

மிகவும் புகழ் பெற்ற அமெரிக்க அறுவைச்சிகிச்சை வல்லுனரான டாக்டர் அதுல் கவான்டெ-யிடம் நான் மதிக்கிற விஷயம் இதுதான். நம்மில் 60 சதவிகிதப் பேர் 60 சதவிகிதச் செயல்திறன் கொண்ட முகமூடிகளை அணிந்தால் நாம் இந்த வைரஸை நிறுத்திவிடலாம் என்று பல மாதங்களுக்குமுன்னால் அவர் சொன்னார், பெரும்பாலானோர் அதைக் கேட்கவில்லை. ஆகவே, அந்த நல்ல மருத்துவர், நல்ல நோக்கங்களை விதைப்பதன்மூலம் மனநிலைகளை மாற்றத் தொடங்கினார்: நான் நாள்தோறும் பணிக்கு வர விரும்புகிறேன்; வேறு யாருக்கும் நோயை உண்டாக்க நான் விரும்பவில்லை. இன்னொருவருக்கு பாதிப்பை உண்டாக்க நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்.'' இதையடுத்து, முகமூடிகள் பயனுக்கு வந்தன.

இப்போது, நாம் அது போன்ற உயர்ந்த, நல்ல எண்ணம் கொண்ட

நோக்கங்களைப் பற்றிக்கொள்ள இயன்றால், நாம் ஒரு புதிய உலகைக் கட்டமைக்கலாம். அது செல்வம், அறிவு, ஆற்றலில் முன்னேறியிருப்பதுடன், வாழ்க்கையின் மனிதத் தத்துவத்தை, மன-உடல் நலன் மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதலைக் கொண்ட இணைந்து வாழும் கலையைக் கொண்டிருக்கும். அந்தச் சமூகத்தில், பெரிய பணப்பைகளைவிட, பெரிய இதயங்கள் மிகுதியாக இருக்கும்.

வேலைகள் ஒருபோதும் பறிபோகாது என்ற உறுதியான பாதுகாப்பு கிடைத்தால், அது எப்பேர்ப்பட்ட தடுப்பு மருந்தாக இருக்கும்! அழுத்தத்துக்கு எதிரான 21ம் நூற்றாண்டின் மிகப் பெரிய தடுப்பு மருந்து, ஒரு குளிர்ச்சியான ஆராய்ச்சியகத்தில் உருவாக்கப்படாமல், கதகதப்பான மனித இதயத்தில் உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த தடுப்பு மருந்து.

புதிய பெருநிறுவன மந்திரம்

படிப்படியான வளர்ச்சி என்பது பெருநிறுவன உலகத்தின் மந்திரமாகும்போது, எண்ணத்தில் மீள்திறனுடனும் செயலில் நெகிழ்வுத்தன்மையுடனும் இருக்கிற தலைவர்கள் நமக்குத் தேவைப்படுவார்கள். இதன் பொருள், வீட்டிலிருந்து பணிபுரிகிற வழக்கத்தைத் தொடர்தல், அழுத்தத்தைக் குறைத்தல், ஊக்கத்தைப் பெருக்குதல், மிகுந்த சாத்தியத்தைக் கொண்ட ஒரு வெற்றியாளரைப்போல் எல்லாரையும் உணரச் செய்தல்.

ஆடம்பர நிலைக்குப் பதிலாக, நாம் உயர்ந்த ஒளிர்நிலையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நம்முடைய பொருளாதாரக் கற்பனையை விரிவுபடுத்தவேண்டும், பொருளற்ற ஆடம்பரங்களை நிறுத்தவேண்டும்.

எளிமையின் ஆட்சி நடக்கட்டும்

சிக்கலான ஓர் உலகில் எளிமையால் உள் அமைதி, நிலைத்தன்மை மற்றும் நல்லிணக்கம் ஆகியவை கிடைக்கும்.

எளிமையில் நலனும் நல்வாழ்வும் உள்ளன. மிகுதியாக உண்பதும் உயர்ந்த அழுத்த நிலைகளும்தானே பல நோய்களுக்குக் காரணம்! சில எடுத்துக்காட்டுகள்:

- ★ அமிலத்தன்மை: வளமான உணவுகளைச் செரிக்க இயலாமலிருத்தல். பணி அழுத்தங்களைத் தாங்க இயலாமலிருத்தல்.
- ★ உயர் ரத்த அழுத்தம்: உப்பு மிகுந்த நொறுக்குத்தீனிகள். சினத்தை அல்லது மனக்கசப்பை கட்டுப்படுத்துதல்.
- ★ கொலஸ்ட்ரால் கொழுப்பு நிறைந்த உணவுகள். எல்லாவற்றையும் பிறரே நமக்குச் செய்து தருகிற உழைப்பில்லாத வாழ்க்கை முறை.
- ★ ஆஸ்துமா: மிகுதியாக உண்ணல்: அளவு முக்கியம். அமுக்கப்படுகிற அல்லது நிராகரிக்கப்படுகிற சோக உணர்வுகளால், நுரையீரல்கள் திணறடிக்கப் படுவதாக உணர்கின்றன.
- ★ நீரிழிவு: மிகக் கூடுதலான சர்க்கரை. வாழ்க்கையில் எந்த இனிமையும் உணரப்படாத நிலை.
- ★ சிறுநீரகக் கற்கள்: கால்சியம், புரதம் சேர்ந்துகொள்ளல். நச்சு எண்ணங்கள் தங்களுடைய வசதியற்ற உணர்வைக் காட்டும்வகையில் படிகமாகின்றன.
- ★ இன்ஃப்ளூயன்சா: வைட்டமின் C குறைபாடு, மிகுந்த எதிர்மறை எண்ணத்தால் வரும் அச்சம்.

நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களும் நலத்துடன், உயிருடன் இருப்பதற்கான நன்றி யுணர்வுடன் ஒவ்வொரு நாளை யும் தொடங்குங்கள். நலத்தை உருவாக்குங்கள், உங்களுடன் உரையாடுகிற எல்லாருக்கும் மகிழ்ச்சி யைப் பரப்புங்கள். சமூகத்தில் விலகியிருங்கள், உணர்வில் நெருங்கியிருங்கள். பொருள் சார்ந்த வாழ்க்கையில் அவசிய மானவற்றையன்றி எதையும் விரும் பாதீர்கள், ஏனெனில், ஆசைதான் உள்ளே மனக்கசப்பை வளர்க்கிறது. உங்களை மகிழ்ச்சிப் பாத்திரமாக ஆக்கிக்கொள்ளுங்கள், உங்களைச் சுற்றி அந்த மகிழ்ச்சியைத் தூவுங்கள்.

அக்கறையுடன் உடற்பயிற்சி செய்யுங்கள், மிகக் கூடுதலாகவும் வேண்டாம், மிகக் குறைவாகவும் வேண்டாம்: மிதிவண்டி ஓட்டுங்கள், நடைப்பயிற்சி செய்யுங்கள் அல்லது, 20–40 நிமிடங்களுக்கு ஒரே இடத்தில் நடங்கள்.

ஓர் உடல்-மன முதுகு

ஒரு புத்தகம் தன்னுடைய பக்கங்களை ஒழுங்கான அத்தியாய வரிசையில் கொண்டிருக்கவேண்டுமென்றால், அதற்கு ஒரு முதுகு தேவை. அதுபோல, நம்மை ஒன்றாக வைத்திருப்பதற்கு நமக்கு ஓர் உடல் முதுகு (ஓர் உடல்-அசைவு) மற்றும் ஒரு மன முதுகு (ஒரு கவனமான மனச்) செயல்பாடு தேவை.

உங்களுக்குத் தீவிரப் பதற்றப் பிரச்னை இருந்தால், உங்கள் அச்சத்தில் சுமார் 40 சதவிகிதத்தை உடற்பயிற்சி சரியாக்கிவிடும். அச்சம் வரும்போது, நியோ-கார்டெக்ஸ் அல்லது சிந்திக்கும் மூளை சூழ்நிலையை ஆராய்வதற்கு முன்னால் மூளையிலுள்ள அமிக்டலா என்ற இரண்டு தொகுப்பு நியூரான்கள்தான் முதலில் எதிர்வினையாற்றுகின்றன என்கிறார்கள் வல்லுனர்கள். இதனால், சிந்தனையை அச்சம் வீழ்த்திவிடுகிறது.

ஓர் எளிய பயிற்சியால் இதைச் சரி செய்து விடலாம்: மகிழ்ச்சி தரும் ஓர் இசையை ஒலிக்கவிடுங்கள், மெட்டுக்கேற்ப உங்கள் தலையை இரு பக்கங்களிலும் ஆட்டுங்கள். இதனால், மூளையிலிருக்கும் ஆற்றல் அதிரத்தொடங்குகிறது, மூளையைச் சுற்றிச் சுழலத்தொடங்குகிறது. இது, மூளையின் அமிக்டலா மற்றும் நியோ-கார்டெக்ஸின் செயல்பாடுகளைச் சமநிலைப் படுத்துகிறது. உள் சமநிலை உணர்வொன்று திரும்புவதை நீங்கள் உணரும்வரை அப்படித் தலையை ஆட்டுங்கள்.

கொரோனா வைரஸுக்கான ஒரு தடுப்பு மருந்து வேண்டும். இதனிடையே, ஊட்டம், தூய்மைப்படுத்தல், உடற்பயிற்சி மற்றும் ஓய்வின்மூலம் நம் உடல் மற்றும் மனத்தின் நோயெதிர்ப்பாற்றலை தொடர்ந்து வலுவாக்குவோம்.

கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply
Spritiual — You Are Naturally
Divine என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

Rotary News Subscription Remittances

You can pay the Rotary News/Rotary Samachar subscription online

Our Bank details:

Bank : HDFC Bank SB Account

Branch : Montieth Road Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

E mail us following details:

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

Rotary at a glance

Rotarians	:	1,181,103
Clubs	:	36,169
Districts	:	525
Rotaractors	:	177,330
Clubs	:	10,698
Interactors	:	342,953
Clubs	:	14,911
RCC	:	11,222

As on July 15, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

Membership Summary

As on July 1, 2020

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	*Interact Clubs	RCC
2981	117	5,037	269	51	39	225
2982	71	3,126	194	85	96	56
3000	130	5,353	484	188	256	212
3011	89	3,773	936	57	88	30
3012	107	3,842	945	54	71	59
3020	73	4,146	238	54	155	351
3030	95	5,293	773	115	169	302
3040	92	2,184	246	37	51	147
3053	64	2,833	502	19	39	103
3054	131	6,371	1205	83	143	524
3060	100	4,471	654	59	61	143
3070	106	3,159	463	47	20	59
3080	85	3,452	325	91	141	116
3090	79	2,170	80	38	5	122
3100	100	2,300	193	13	14	146
3110	135	3,800	351	29	7	105
3120	80	3,408	469	46	18	53
3131	139	5,333	1140	110	175	117
3132	86	3,442	361	33	81	158
3141	103	5,757	1397	120	135	92
3142	94	3,476	741	81	118	66
3150	93	3,566	367	59	123	117
3160	76	2,511	186	28	3	83
3170	132	5,835	796	81	198	169
3181	82	3,440	322	63	192	118
3182	83	3,108	248	49	96	98
3190	133	5,167	776	148	144	63
3201	145	5,710	490	107	72	52
3202	138	5,494	349	95	251	46
3211	144	4,570	309	8	24	132
3212	104	4,180	320	102	187	149
3231	97	3,917	460	52	78	392
3232	127	5,800	1125	129	194	93
3240	92	3,117	417	51	390	195
3250	102	3,839	666	67	65	185
3261	75	2,769	455	20	20	43
3262	107	3,756	454	48	37	77
3291	157	3,772	786	89	88	621
India Total	**3,963**	**153,277**	**20,492**	**2,606**	**4,044**	**5,819**
3220	71	1,950	278	83	124	73
3271	106	1,625	281	67	19	22
3272	150	1,714	296	51	15	43
3281	233	6,724	1139	244	46	198
3282	167	4,324	468	178	40	45
3292	126	5,051	804	133	115	116
S Asia Total	**4,816**	**174,665**	**23,758**	**3,362**	**4,403**	**6,316**

Source: RI South Asia Office

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

தரவு தனியுரிமை எச்சரிக்கை

கிளப் மற்றும் மாவட்ட கோப்பகங்களில் ரோட்டேரியன்களின் தனிப்பட்ட தரவு இருக்கலாம். நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

- கோப்பகங்கள் ஒருபோதும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படக்கூடாது அல்லது பொது மக்கள் அணுகக்கூடிய வலைப்பக்கங்களில் வெளியிடப் படக்கூடாது. டிஜிட்டல் கோப்பகங்கள் கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் அல்லது அணுகலுக்கான உள்நுழைவு தேவைப்பாடு இருக்க வேண்டும்.
- தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கும் போது, உங்கள் உறுப்பினர்களிடம் அவர்களின் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை முன்கூட்டியே தெரியப்படுத்துங்கள்.

பிராண்ட் சென்டரில் புதுப்பிக்கப்பட்ட தொடர்பு சொத்துக்களைப் பதிவிறக்கம் செய்க!

புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில், உள்நுழைவதன் மூலம் அல்லது உங்கள் மை ரோட்டரி அக்கவுண்ட்டில் பதிவு செய்வதன் மூலம் பிராண்ட் மையத்தை அணுகி, உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் புதிதாக திருத்தப்பட்ட ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

1. ரோட்டரியன்கள் இப்போது ரோட்டரி சேவையை ஊக்குவிப்பதற்கும், அவர்களது கதைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், பயிற்சிகளை நடத்துவதற்கும் தங்கள் கிளப் விளக்கக்காட்சிகளுக்கான 'ரோட்டரி பிராண்ட் சென்டரிலிருந்துசு புதுப்பிக்கப்பட்ட கருவியைக் கொண்ட ஒரு புதிய பவர்பாயிண்ட் டெம்ப்ளேட்டை, பல மொழிகளில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

2. புதிய டெம்ப்ளேட் ரோட்டரி அறக்கட்டளை பவர்பாயிண்ட் டெம்ப்ளேட் உட்பட பிராண்ட் சென்டரில் முந்தைய அனைத்து பவர்பாயிண்ட் பதிப்புகளையும் மாற்றுகிறது. ரோட்டேரியன்கள் அனைத்து கிளப் விளக்கக்காட்சிகளுக்கும் இந்த மறுவடிவமைப்பு செய்யப்பட்ட பவர்பாயிண்ட்டை பயன்படுத்த வேண்டும்.

ரோட்டரியின் பிராண்டை உருவாக்க உங்களுக்கு உதவ ஆவணம் அத்தியாவசிய தகவல்களை வழங்குகிறது. ரோட்டரியின் மாஸ்டர்பிராண்ட் கையொப்பம் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட மாஸ்டர்பிராண்ட் கையொப்பம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம், பல்வேறு புதிய கிளப் ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை வடிவமைக்கும்போது Rotary Voices எவ்வாறு எழுதுவது ரோட்டரியின் வண்ணத் தட்டுகளை எவ்வாறு பின்பற்றுவது ஆகியவற்றைப் புரிந்துகொள்ள இது உதவும்.■

தைபே மாநாடு

உயரமான கதை

ஹாங்க் சார்டின்

ஜூன் 12–16 நடைபெற வுள்ள 2021 ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்காக நீங்கள் தைபேயில் தங்கியிருக்கும்போது, 1,667 அடி உயரத்தில் நிற்கும், தைபே 101 கோபுரத்தை காணலாம். 2004ல் அந்தக் கோபுரம் திறக்கப்பட்ட போது, அது தான் உலகிலேயே மிகவும் உயரமான கட்டிடமாக இருந்தது, 2007ல் துபாயின் புர்ஜ் கலிஃபா அதனை முந்துகிற வரையில் அந்தப் பட்டம் அதனிடம் இருந்தது.

தைபே 101ன் வடிவமைப்பானது கலாச்சார முக்கியத்துவத்துடன் கூடிய வளம் வாய்ந்ததாகும். இதில் குடியேறியுள்ள தளங்கள், 101, பூரணத்துவத்துடன் தொடர்புடைய 100 என்ற எண்ணை விட ஒன்று சிறந்ததாகும். இந்தக் கோபுரத்தின் அடிப்பாகத்திற்கு மேலே உள்ள பகுதி எட்டு பிரிவுகளாகப் பிரிக்கப்

பட்டுள்ளது, ஒவ்வொரு பிரிவிலும் எட்டு தளங்கள் உள்ளன–எட்டு என்பது செழிப்பு மற்றும் நல்ல எதிர்காலத்துடன் தொடர்புடைய ஒரு விசேஷமான எண்ணாகும். அது அடுக்கப்பட்டுள்ள வடிவமானது, ஆசியா முழுவதும் ஒரு பாரம்பரிய கட்டிடப் பொருளாக விளங்கும், மேலும், சூறாவளிக் காற்று அல்லது ஒரு பூகம்பத்தின் போது கூட, நெகிழ்வான மற்றும் கட்டமைப்பு ரீதியாக ஒரு மூங்கில் தண்டைப் போல் நெகிழக்கூடியதாக இருக்கும் வகையில் இந்தக் கோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

89வது மாடியில், இணைக்கப்பட்ட ஒரு பொது ஆய்வகம் உள்ளது, 91வது மாடியில் உள்ள வெளிப்புற கண்காணிப்புத் தளத்திற்கு செல்லலாம். அந்த எண்ணம் உங்கள் தலையைச் சுற்றச் செய்தால், இன்னும் நீங்கள் கட்டிடத்தின் முற்றத்தில் உள்ள சொகுசு வணிக வளாகத்தை அனுபவிக்க இயலும். எந்தவொரு தைபே 101 கண்டிப்பாக பார்க்க வேண்டிய இடமாகும்.

Learn more and register at convention.rotary.org.

RC திருவாரூர் மிட்டவுன் — RID 2981
உலகம் முழுதும் பரவும் தொற்றுநோய்க்கு எதிராக நடந்துகொண்டிருக்கும் நிவாரணப் பணிகளின் ஒரு பகுதியாக காவல்துறையினர், துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் குழுவினர் உள்ளிட்ட கோவிட்டுக்கு எதிராக போராடும் முன்னணி வீரர்களுக்கு தினசரி அடிப்படையில் உணவு, கையுறைகள் மற்றும் முகமூடிகள் ஆகியவற்றை கிளப் உறுப்பினர்கள் வழங்குகிறார்கள்.

RC டெல்லி மயூர் விஹார் — RID 3012
இந்த கிளப், தஸ்தக் என்ற NGO உடன் இணைந்து, கடந்த 10 ஆண்டுகளாக ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்விக்கு ஆதரவளித்து வருகிறது. ரோட்டரியன்கள் சமீபத்தில் மாணவர்களுக்கு எழுது பொருள்கள் மற்றும் முகமூடிகளை விநியோகித்தனர்.

RC வைசாக் எலைட் — RID 3020
ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளுக்கு இடையில் நோயாளிகளை எளிதில் அழைத்துச் செல்ல மின்சார சக்கர நாற்காலியை கிளப் மருத்துவமனை அதிகாரிகளுக்கு நன்கொடையாக வழங்கியது.

RC நாக்பூர் கோட்டை — RID 3030
அந்தர்பாரதி பள்ளி மாணவர்களுக்காக மெட்ரோ ரயில் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த இந்த குழந்தைகளுக்கு இது ஒரு கனவு சவாரியாகும்.

செய்திகள்

RC ஹோஷங்காபாத் — RID 3040
உறுப்பினர்கள் தங்கள் கோவிட் நிவாரண முயற்சிகளின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சியருக்கு 40 PPE கருவிகளையும் 250 முகக்கவசங்களையும் நன்கொடையாக வழங்கினர்.

RC ஆல்வார் கிரேட்டர் — RID 3053
மகாவீர் ஜெயின் ஆஷாதலயாவுடன் இணைந்து நகரில் உள்ள மகாவீர் மார்கில் உள்ள பாபு பஜாரில் ஒரு பிசியோதெரபி மையம் திறக்கப்பட்டது. இந்த மையம் தலா ஒரு நபருக்கு ரூ.50 என்ற நியாயமான கட்டணத்துடன் அப்பகுதியிலுள்ள 50,000 பேருக்கு சேவைகளை வழங்கும்.

RC ஜெய்பூர் — RID 3054
ஒரு கை பொருத்துதல் முகாம் இச்சங்கம் நடத்தியது. 78 பேர்களுக்கு செயற்கை கைகள் பொருத்தப்பட்டன. புதிய கைகளை பயன்படுத்த வல்லுநர்கள் அடங்கிய குழுவால் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

RC வாத்வான் மெட்ரோ — RID 3060
சங்கம் தனது கோவிட் நிவாரண முயற்சிகளின் ஒரு பகுதியாக நகரத்தில் மூன்று இடங்களில் கை பயன்படுத்தத் தேவையில்லாத சானிடைசர்களை நிறுவியுள்ளது. இந்த சுகாதார வசதிகள் அப்பகுதிகளில் ரோட்டரியின் பொதுவான சமூக அந்தஸ்தை உயர்த்திக் காட்டியது.

RC கபுர்தலா எலைட் — RID 3070
கால் ஊனமுற்றோர்களுக்கு பயன்படும் வகையில் இச்சங்கம் சக்கர நாற்காலிகளை வழங்கியது.

RC டெஹ்ராடூன் சென்ட்ரல் — RID 3080
ரோட்டரி காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதோர் மையத்தில் மாணவர்களுக்கான விளையாட்டுகளைத் தொடர்ந்து கிளப் ஒரு குழுச்சிந்திப்பு அமர்வை ஏற்பாடு செய்தது. இந்த மையத்திற்கு முன்னாள் ஜனாதிபதி அதுல்குமார் ஒரு கணினியை அளித்தார்.

RC நாபா கிரேட்டர் நாபா — RID 3090
ரோட்டரி ஆண்டின் முதல் நாளான ஜூலை 1ஆம் தேதியைக் குறிக்கும் வகையில் சிவில் மருத்துவமனையில் ரத்த தான முகாம் நடைபெற்றது, ரோட்டேரியன்களும் பொதுமக்களும் சுமார் 43 யூனிட் ரத்தத்தை தானமாக அளித்தனர்.

RC கான்பூர் நார்த் — RID 3110
கான்பூர் ஒலிம்பிக் சங்கத்துடன் இணைந்து நான்கு நாள் ரோட்டரி கேல் மஹோத்ஸவா நடைபெற்றது. 1,300 விளையாட்டு வீரர்கள் கொண்ட சுமார் 70 அணிகள் பல்வேறு ஆட்டங்களில் பங்கேற்றன. PDG வினய் அஸ்தானா வெற்றிபெற்றவர்களையும் விளையாட்டில் மிக்கத் தேர்ந்தவர்களையும் பாராட்டினார்.

செய்திகள்

RC குஷிநகர் — RID 3120
ஊரடங்கு நாட்களில் இப்பகுதி மக்களுக்கு முகக்கவசங்கள், உணவுப் பொட்டலங்கள், சோப்புகள் மற்றும் ரேஷன் கிட்களை இந்த கிளப் விநியோகித்தது. ரேஷன் கிட்களில் 5 கிலோ அரிசி, சோயாபீன், கடுகு எண்ணெய், கிராம்பு, உப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தேவையான பொருட்கள் அளிக்கப்பட்டது.

RC புனே பார்வதி — RID 3131
ஒரு சேரி குடியிருப்பான சுதர்தராவில் உள்ள குடும்பங்களுக்கு முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டன. இதுபோன்ற இன்னும் பல முகக்கவசங்கள் பாதுகாவலர்கள், துப்புரவாளர்கள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்களுக்கு வழங்கப்பட்டன. மொத்தத்தில், 500 முகமூடிகள் கிளப்பினால் விநியோகிக்கப்பட்டன.

RC டோம்பிவ்லி இன்டஸ்ட்ரியல் ஏரியா — RID 3142
மஹிலா பால் கல்யாண் சமிதி மற்றும் மாநகராட்சி மன்றத்துடன் இணைந்து ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியில் சைபர் சட்டங்கள் குறித்த சொற்பொழிவு நடைபெற்றது. கருத்தரங்கின் மூலம் சுமார் 170 மாணவர்கள், 15 ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பயனடைந்தனர்.

RC பெல்தங்கடி — RID 3181
உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தாலுக் MLC பிரதாப் சிம்ஹா நாயக் மூலம் பல்வேறு பால் சங்கங்களுக்கு 3,000 மரக்கன்றுகளை சங்கம் விநியோகித்தது.

RC கொச்சின் பீச்சைட் — RID 3201
ஃபோர்ட் கொச்சியில் EM அரசு HS பள்ளியில் சங்கம் ஒரு ஸ்மார்ட் கணினி ஆய்வகம் அமைத்தது. கிளப்பின் தலைவர் சனல் குமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களை பள்ளி நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

RC தாராபுரம் — RID 3202
ஊரடங்கின் போது கொரோனா தொற்றுநோய் மற்றும் சவால்களை எதிர்கொண்டு சமாளிக்க கட்டுமான மற்றும் கிணறுதுளையிடும் பணியில் ஈடுபட்டுள்ள 50 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்களை வழங்கியது.

RC ஆலப்புழா ஈஸ்ட் — RID 3211
ஆலப்புழா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.10.5 லட்சம் மதிப்புள்ள உயர்தர ICU வென்டிலேட்டர் நிறுவப் பட்டது, கிளப்பின் தலைவர் டாக்டர் பினு மேத்யூ மாவட்ட கலெக்டர் A அலெக்சாண்டரிடம் உபகரணங்களை வழங்கினார்.

RC நாகர்கோவில் ப்ளாசம்ஸ் — RID 3212
ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் சிலை YMCA வளாகத்தில் உள்ள குழந்தைகள் பூங்காவில் நிறுவப்பட்டது. இந்நிகழ்ச்சியில் IPDG ஷேக் சலீம் மற்றும் DGN ஜசிந்தா தர்மா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

செய்திகள்

RC வேலூர் காஸ்மோஸ் —RID 3231
நாடு முழுவதும் கோவிட் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக கிளப் உறுப்பினர்கள் RISAO–க்கு ரூ. 40,000 நன்கொடை அளித்துள்ளனர். அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சேகரிக்கப்படும் நிதி RI சவுத்ஆசியா அலுவலகத்தால் PM CARES நிதிக்கு மாற்றப்படும்.

RC கரீம்கஞ்ச் — RID 3240
இந்தியா–பங்களாதேஷ் எல்லையில் பார்வையாளர்களுக்காக ஒரு காத்திருப்பு கொட்டகை கட்டப்பட்டது, திட்டத் தலைவர் சௌமியபிரதா தத்தாவின் முக்கிய பங்களிப்புடன் ரூ.5 லட்சத்திற்கும் அதிகமான செலவில் கிளப் உறுப்பினர்களால் இந்த வசதி வழங்கப்பட்டது. BSF இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரஃபுல்லா குமார் ரௌஷன் பார்வையாளர்களின் கொட்டகையை திறந்து வைத்தார்.

RC ராய்காட் ஸ்டீல் சிட்டி — RID 3261
ஒரு சிறப்பு பள்ளியின் காது கேளாத 40 குழந்தைகளுக்கு நான்கு வகுப்பறைகள் மற்றும் இரண்டு கழிப்பறை தொகுதிகள் கட்டப்பட்டன. தவிர, கிளப் அனைத்து வகுப்பறைகளுக்கும் டியூப்லைட்கள், ஃபேன்கள், மேசை – பெஞ்சுகள் மற்றும் கரும்பலகைகளை வழங்கியுள்ளது. இந்த ஹேப்பி பள்ளியில் மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டன மற்றும் ஊஞ்சல்கள் நிறுவப்பட்டன. இந்த திட்டத்திற்கு ரூ.5 லட்சம் செலவானது.

RC மத்திய கொல்கத்தா — RID 3291
நிபரன் ராய் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறையை உருவாக்கி, தர்கேஷ்வரில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளிக்கு தளபாடங்களை (மேஜை, நாற்காலி, பெஞ்சுகள்) கிளப் வழங்கியது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

முடக்கத்திலும் சில நன்மைகள் உண்டு...

TCA ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த சில மாதங்களாக, எல்லாரும் முடக்கத்தைப் பற்றிப் புகார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதனால் ஒரு நன்மையும் உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

சென்ற மாதம், எங்கள் மூத்த மகனுடைய மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்தது, ஆனால், அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி, அடுத்த பல மாதங்களுக்கு எங்களால் எங்கள் பேரனைக் காண இயலாது என்பதை உணர்ந்ததும் வெகுவாகப் பாதிக்கப் பட்டுவிட்டது. ஆனாலும், முடக்கத்தால் நன்மை உள்ளது என்று நான் கருதுகிறேன்.

அவற்றில் ஒன்று, எனக்கு மிகவும் பிடித்த ஒன்று, இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு, என் மனைவி திடீரென்று அக்கறையுள்ளவராக, இரக்க முள்ளவராக மாறிவிட்டார். இப்போதெல்லாம் எனக்குப் பிடித்த விஷயங்களையும் அவர் சமைக்கிறார்.

அடுத்து, கூரியர். முன்பெல்லாம் இந்தக் கூரியர் பணியாளர்கள் மீது நாங்கள் சினத்துடன் இருந்தோம்; ஏனெனில், எங்களுடைய மதியத் தூக்கத்துக்கு நடுவில், அழைப்பு மணியை அடிக்கிற பழக்கம் இவர்களுக்கு இருந்தது. இப்போது அந்தச் சினம் இல்லை. ஏனெனில், இப்போது கூரியர் பொட்டலங்கள் அனைத்தும் எங்கள் வளாகத்தின் நுழை வாயிலில் வழங்கப்படுகின்றன; மாலையில் அல்லது காலையில் அவை அனைவருக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆகவே, கூரியரில் வருகிற விஷயங்களை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். கத்தரிக்காய் உள்ளிட்ட பலவிதமான காய்கள் போன்ற அன்றாட விஷயங்களில் தொடங்கிப் புத்தகங்கள், இனிப்புகள், இன்னும் பலப்பல. அதே நேரம், இன்றைய கூரியர் என்பது, நேற்றைய தபால்காரரைப்போலதான். வரப்போகும் கடிதம் அல்லது பொட்டலத்துக்காகக் காத்திருப்பதில்தான் மகிழ்ச்சி உள்ளது.

இன்னோர் இனிய விஷயம், நெட்ஃப்ளிக்ஸ் மற்றும் பிற தளங்களில் இந்திய மொழித் திரைப்படங்களைக் கண்டறிதல். இந்த முடக்கத்துக்கு முன்னால், ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் இல்லாத எதையும் நான் பார்க்க எண்ணியிருக்கமாட்டேன். ஆனால் இப்போது, நான் கொரிய மொழி, ஜப்பானிய மொழிகளில் தொடங்கி, அஸ்ஸாமிய மொழி, ஒரிய மொழி, தமிழ், மலையாளம் மற்றும் வங்காள மொழிப் படங்களைக்கூடப் பார்க்கிறேன்.

ஏதாவது எனக்குப் பிடிக்கா விட்டால், சட்டென்று வேறு எதற்காவது மாறிவிடுகிறேன். திரையரங்குகளில் இதற்குச் சாத்தியமே இல்லை. நுழைவுச் சீட்டுக்காக (அத்துடன் சோளப் பொரிக்காகவும்) நிறையப் பணம் தந்துவிட்டோம் என்பதற்காகவே ஒருவர் கொடுமையான படங்களையும் உட்கார்ந்து பார்க்கவேண்டியிருக்கும்.

உண்மையில், திரையரங்கில் ஒரு படத்தைப் பார்க்கும்போது நான் தூங்கினேன் என்றால், என் மனைவிக்கு மிகவும் எரிச்சல் வரும். இப்போது, அந்தப் பிரச்னையே இல்லை. அவர் என்னை எழுப்பிக் காஃபிகூடக் கொடுக்கிறார்.

ஆனால், இதுபோன்ற அக்கறையான நடவடிக்கைகள் அவ்வப்போது கொஞ்சம் எல்லை மீறிவிடக் கூடும். சில நேரங்களில் நான் தூங்கியதும் அவர் அந்தப் படத்தை நிறுத்திவைத்திருப்பார், பின்னர் நான் எழுந்தவுடன், 'இப்போது அதை முழுமையாகப் பார்க்கவேண்டும்' என்று வற்புறுத்துவார்.

இவற்றையெல்லாம்விட முக்கியமாக, இந்த முடக்கத்தில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம், மக்கள் இல்லாமலிருப்பதுதான்.

நாள்தோறும் அதிகாலை 4:30லிருந்து 5மணிக்குள் நான் நடைப்பயிற்சி க்குக் கிளம்பிவிடுவேன்; பறவைகளெல்லாம் விழித்தெழுகிற நேரத்தில் ஒரு மணி நேரம் நடப்பேன். முதல் அரை மணி நேரம் யாரும் என்னோடு நடக்கமாட்டார்கள், ஆகவே, அது எப்போதும் மிகச் சிறந்த அனுபவமாக இருக்கும். ஆனால், பொழுது விடிந்ததும் எல்லாரும் வெளியில் வந்து விடுவார்கள். அந்த நேரத்தில் அவர்களுடன் பேசுவது எனக்குப் பிடிக்காது. எனக்குள் ஒரு நல்ல ஃபில்டர் காஃபி இறங்காதவரை நான் யாருடனும் பேச விரும்பமாட்டேன்.

ஆனால் இப்போது, எனக்கு அந்தப் பிரச்னையே இல்லை. காரணம், முகமூடிகள், சமூக விலகியிருத்தல். நான் அனைவரிடமிருந்தும் 15 அடி தள்ளி நிற்கிறேன்.

எங்கள் பேரன் எங்கள் வீட்டுக்கு வருவதற்குச் சில மாதங்கள் ஆகும் என்று எனக்குத் தெரியும். ஆனால், ஒரு கூரியருக்காக ஆவலுடன் காத்திருக்கிற நான், என்னுடைய முதல் பேரக்குழந்தைக்காகக் காத்திருக்கமாட்டேனா? அந்த உரிமை எனக்கு உண்டு.■

ரோட்டரி செய்தித் துளிகள்

பரோட்டா முகமூடிகள்

கொரோனா வைரஸிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முகமூடிகளை அணிய வேண்டிய தேவைபற்றிய விழிப்புணர்வை உண்டாக்கு வதற்காக, மக்களுடைய பரோட்டா விருப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறது மதுரையிலுள்ள ஓர் உணவகச் சங்கிலி.

இந்த உணவகம் முகமூடி வடிவத்தில் பரோட்டாக்களைச் செய்கிறது, இந்தப் பரோட்டாக்கள் இரண்டின் விலை ரூ.50 ஜூன் மாதத் தொடக்கத்தில் முடக்கம் தளர்த்தப்பட்டபோது இந்த உணவகம் சில நாட்கள் திறந்திருந்தது, அந்த நேரத்தில், முகமூடி இல்லாமல் இந்தக் கடைக்கு வந்த மக்களுக்கு இந்தப் பரோட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. அதன்பிறகு, இவை பெரிய அளவில் புகழ் பெற்றுவிட்டன, குறிப்பாக, குழந்தைகள் இவற்றை விரும்பிக் கேட்கிறார்கள்.

நடமாடும் திருமண மண்டபங்கள்

கோவிட் அச்சம் காரணமாகத் தமிழ் நாடு முழுவதுமுள்ள திருமண மண்டபங்கள் மூடப்பட்டிருந்த நேரம். அம்மாநிலத்தின் சிறு நகரங்களில் ஒன்றாகிய உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த அ அப்துல் ஹக்கீம் என்ற கலை வடிவமைப்பாளர் ஒருவர் "நடமாடும் திருமண மண்டபம்" ஒன்றை வடிவமைத்துள்ளார், அதன்மூலம் திருமணக் கொண்டாட்ட அனுபவத்தை வழங்குகிறார். அவர் ஒரு டிரக்கை ஒரு திருமண மேடையாக மாற்றியுள்ளார். திருமண வீட்டார் விரும்புகிற இடத்துக்கு இந்தத் திருமண மண்டபம் செல்கிறது. அரசாங்க விதிமுறைகளின்படி, 50 விருந்தினர்களுக்கான அமரும் ஏற்பாடுகளை இவரும் இவருடைய குழுவினரும் வழங்குகிறார்கள். விருந்தினர்களுக்கு முகமூடிகள், தூய்மைப்படுத்திகளும் வழங்கப்படுகின்றன.

அல்பைன் பனிப்பாறைகளிலிருந்து புதையல்கள்

அல்பைன் மலைகளிலுள்ள மாண்ட் ப்ளாங்க் பனிப்பாறை உருகுகிறது, பல சுவையான விஷயங்களை வெளிவிடுகிறது. இங்கிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள விஷயம், ஜனவரி 24, 1966ல் இச்சிகரத்துக்கு அருகில் நொறுங்கிய ஏர் இந்தியா போயிங் 707 பாம்பே-நியூ யார்க் விமானத்தில் இருந்திருக்கக்கூடிய தி இந்து, நேஷனல் ஹெரால்ட் மற்றும் தி ஸ்டேட்ஸ்மன் ஆகிய இந்தியச் செய்தித்தாள்களின் பிரதிகள்.

அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இந்தத் தாள்களை மூடிவைத் திருந்த பனிப்பகுதி உருகிய போது, ஆல்ப்ஸிலுள்ள பாஸ்ஸன்ஸ் பனிப்பாறையின் அருகில் கூபே-உணவகத்தை நடத்தும் டிம்மோத்தி மோட்டின் அவற்றை எதேச்சையாகப் பார்த்தார். இந்த விபத்திலிருந்து கண்டறியப்பட்ட பொருட்களை தொடர்ந்து திரட்டி, கூபேயில் அவற்றைக் காட்சிப்படுத்தியுள்ளார். இங்கு கண்டறியப்பட்டவற்றுள் மிகவும் வியக்கவைக்கிற விஷயம், இந்த விமான விபத்திலிருந்து வந்திருப்பதாக நம்பப்படுகிற விலைமதிப்புமிக்க கற்களின் பெட்டி.

கேமெராக்களை நேசிக்கும் புகைப்படக் கலைஞர்

புகைப்படக்கலைஞர், ரவி ஹொங்கல் கர்நாடகத்தின் பெல்காமில் புதிதாக வீடு கட்டியுள்ளார். தொழில் மீது அவருக்கு இருக்கும் பெரெஆர்வத்தை இது வெளிப்படுத்துகிறது. இந்த மூன்றடுக்குக் கட்டடம் DSLR கேமெராவைப்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது, இதற்குக் "க்ளிக்" என்று பெயரிடப்பட்டுள்ளது, கேமெராவின் வியூஃபைண்டரைப்போலவும், லென்ஸைப்போலவும் இதில் கண்ணாடிச் சாளரங்கள் உள்ளன. இக்கட்டடத்தில் ஓர் அகலமான படப்பட்டை, ஒரு நினைவக அட்டை போன்றவையும் உள்ளன. சுவர்கள், உட்பகுதிகளெல்லாம் புகைப்படக்கலையுடன் தொடர்புடைய படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஹொங்கல் தன்னுடைய மூன்று மகன்களுக்கும் கேனான், நிக்கான் மற்றும் எப்சான் என்று புகழ் பெற்ற கேமெராப் பிராண்ட்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார்!

ஆஸ்திரேலியாவிலிருந்து PM மோடியைத் தேடி வந்த சமோசாக்கள்

ஆஸ்திரேலிய PM ஸ்காட் மாரிசன் தன்னுடைய ட்விட்டர் கணக்கில் சமோசாக்களின் படமொன்றைப் பகிர்ந்தார். நாவில் எச்சில் ஊறவைக்கும் அந்தப் படத்துடன் அவர் எழுதியிருந்த குறிப்பு: மாம்பழச் சட்னியுடன் ஞாயிற்றுக்கிழமை ஸ்கொமோசா-க்கள், சட்னி உள்பட அனைத்தும் புதிதாகச் செய்யப்பட்டவை! இந்த வாரம் நான் narendramodiயைச் சந்திக்கிறேன், ஆனால், அது வீடியோ சந்திப்பு என்பது வருத்தம். இவை சைவச் சமோசாக்கள், இவற்றை அவருடன் பகிர்ந்துகொள்ள நான் விரும்பியிருப்பேன்.

இதற்கு PM மோடி ட்விட்டரில் பதிலளித்தார்: நாம் இந்தியப் பெருங்கடலால் இணைந்துள்ளோம், இந்தியச் சமோசா நம்மை இணைக்கிறது! சுவையான சமோசா, PM ScottMorrison MP! Covid-19க்கு எதிராக நாம் ஓர் உறுதியான வெற்றியைப் பெற்றதும், சேர்ந்து சமோசா உண்போம். 4ம் தேதி நம் வீடியோ சந்திப்பை எதிர்நோக்குகிறேன்."

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. TN/CCN/677/2019-2021 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

Not receiving your copy of Rotary News?

We at Rotary News Trust are trying our best at these challenging times to bring out *Rotary News* in time.

There is a huge disruption in postal services due to India locking down first in March, and several States continuing to lock down every now and then. Train movement has also been badly impacted. The result is a huge delay in many Rotarians across the country getting the magazine. That is why from the April 2020 issue onwards, we are sending complimentary e-version of the magazine to ALL Rotarians. But your print copies are also being sent.

As many of your club members are influential members of your communities, we request you to take the time and effort to lodge a strong complaint with your post office if you don't receive the magazine. At the same time, do write to us at ***rotarynews@rosaonline.org*** and tell us if you have not received the magazine.

Please avoid sweeping statements such as "nobody has received the magazine". When we do a cross-check, we often find only some members have missed getting their magazine.

You can reach our Subscription chief Senthil Kumar on ***senthil@rotarynewsonline.org***

You can also call 044-42145666, ask for the subscription person in charge of your district, and lodge a complaint.

Subscription in charge	Districts numbers
Kalpana *kalpana@rotarynewsonline.org*	2982, 3020, 3054, 3090, 3100, 3170, 3181, 3182, 3190, 3250, 3262
Sasikala *sasi@rotarynewsonline.org*	2981, 3012, 3110, 3120, 3141, 3142, 3201, 3211, 3212, 3261, 3291
Valli *valli@rotarynewsonline.org*	3000, 3030, 3060, 3070, 3080, 3131, 3132, 3232, 3240
Anuvarshini *anu@rotarynewsonline.org*	3011, 3040, 3053, 3150, 3160, 3202, 3231

But above all, make sure of the following:

1. You have paid your *Rotary News* dues to your club.
2. The club has sent the dues to Rotary News Trust.
3. Your name and full postal address, with the correct pincode, and preferably email and phone number, are given to us.